# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 05 திங்கட்கிழமை (20.06.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 206





09 இலங்கையைத் தனிமைப்படுத்தத் திட்டம்





14 ஜெனீவா - கட்டுநாயக்க முள்ளிவாய்க்கால்





21 திராவிட இனம் என்பதே இல்லை





25 பந்து வீச்சே ஆட்டத்தை தீர்மானிக்கும்


# இலங்கை மீது பொருளாதாரத் தடை; ஐ.நாவில் செப்ரெம்பரில் வரும் சாத்தியம்

கொழும்பு, ஜூன் 20

இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத் தடையை விதிப்பது தொடர்பாக ஐ.நா. ஆராய்ந்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் செப்ரெம்பரில் நடைபெறவிருக்கும் ஐ.நாவின் மனித உரிமைக் குழுவின் செயலமர்வின்போது இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படலாம் என்று கூறப்படுகின்றது.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிரான செயற்பாடுகளில் இலங்கை அரசு இறங்கியுள்ளது. பல்வேறு நாடுகளிடமும் தமக்கு ஆதரவு கோரி இலங்கை அரசுத் தரப்பு பிரதிநிதிகள் இராஜதந்திர விஜயங்களை மேற்கொண்டுவருகின்றனர். ஐ.நாவுக்கு எதிராகச் சில நாடுகளை அணி திரட்ட இலங்கை முயற்சிப்பதால், இலங்கையை வழிக்குக் கொண்டுவர இராஜதந்திர ரீதியான அழுத்தங்களை முன்னெடுக்கும் நிலைக்கு ஐ.நா. தள்ளப்பட்டுள்ளது. (27 ஆம் பக்கம் பார்க்க)

## மெனிக்பாமிலுள்ள ஒரு தொகுதி மக்கள் முல்லையில் வெள்ளியன்று மீள்குடியமர்வு

கொழும்பு, ஜூன் 20

வவுனியா மெனிக்பாம் நலன்புரி முகாமில் யுத்தத்தால் இடம்பெயர்ந்து தங்கவைக்கப்பட்டுள்ள ஒரு தொகுதி மக்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இவர்கள் நாளை மறுதினம் மற்றும் 24ஆம் 27ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ஏ. பத்திநாதன் தெரிவித்தார்.

இதன்படி, முல்லைத்தீவு (27 ஆம் பக்கம் பார்க்க)

## வலி.வடக்கின் எஞ்சிய பகுதிகளிலும் விரைவில் மக்கள் மீளக்குடியமர்வு

### தளபதி ஹத்துருசிங்க கூட்டமைப்பினரிடம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

வலி.வடக்கில் எஞ்சிய பிரதேசங்களிலும் மக்கள் விரைவில் மீளக்குடியமர்த்தப்படுவர்.

யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தளபதிக்கும் இடையில் நேற்று முன்தினம் யாழ். சிவில் அலுவலகத்தில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலி.வடக்கில் மீளக்குடியமரத் தற்போது ஒரு பகுதி அனுமதிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பகுதிகளிலும் விரைவாக மக்கள் (27 ஆம் பக்கம் பார்க்க)

## அளவெட்டித் தாக்குதலுக்கு முஸ்லிம் காங். கண்டனம்

கொழும்பு, ஜூன் 20

அளவெட்டியில் கூட்டமைப்பு பிரசாரக் கூட்டத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வன்மையாகக் கண்டிக்கிறது.

-இவ்வாறு அதன் செயலாளர் நாயகம் ஹசன் அலி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

(27 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவையும் விசாரிக்குக 'அல்ஜெசீரா' வலியுறுத்து

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) மீதும் மேற்கொள்ளப்பட வேண்டும் என 'அல்ஜெசீரா' தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

600 பொலிஸாரின் படுகொலை, சிறுவர்களை யுத்தத்தில் ஈடுபடுத்தியமை ஆகியவை தொடர்பாகவே அவரை விசாரிக்க வேண்டுமென அந்தத் தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. (ஐ-சி)

## ஜனாதிபதி அமெரிக்கா சென்றாலும் அவர் மீது நடவடிக்கை எடுக்கமுடியாது

### நீதிமன்ற அழைப்பாணை குறித்து சுகந்த கம்லத்

கொழும்பு, ஜூன் 20

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமெரிக்காவுக்குச் செல்வதைத் தடுக்கமுடியாது. சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரகடனத்தின்படி அரச தலைவர்களுக்கு விதிவிலக்கு உண்டு என நீதி அமைச்சின் செயலாளர் சுகந்த கம்லத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அமெரிக்க நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பி உள்ளது தொடர்பாகவே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

யுத்தத்தின்போது பாதுகாப்புப் படையினரால் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து முப்பது மில்லியன் டொலர்களை நஷ்ட ஈடாகக் (28 ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு அமைக்கப்பட்டாலும் கூட்டமைப்புடன் பேச்சு தொடரும்

### சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தகவல்

கொழும்பு, ஜூன் 20

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்கள் தொடர்ந்தும் இடம்பெறும் என்று அரசு அறிவித்துள்ளது.

அரசு - கூட்டமைப்புப் பேச்சுக்களில் பங்குபற்றும் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கப் போவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இந்தத் தெரிவுக்குழுவைப் பெரும்பாலும் இந்த வாரம் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நியமிப்பார் என அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(28 ஆம் பக்கம் பார்க்க)

## 500 முன்னாள் போராளிகள் இம்மாத இறுதிக்குள் விடுவிப்பு

### சுசந்த ரணசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 20

முன்னாள் போராளிகளில் மேலும் 500 பேர் இம்மாத இறுதியில் விடுதலை செய்யப்படவுள்ளனர் - என்று புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுசந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

விடுதலை செய்யப்படவுள்ளோரில் பெரும்பாலானோர் தொடர்ச்சியாக நோய்களால் (28 ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகாவை தூய்மையான அறையில் வைத்திருக்க வேண்டும்

### வைத்தியர்கள் அறிவுறுத்து

கொழும்பு, ஜூன் 20

வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை தூய்மையான அறையில் வைத்திருக்க வேண்டும் என்று வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர் என்று ஜனநாயகத் தேசிய முன்னணியின் நாடாளுமன்ற (28 ஆம் பக்கம் பார்க்க)

## சனல் 4 வீடியோ சர்வதேச ரீதியில் விவாதம் அரசின் பதிலில் உலகுக்குத் திருப்தியில்லை

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 20

சனல் 4 தொலைக்காட்சி ஊடாக ஒளிபரப்பப்பட்ட காணொளி தொடர்பில் சர்வதேச ரீதியாகத் தற்போது விவாதிக்கப்பட்டு வருகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சில நாடுகள் கேள்வியெழுப்பி வருகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும், குறித்த காணொளியின் உள்ளடக்கம் தொடர்பாக இலங்கை அரசு வெளியிட்டு வரும் மறுப்புகள் மற்றும் அடிப்படையற்ற ஆதாரம் என்ற அரசின் கருத்துக்களில் சர்வதேச சமூகத்துக்குத் திருப்தி யேற்பட வில்லை என்றும் (28 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வெப்பக் காலநிலை நிலவுவதற்கான சாத்தியமுள்ளது.

# யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று நாய்களுக்கு 'கருத்தடை' சத்திர சிகிச்சை

## 'மஹிந்த சிந்தனை'யின் கீழ் தெற்கு வைத்தியர்கள் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தில் திரியும் நாய்கள் பிடிக்கப்பட்டு, நேற்று விசேடமாக அமைக்கப்பட்ட சத்திரசிகிச்சைக் கூடத்தில் வைத்து 'கருத்தடை' சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டன.

மிருக சத்திர சிகிச்சை வைத்தியர்கள் மூவர் மற்றும் தாதியர் மூவர் அடங்கிய குழுவினர் இந்தச் சிகிச்சையை மேற்கொண்டனர். இவர்களுக்கு உதவியாக பயிற்றப்பட்ட நான்கு தொழிலாளர்களும் செயற்பட்டனர்.

சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட நாய்களை அடையாளங் காணும் பொருட்டு, அந்த நாய்களின் காதுச் சோணைகளில் துளை போடப்பட்டுள்ளதுடன் கழுத்தில் விசேட 'பிங்' நிற கழுத்துப் பட்டியும் அணிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தில் கட்டாக் காலி நாய்களின் 'படை' யால் நோயாளர்கள் மட்டுமன்றி பார்வையாளர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருமே பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாகி வந்தனர். இது குறித்து அடிக்கடி முறைப்பாடுகளும் வந்த வண்ணம் இருந்தன. இந்த நிலையில் 'மஹிந்த சிந்தனை' யின் அடிப்படையில் நாய்களை மலடாக்கும் நடவடிக்கை வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது.



யாழ். மாநகர முதல்வர், யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் ஆகியோரின் பணிப்பின் பேரில் யாழ். மாநகர சபை பிரதம பொது சுகாதாரப் பரிசோதகர் க.ஆ.ஜீவநாதன் தலைமையிலான குழுவினரின் அனுசரணையுடன் 'சுனாமி கால்நடை மக்கள் கூட்டமைப்பைச் சேர்ந்த டாக்டர்களான றொசான் பெர்ணாண்டோ, தமித்த மாபிட்டிய, மஞ்சுளா ஜயசிங்க ஆகியோர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர். கட்டாக் காலி நாய்கள் பிடிக்கப்பட்டு கொல்லப்படுவது முன்னர் இருந்த நடைமுறையாகும். ஆனால் தற்போது 'மஹிந்த சிந்தனை'யில் அது தடை செய்யப்பட்டுள்ளது என்பது தெரிந்ததே. (ஒ-149)

# ஜனாதிபதி நாடு திரும்பினார்

கொழும்பு, ஜூன் 20

ரஷ்யாவின் பீட்டர்ஸ்பேர்க் நகரில் நடைபெற்ற சர்வதேச பொருளாதார மாநாட்டின் ஆரம்ப வைபவத்தில் கலந்துகொள்ளச் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட தூதுக்குழுவினர் நேற்று நாடு திரும்பினர்.

மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ரஷ்ய ஜனாதிபதி டிமித்ரி மெத்வேதேவ், ஸ்பானிய பிரதமர் ஜோஸ் லூயிஸ் செப்டேரோ மற்றும் கசகஸ்தான் ஜனாதிபதி நூர்தல்தான் நயார்பயேவ் ஆகியோருடன் பேச்சு நடத்தினார்.

மனிதாபிமான நடவடிக்கையின் பின்னர் இலங்கையில் இன்றுவரை பெற்றுள்ள பொருளாதார வெற்றிகள் தொடர்பாகவும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பாகவும் ஜனாதிபதி அந்நாட்டுத் தலைவர்களுக்கு விளக்கமளித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த மாநாட்டில் கலந்துகொண்டமையால் இலங்கைக்கு அரசியல், பொருளாதார ரீதியில் பல நன்மைகளையும் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புகள் கிடைத்துள்ளன என ஜனாதிபதி செயலக ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)

# 2010 இல் இலங்கைக்கு வெளிநாட்டுக் கடன் 31,370 கோடி ரூபா

2010 ஆம் ஆண்டில் மட்டும் இலங்கை பெற்றுள்ள வெளிநாட்டுக்கடன் 31 ஆயிரத்து 370 கோடி ரூபா என்று நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு தெரிவிக்கிறது.

அந்தத் தொகையில் 10 ஆயிரத்து 180 கோடி ரூபா ஏற்றுமதிகள் தொடர்பான கடன்களைப் பெறப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக 2010 ஆம் ஆண்டில் நிதி வழங்கல்கள் என்ற ரீதியில் வெளிநாடுகளிடமிருந்து இலங்கைக்கு ஆயிரத்து 240 கோடி ரூபாய் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய ஜப்பான் அரசால் 4 ஆயிரத்து 380 கோடி ரூபாவும் சீனாவால் கடன் தொகையொன்றாக 8ஆயிரத்து 285 கோடி ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. ரஷ்யாவால் 3 ஆயிரம் கோடி ரூபாவும் இந்தியாவால் 4 ஆயிரத்து 830 கோடி ரூபாவும் ஆஸ்திரேலியாவால் ஆயிரத்து 50 கோடி ரூபாவும் பிரான்ஸால் 160 கோடி ரூபாவும் ஈரானால் ஆயிரத்து 110 கோடி ரூபாவும் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது என்று நிதியமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-22)

# திருமலையில் மீண்டும் பதிவு நடவடிக்கை

திருகோணமலை, ஜூன் 20

திருகோணமலை நகரில் படையினரும் பொலிஸாரும் இணைந்து பதிவு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் வீடுவீடாகச் சென்று குடும்ப அட்டைகளை பரிசோதனை செய்த படையினர் புதியவர்கள் யாராவது வந்துள்ளனரா எனக் கேட்டறிந்தனர்.

புதியவர்கள் யாராவது வந்திருந்தால் 'எதற்காக வந்தீர்கள்' என்று படையினர் கேள்வி எழுப்பினர்.

ஏற்கனவே படையினர் இத்தகைய தேடுதல்களை நடத்தியிருந்தனர். நிறுத்தப்பட்ட அந்த நடவடிக்கைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஒ-ஐ)

# காரைநகருக்கான பஸ்சேவைகள் சீரின்மையால் மக்கள் பெரும் அவதி

காரைநகர், ஜூன் 20

இலங்கைப் போக்குவரத்துச் சபை காரைநகர் சாலையால் நடத்தப்படும் பஸ்சேவை ஒழுங்கீனமாகவும் தாமதமாகவும் இடம்பெறுவதனால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, சேவையில் ஈடுபடும் பஸ்கள் போட்டி போட்டு வேகமாக வாகனத்தை செலுத்துகின்றனர். சில சாரதிகள் தொலைபேசியில் உரையாடிக்கொண்டு வாகனத்தை செலுத்துகின்றனர். இதனால் பயணம் செய்வோர் பெரும் அச்சத்துடன் பயணிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை காரைநகர் சாலை பிரதிநிதி கருத்துக் கூறுகையில்:

ஐந்து பேருந்துகள் நின்றும் அவற்றுக்கான சாரதி, நடத்துநர் இன்மையால் அவற்றை சேவையில் ஈடுபடுத்த முடியாது உள்ளது.

சேவைகள் ஒழுங்கீனம் எனவும் காலம் தாழ்த்துவதாகவும் பயணிகளால் தெரிவிக்கப்படுகின்றது. ஆளணிப் பற்றாக்குறையால் சீரான சேவையை வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது.

தற்போது இரண்டு புதிய பஸ்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவை கொழும்பு - காரைநகர் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது- என்றார். காரைநகர் ஒருங்கிணைப்புக் கூட்டத்திலேயே இந்த விடயம் குறித்து கலந்துரையாடப்பட்டது. (ம-250)

# கசூரினா கடற்கரைப் பகுதியிலுள்ள மீனவரின் வாடிகளில் 'காதல் ஜோடிகள்'

## தடுத்தால் போதையில் சண்டித்தனம்

காரைநகர் கசூரினா கடற்கரைக்கு வரும் காதல் ஜோடிகள், அங்கு அமைக்கப்பட்டுள்ள மீனவர்களின் வாடிகளை ஆக்கிரமித்து அங்கு அத்துமீறி நடந்து கொள்கின்றனர்.

அதேசமயம் அங்கு கூடும் 'பெருங்குடி' மக்கள் அங்கு அநாகரிகமாக நடந்துகொள்கின்றனர். மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தால் சினிமாக் கதாநாயகர்களாக மாறி, அடிதடிக்கு வருகின்றனர். அதுமட்டுமன்றி மீனவர்களின் பல லட்சம் ரூபா பெறுமதியான வலைகள், வள்ளங்களைச் சேதப்படுத்தியும் வருகின்றனர்.

இவ்வாறான நடவடிக்கைகளால் மீனவர்களின் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறது. இது குறித்துப் பல்வேறு தரப்பினருக்கும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ள போதும் எதுவித முன்னேற்றமும் இல்லை என்று மீனவர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

கசூரினா கடற்கரையில் உல்லாசப் பயணிகளுக்கான இடம் குறித்தொதுக்கப்பட்டுள்ள போதிலும் அந்தப் பகுதி சரியாக அடையாளப்படுத்தப்படாமையால் அங்கு வருபவர்கள் மீனவர் தொழில் செய்யும் பகுதிகளுக்கும் பிரவேசிக்க நேரிடுகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடற்கரைக்கு வருபவர்கள் வெற்று மதுப் போத்தல்கள், பொலித்தீன் பைகள் மற்றும் குப்பைகூழங்களைக் கண்டபடி வீசிவிட்டுச் செல்வதால் சூழல் பெரிதும் மாசடைந்து வருகிறது என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. (ஒ-250)

# நிகழ்வுகள்

### விழிப்புணர்வுக் கருத்தரங்கு

சுகாதாரத் திணைக்களத்தின் போசாக்கு மாதத்தையொட்டி சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் விசேட போசாக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கையும் போசாக்கு கலை நிகழ்வுகளையும் இன்று பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோயில் வீதியிலுள்ள தென்மராட்சிக் கலை மன்ற கலாசார மண்டபத்தில் நடத்தவுள்ளனர். அனைத்து மக்களையும் கலந்துகொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் ஒலிபெருக்கி மூலம் அறிவித்துள்ளனர். (ம-207-313)

### நூல் வெளியீட்டு விழா

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வணிக மாணவர் மன்றத்தினால் 'வணிக மேதை' என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு வணிக மன்றத் தலைவர் கு.மிதுலன் தலைமையில் பாவலர் துரையப்பா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் க.தேவராசா நூலை வெளியிட்டு வைக்கவுள்ளார். (ம-86)

### முத்தமிழ் விழா

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் முத்தமிழ் விழா நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் க.சந்திரசேகரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ்மாறன், தொழிலதிபர் இ.ச.பே.நாகரத்தினம் ஆகியோர் கலந்துகொள்வர். (ம-313-28)

### நாடக விழா


கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சும் கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து மாவட்ட கலாசார சபைகளின் வளர்ச்சிக்காக எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமையும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நாடகவிழாவை நடத்தவுள்ளன.

திருமறைக் கலாமன்றத்தின் ''அற்றைத் திங்கள்'', யாழ்.நாட்டார் கழகத்தின் ''பூதத்தம்பி'' ஆகிய கூத்துரு நாடகமும் வரலாற்று இசை நாடகமும் இதில் இடம்பெறவுள்ளன. யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இந்த விழா இடம்பெறவுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே கிணற்றில் இரு ஆண்களின் சடலங்கள் திருகோணமலையில் நேற்றுப் பெரும் பரபரப்பு!





திருகோணமலை வடக்கு, கோபாலபுரம் பகுதி கிணறொன்றில் இருந்து இரு ஆண்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பிரதேசவாசிகளால் குச்சவெளி பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்தே இவ்விரு சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன.

கோபாலபுரத்தைச் சேர்ந்த சுந்தரம் கேதீஸ் (வயது 25) மற்றும் எஸ்.சஞ்சித்குமார் (வயது 14) ஆகிய இருவரது சடலங்களே மேற்படி கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

இவர்கள் இருவரும் குறித்த கிணற்றில் குதித்து தற்கொலை செய்துகொண்டார்களா? அல்லது இனந்தெரியாதோரால் கொலை செய்யப்பட்டு கிணற்றில் போடப்பட்டார்களா? என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பத்துள்ளனர். சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் இரண்டும் பிரேத பரிசோதனைகளுக்காகத் திருகோணமலை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## கட்டுநாயக்காவில் ஒருவர் கைது

சட்டவிரோதமான முறையில் சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தாள்களுடன் சிங்கப்பூர் நோக்கிப் பயணிக்கவிருந்த இலங்கையர் ஒருவரைக் கட்டுநாயக்கா விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இதில் இந்தியா, அமெரிக்கா மற்றும் சவூதி அரேபியா போன்ற நாடுகளின் நாணயத் தாள்கள் உள்ளடங்குகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இணையச் செய்திகள்

## ஆர்செனிக் நஞ்சு விவகாரம்; அமைச்சர் ஏமாற்றப்படுகிறாராம்!

ஆர்செனிக் நச்சுப்பொருள் கலந்துள்ளதாகக் கூறப்படும் பீடை நாசினிகள் குறித்த விசாரணை தொடர்பாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை அதிகாரிகள் சிலர் ஏமாற்றி வருகின்றன என அரசின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான தேசிய சுதந்திர முன்னணி இன்று குற்றஞ்சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் அந்தக் கட்சியின் அரசியல் குழு அங்கத்தவரான பயசிறி விஜேநாயக்க இது தொடர்பாக தெரிவிக்கையில்-

சர்வதேச கம்பனிகளின் நிகழ்ச்சிநிரலுக்கு ஏற்ப செயற்படும் விவசாயத்துறை சார்ந்த சில அதிகாரிகளால் விவசாயத்துறை அமைச்சர் ஏமாற்றப்படுகின்றன என்று கூறினார்.

இந்தப்பீடை நாசினிகளில் ஆர்செனிக் கலந்துள்ளதாகச் சுங்கத்துறையினர் உறுதிப்படுத்தியுள்ளனர் இந்த நிலையில் இது தொடர்பாக முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் விஜேநாயக்க கூறினார்.

## விகாரையில் வெடித்தது பெரஹரா பட்டாசு 26 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில்

பெலியத்த பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியிலுள்ள ஸ்ரீசுதர்சனராம விகாரையின் கொங்கிறீட் தளமொன்றில் வைக்கப்பட்டிருந்த பட்டாசுகள் திடீரென வெடித்ததால், அந்த கொங்கிறீட் தளம் உடைந்து வீழ்ந்து 26 பேர் காயமடைந்துள்ளனர். விகாரையின் ஒரு பகுதியும் பலத்த சேதத்துக்குள்ளானது.

குறித்த விகாரையில் கடந்த சனிக்கிழமை வருடாந்தப் பெரஹரா நடைபெற்ற வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பெரஹராக் கொண்டாட்டங்களுக்காக பெருமளவில் பட்டாசுகள் விகாரையின் கீழ்த் தளத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. இந்தப் பட்டாசுகளில் திடீரெனத் தீப்பிடித்துக் கொண்டதாலேயே இந்த அனர்த்தம் நேர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த 26 பேரும் உடனடியாக ஹத்போதிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் இவர்களில் 8 பேர் மாத்தறை பொதுவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். அதேவேளை, 9 பேர் தங்காலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மூவர் சிகிச்சையின் பின் வீடு திரும்பியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பெலியத்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பாலியல் குற்றங்களை விசாரிக்க ஜோர்தானுக்கு இலங்கைக் குழு

ஜோர்தானிலுள்ள ஆடைத் தொழிற்சாலையில் முகாமையாளர்கள் சிலரால் இலங்கைப் பெண்கள் பலர் கடந்த பல மாதங்களாகப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர் என்று வெளியான செய்திகள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு இருவர் கொண்ட குழுவொன்றை இலங்கை அரசு ஜோர்தானுக்கு அனுப்பியுள்ளது.

ஜனாதிபதியின் விசேட புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த உதவி அத்தியட்சகர் ஒருவரும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் சார்பில் பெண் உத்தியோகத்தர் ஒருவரும் ஜோர்தானுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.

பாலியல் குற்றங்கள் தொடர்பாக இதுவரை ஊழியர்களிடமிருந்து எவ்வித முறைப்பாடும் கிடைக்கவில்லை. எனினும் அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட உலக தொழிலாளர் மற்றும் மனித உரிமைகளுக்கான நிறுவகத்தின் அறிக்கையைத் தொடர்ந்து, ஊடகங்களில் வெளியான செய்திகளையடுத்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணைக்குழுவின் அறிக்கைக்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் கிளஸிக் குறூப்பைச் சேர்ந்த குறித்த ஆடைத்தொழிற்சாலையில் இந்தக் குற்றச்செயல்களில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் சந்தேக நபர்கள் சக நாட்டவர்களான இலங்கையர்களும் இந்தியர் ஒருவருமே எனவும் அவர் கூறினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.கிழக்கில் இடம்பெற்ற ஆயுள்வேத மருத்துவ முகாம்




கோப்பாய்,ஜூன் 20

வலி.கிழக்கு ஆயுள்வேத பாதுகாப்பு சபையும் வலி.கிழக்கு பிரதேசசபையும் இணைந்து இலவச சுதேச மருத்துவ முகாம் ஒன்றை நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையில் ஆயுள்வேத பாதுகாப்புச் சபைத் தலைவர் மருத்துவர் வ.அனவரதன் தலைமையில் நடத்தின.

இதில் சித்த, ஆயுள்வேத, அக்குபங்சர், முறிவுநெரிவு, குழந்தை மருத்துவம் ஆகிய சேவைகள் தனித்தனியாக வழங்கப்பட்டன.

இந்தச் சேவையில் யாழ்.பல்கலைக் கழக சித்த மருத்துவதுறை விரிவுரையாளர்கள், மருத்துவ மாணவர்கள், இந்தப் பிரதேச பாரம்பரிய சிறப்பு மருத்துவர்கள் ஆகியோர் என இணைந்து ஒருங்கிணைந்த சேவையை வழங்கினர்.

இதில் வலி.கிழக்குப் பிரதேச செயலர் கருத்துத் தெரிவிக்கையில்:

சித்தமருத்துவம் தமிழர்களின் பாரம்பரியம் ஆகும். அந்தவகையில் எமது பண்பாட்டை வெளிப்படுத்தும் ஒரு முக்கிய துறையாகும். இதனடிப்படையில் பண்டைய காலத்தில் சித்த மருத்துவம் பிரபல்யம் பெற்றிருந்தது. பல்வேறு அபூர்வ மூலிகைகள் நோய்களை உடனடியாகத் தணித்ததுடன் மந்திரங்களும் சேர்ந்ததாக இருந்தது.

இவற்றை உரிய முறையில் பயின்று தகுந்த மருத்துவ முறைகளைக் கையாள எமது சித்த மருத்துவர்கள் மேலும் கூடுதல் ஆர்வம் செலுத்த வேண்டும்.- என்றார். (ம-72)

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை குறைப்பதற்கு கவனயீர்ப்புப் போராட்டம்

## இன்று யாழ்.பேருந்து நிலையத்தில்

யாழ்ப்பாணம்,ஜூன் 20

நல்லூர் மனித உரிமைகள் இல்லத்தின் ஏற்பாட்டில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் குறைப்பதற்கான கவனயீர்ப்புப் போராட்டம் இன்று திங்கட்கிழமை யாழ்.பேருந்து நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலமாகப் பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்த வண்ணமே உள்ளன.

இவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் செட்டித்தெரு நல்லூர், யாழ்ப்பாணத்திலுள்ள மனித உரிமை கள் இல்லத்தால் இந்தப் போராட்ட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன், ஐந்து மாதங்களில் யாழ்.மாவட்டத்தில் 50 தற்கொலைச் சம்பவங்களும், 18 கொலைகளும், 5சிசுக் கொலைகளும் 15 சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இத்தகைய வன்முறைச் சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் தடுக்கப்பட வேண்டும். வன்முறைகளில் ஈடுபடுபவருக்கு உரிய தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். குற்றவாளி உடனடியாக இனங்காணப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டம் நடத்தப் படவுள்ளது.

வாயைக் கறுப்புத் துணியால் கட்டி பதாகைகள் ஏந்தியவாறு போராட்டத்தில் கலந்து கொள்வர்.

இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்துக்கு ஆர்வமுடைய பெண்கள் மற்றும் மகளிர் அமைப்பின் குழுக்கள் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (ம-313)

# காரைநகர் வெளிச்ச வீட்டைப் புனரமைக்கக் கோரிக்கை

காரைநகர், கோவளம் வெளிச்ச வீட்டைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். வடக்கில் உள்ள மிக உயரமான வெளிச்ச வீடுகளில் ஒன்றாகக் காணப்படும் இந்த வெளிச்ச வீடு நூற்றுக்கணக்கான மீனவர்களுக்கு வழிகாட்டியாகவும் அமைகின்றது.

எனவே, பழமை வாய்ந்த இந்த வெளிச்ச வீட்டை விரைவில் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காரைநகர் பிரதேச மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-250)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சோதிலிங்கம் ஈஸ்வரி

(முன்னாள் பணியாளர், நல்லூர் ப.நோ.கூ.சங்கம்)



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோதிலிங்கம் ஈஸ்வரி கடந்த (18.06.2011) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், நாகலிங்கம் சோதிலிங்கத்தின் (முன்னாள் பிரதம எழுதுநர்- யாழ். மாநகரசபை) அன்பு மனைவியும் இலட்சுமிகாந்தன் (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் - மானிப்பாய் பிரதேசசபை), ஜெயகாந்தன் (பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, நல்லூர்), பத்மகாந்தன் (நில அளவையாளர் - நுவரெலியா) ஆகியோரின் பாசமிகு தாயும், சசிகலா (ஆசிரியை, கலைமகள் சர்வதேச பாடசாலை - கொக்குவில்), சிவசக்தி (ஆசிரியை, யாழ்/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை), சிவகாமி (எழுதுநர் - மக்கள்வங்கி பல்கலைக்கழக கிளை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் லோசிகன், கிருதிகா, கார்திகன், ஜெயராகவன், சகானா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற சிவகாமசுந்தரி மற்றும் தையல்நாயகி, சிவஞானசுந்தரி நடேசசுந்தரி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.06.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணியளவில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பகர்கள்அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**மடத்தடி ஒழுங்கை
திருநெல்வேலி வடக்கு.** (5020)
குடும்பத்தினர்.

## மயில்வாகனம் சண்முகலிங்கம்

*[முன்னாள் வரைபட பொறியியலாளரும், மேற்பார் வையாளரும்- கட்டடத் திணைக்களம், பகுதிநேர ஆங்கில ஆசிரியர் - மகேஸ்வரி வித்தியாசாலை]*



இல. 78, கனகரத்தினம் வீதி, அரியாலையைப் பிறப் பிடமாகவும் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சண்முகலிங்கம் 16.06.2011 வியாழக் கிழமை அமெரிக்கா வில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மகாராணியின் அன்புக் கணவரும், அமெரிக்காவில் வசிக்கும் ராதிகா, பமிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயந்தன், வசந்தன் ஆகியோரின் அன்பு மாமனும், சஹானா, ஹரிணி, பூஜா ஆகியோரின் அன்புப் பேரனும், சீதாலட்சுமி, அதிஷ்டலட்சுமி (லண்டன்), குமாராணி, கமலாதேவி, மகாலிங்கம் (லண்டன்), விஜயலட்சுமி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற ஆனந்தசுந்தரம் மற்றும் கருணாகரன் (லண்டன்), மகாதேவன், குமாரசாமி (கனடா), செல்வமலர் (லண்டன்), அரவிந்தன், ஜெயராணி (கனடா), கமலாதேவி, ஜெகநாதன் (அமெரிக்கா), கேசவநாதன் (அமெரிக்கா), ஸ்ரீதரன் (அமெரிக்கா), ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அமெரிக்காவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 80,
கனகரத்தினம் வீதி,
அரியாலை.** (5021) (45-20-25)
தகவல்
குடும்பத்தினர்.

# உழவு இயந்திரத்திலிருந்து தவறி வீழ்ந்து காயம்

தென்மராட்சி, ஜூன் 20

உழவு இயந்திரத்தில் அமர்ந்து பயணித்தவர் தவறி வீழ்ந்து காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பளையில் இடம்பெற்றது.

பளை வண்ணாங்கேணியைச் சேர்ந்த இராசரத்தினம் மதிவதனன் (வயது-25) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, மரக்கிளைகள் தறிக்கும் பணியில் ஈடுபட்ட குடும்பஸ்தர் தவறிவிழுந்ததில் கால் முறிந்தது. இந்தச் சம்பவம் நேற்றுக் கைதடியில் இடம்பெற்றது.

கைதடிச் சந்தியைச் சேர்ந்த பண்டாரி கணேசன் (வயது-48) என்பவரே கால்முறிந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளார். (ம-313-207)

# போக்குவரத்து விதிமுறைகளை மீறிய இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

கைத்தொலைபேசியில் உரையாடிக் கொண்டு மோட்டார் சைக்கிளில் சென்ற உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த இருவருக்கு யாழ்.நீதிமன்றம் 7 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

போக்குவரத்து விதிமுறைகளை மீறி இவ்வாறு செயற்பட்ட பிரஸ்தாப நபர்கள் இருவரையும் கோப்பாய் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து கடந்த வியாழக்கிழமை இவர்களை யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது ஒருவருக்கு 4 ஆயிரம் ரூபாவும் மற்றையவருக்கு 3 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்தது. (எ-14)

ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 132
திகதி - 18.06.2011
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து T | அதிர்ஷ்ட இலக்கம் 10 | வெற்றி இலக்கம் 8 7 4 9 8

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | T | 10 | 8 | 7 | 4 | 9 | 8 | ரூ. 20,039,298.00 | பரிசு - |
| 1 பரிசு | | 10 | 8 | 7 | 4 | 9 | 8 | ரூ. 2,000,000.00 | பரிசு - |
| 2 பரிசு | | | 8 | 7 | 4 | 9 | 8 | ரூ. 100,000.00 | பரிசு 03 |
| 3 பரிசு | | | | 7 | 4 | 9 | 8 | ரூ. 10,000.00 | பரிசு 28 |
| 4 பரிசு | | | | | 4 | 9 | 8 | ரூ. 1,000.00 | பரிசு 300 |
| 5 பரிசு | | | | | | 9 | 8 | ரூ. 50.00 | பரிசு 3014 |
| 6 பரிசு | | | | | | | 8 | ரூ. 20.00 | பரிசு 28990 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 8 | 7 | 4 | 9 | | ரூ. 1,000.00 | பரிசு 30 |
| 8 பரிசு | | | 8 | 7 | 4 | | | ரூ. 100.00 | பரிசு 307 |
| 9 பரிசு | | | 8 | 7 | | | | ரூ. 50.00 | பரிசு 3023 |
| 10 பரிசு | T | | | | | | | ரூ. 20.00 | பரிசு 12029 |
| 11 பரிசு | T | 10 | | | | | | ரூ. 100.00 | பரிசு 1326 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரு. 2,195,530.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ.20,541,413.00

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணுலகில்
17 ★ 10 ★ 1927



விண்ணகத்தில்
21 ★ 05 ★ 2011

அமரர்

*கதிர்காமசேகரம்பிள்ளை பூபாலசிங்கம்*
*(ஐயா)*

அன்புத் தெய்வமே! அரும் துணையே!
இன்பமொடு எம்முடன் வாழ்ந்தவரே!
துன்பம் சுமக்கவிட்டு - நொடிப்பொழுதில்
எமைப் பிரிந்து போனதெங்கே?

*'துரை வீதி,
இணுவில் தெற்கு,
இணுவில்.* (5008) (27-45)
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மாறிவரும் தெற்கின் அரசியல் வியூகம்

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் பொருட்டு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்கும் திட்டம் அரசாங்கத் தரப்பில் வலுப்பெற்று வருவதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் அக்கறையுடன் பேசிக் கொள்ளப்படுகின்றது.

புதிய நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிக்கும் தமது முடிவை - அரசாங்கத் தரப்பின் ஏகமனதான முடிவை - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தமாதம் இரண்டாவது வாரத்தில் கொழும்பு வந்திருந்த இந்திய உயர்மட்டத் தூதுக் குழுவிடம் தெரிவித்திருந்ததும்-

அதனால் ஏமாற்றம் அடைந்த இந்தியத் தூதுக்குழுவின் தலைவரும் அந்த நாட்டின் பாதுகாப்புத்துறை ஆலோசகருமான சிவ்சங்கர் மேனன், தமிழ்த் தரப்பை அரசுடன் பேசி, ஒரு முடிவுக்கு வருமாறும், தாம் ஒரு வெளிநாடு என்ற வகையில் இந்த நாட்டு அரசிடம் இடித்துரைக்க முடியாது என்று கூறிச் சென்றதும் - கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்துக்கும் அதிகமாக வழங்குவதற்கு இலங்கை அரசைச் சம்மதிக்க வைக்கலாம் என்று முன்னர் ஒரு கட்டத்தில் இந்தியத் தரப்புக் கூறியது, ஜனாதிபதி ராஜபக்ஷவின் மூதவை அல்லது இரண்டாவது சபை என்ற கோட்பாட்டையே என்பது இப்போது தெரியவந்துள்ளது - கசிந்துள்ளது.

13 ஆவது திருத்தத்தில் உள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை எந்தச் சந்தர்ப்பத்திலும் மாகாண சபைகளுக்கு வழங்கமாட்டோம் என்றும் ஜனாதிபதி இந்திய உயர்மட்டக் குழுவிடம் முகத்தில் அறைந்தது போன்று திட்டவட்டமாக அடித்துக் கூறியிருந்தார். அது தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்குத் தலைமேல் விழுந்த அடியாகும்.

ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் அப்போதைய இந்திய அரசின் அழுத்தத்தின் பேரிலேயே கொண்டுவரப்பட்டது என்றும், இலங்கை போன்ற சிறிய நாட்டுக்கு அது தேவையற்றது, பொருத்தமற்றது என்ற புதிய கருத்தோட்டமும் தென்னிலங்கையில் இப்போது முகிழ்த்து வருகின்றது. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிக்க அரசு முடிவு செய்துவிட்ட இந்த வேளையில், இந்தப் புதிய கருத்து தமிழர்களை இரண்டாந்தரப் பிரசைகளாக நிரந்தரமாக வைத்திருப்பதற்கான புதிய சூழ்ச்சியே.

ஜே.ஆர். ஜெயவர்த்தனா காலத்தில் கொண்டுவரப்பட்டுப் பின்னர் கைவிடப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபை முறையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வந்தாலும் பரவாயில்லை. இலங்கை போன்ற சிறிய நாட்டில் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது அவசியம் தானா என்றும் குழப்பம் காய்ச்சும் கருத்துக்களும் தெற்கில் மேலெழுந்து வருகின்றன.

ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தம் என்பது இந்திய அரசு தனது பலத்தைப் பயன்படுத்தி இலங்கை மீது திணித்த ஒன்று. அதனூடாக இந்தியாவினால் வனையப்பட்ட மாகாண சபைத் திட்டமும் இந்த நாட்டுக்குப் பொறுத்தமற்றது. ஆகையால், அரசமைப்புச் சட்டத்துக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை முற்றாக சட்டப்புத்தகத்தில் இருந்து நீக்கி விட வேண்டும். போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டதால், அதனைத் தூக்கி வீசுவதற்கு இக்காலம் பொருத்தமானது என்ற முனைப்பும் அங்கு எழுவதற்கு இடமுண்டு; அதுவும் தெற்கு மக்களிடம் தூண்டப்படலாம்.

போர்க்குற்றங்கள் தொடர்பான விவகாரம் பலமடைந்து வரும் வேளையில், தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசு உணர்வுபூர்வமாக ஆர்வம் கொள்ளும் என்று தமிழர் தரப்புத் தமக்குள் வெறுமனே கணக்குப் போட்டுக் கொண்டிருக்கும் வேளையில் -

தென்னிலங்கை அரசியல்வாதிகளும், அங்குள்ள இனத்துவேசம் கொண்ட புலமையாளர்களும், கருத்து உருவாக்குவோரும் 1956 ஆண்டுக்குப் பிந்திய காலம் ஒன்றை உருவாக்க முனைப்புக் காட்டுவதாகவே தோன்றுகின்றது.

இத்தகைய ஒரு பின்புலத்தில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசமைப்புச் சட்டத்தின் பதின்மூன்றாவது திருத்தத்துக்கு மேலாக ஒரு துளி அதிகாரத்தையேனும் தமிழ் மக்கள் கைக்குக் கொடுக்க முன்வருவாரா என்பது நூறு வீதம் சந்தேகமானதே.

அதனாலேயே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை உருவாக்கி, தமக்குள்ள பேராதரவு என்ற பலத்தை வைத்துக் கொண்டு தமிழர்களுக்கு அரசியல் பிச்சை போடத் திட்டமிட்டுள்ளார் அவர்.

சிங்கள மக்களின் அமோக ஆதரவைப் பெற்று அடுத்தடுத்துப் பதவிக்கு வந்துள்ள ஜனாதிபதி மஹிந்த, தன்னை அரசியலில் சிகரத்துக்கு ஏற்றி வைத்த அவர்களுக்கு நம்பிக்கைத் துரோகம் இழைக்கக் கூடாது என்ற எண்ணத்தை மையக் கருவாக வைத்தே, வழித்தடம் பதிப்பார் என்பதும் நிதர்சனம்.

எனவே, தென்னிலங்கையில் கிளம்பி வரும், எழுந்து உயரும் புதிய ஆட்சிமுறை சார்ந்த சிந்தனைகளை ஜனாதிபதி இலகுவில் சீரணித்துக் கொள்வார் என்பதனையும் தமிழர் தரப்பு மிக ஊன்றி, உன் னிப்புடன் அவதானித்து, தமது அரசியல் உத்திகளை வகுக்க வேண்டியதும் மிகமிக அவசியம்; இன்றியமையாதது.

ஆகையால், தமிழ் அரசியல் தலைவர்கள் தமக்குள் உள்ள வேறுபாடுகளை விட்டெறிந்து, இந்த வேளையில் ஒன்றுபட்டு ஒரே குரலில் ஒலிக்க வேண்டிய தவிர்க்க முடியாத தேவை, முந்திய காலங்களை விட இப்போது மேலெழுந்து நிற்கின்றது. தமிழர்களும் இந்த நாட்டின் மக்கள், பிரசைகள், சம உரிமைகளைக் கொண்டவர்கள் என்பதனை, ஒன்றுபட்டு வியூகம் வகுத்து வேகமாகச் செயற்பட வேண்டிய வேளை இது. சுயநல அரசியலைக் கைவிட்டு, தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க இப்போதாவது ஒன்றுசேராவிடில், தமிழர் அரசியல் என்று சொல்வதற்கு எதுவும் இல்லாமல் வெறும் வட்டமே மிஞ்சும். ஜனநாயகம் என்று கூறிக்கொண்டு கருத்து வேறுபாடுகளால் இந்த வேளையிலும் கன்னை பிரிந்துச் செயற்பட முனைந்தால், தமிழர் அரசியல் என்பது ஒட்டுமொத்தமாக அழிந்துவிடும்.

# 13 ஆவது திருத்தத்துக்கு அரசு மறுப்பு இந்தியாவுக்கு பெரும் ஏமாற்றம்

நேற்று 19-06-2011 அன்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை எழுதியிருந்த அரசியல் விமர்சனக் கட்டுரையிலிருந்து சில பகுதிகள்.

கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த மூவர் அடங்கிய இந்திய உயர் அதிகாரிகள் குழு இந்திய பிரதம மந்திரி மன்மோகன் சிங்கிடமிருந்தான முக்கிய ஒரு செய்தியை இலங்கை ஜனாதிபதிக்கு வழங்கியிருந்தது, ஏற்கனவே பலமுறை மீண்டும் மீண்டும் தெரிவிக்கப்பட்டுவந்துள்ள இலங்கை அரசமைப்பு திருத்தம் 13 யும்அதற்கு மேலாகவும் இலங்கை தமிழர் தொடர்பான பிரச்சினை தீர்வுக்கு செயல்படுத்துவது என்ற வாக்குறுதியை நிறைவேற்றும்படி அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு விட்டாலும் தமிழர் பிரச்சினை தீர்க்கப்படாமல் அப்படியே எரிந்து கொண்டிருக்கிறது என் பதை அவர்கள் இலங்கை அர சுக்கு எடுத்துக் கூறினார்கள், மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங் கும்படியும் இந்தியக் குழுவினர் கேட்டுக்கொள்வார்களென்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் வெளிநாட்டமைச்சின் செயலாளர் நிரூபமாராவ் மற்றும் பாதுகாப்பு செயலாளர் பிரதீப் குமார் ஆகிய மூவர் அடங்கிய குழு இலங்கை அரச தரப்பினருடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் தமிழ் தரப்புகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, புளொட் அமைப்பு, ஈ.பி.ஆர். எல்.எவ்., தமிழர் விடுதலை கூட்டணி ஆகியவற்றின் பிரதிநிதிகளைச் சந்தித்து விவரம் அறிந்து கொண்டார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திய பேச்சுக்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாண்பது தொடர்பாக அமைந்திருந்ததாகவும் அரச அமைப்பின் 13 ஆம் திருத்தம் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாக அந்த அமைப்பின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். இடம் பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவது, அவர்களுக்கான நிவாரணங்கள், அபிவிருத்தி பணிகளுக்கென பெரும் விஸ்தீரணமான நிலங்கள் அரசினால் கையகப்படுத்தப்படுவது போன்ற விடயங்கள் இந்திய குழுவினருக்கு எடுத்துக் கூறப்பட்டதாகத் தெரியவந்தது. சமய கலாசார மற்றும் வரலாற்று முக்கியத்துவமான இடங்கள் அரசினால் கைப்பற்றப்படுவதாகவும் இதனால் தமிழர்களின் அடையாளம் இழக்கப்பட்டுவிடும் என்பதும் இந்தியக் குழுவுக்கு எடுத்துக்கூறப்பட்டதாகவும் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்தியக் குழுவினர் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, பாதுகாப்பு செயலா ளர் கோத்தபாய ராஜபக்ஷ போன்றவர்களையும் சந்தித்தனர், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் மீள் குடியமர்வு, உயர் பாதுகாப்பு வலயங்களினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் இலங்கையில் இந்தியா மேற்கொள்ளும் திட்டங்கள், 50,000 வீடுகள் அமைக்கும் திட்டம், பாக்கு நீரிணையில் இருதரப்பு மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் வடக் கில் காணாமல்போனவர்கள் பற்றிய தகவல்களை அவர் களின் உறவினர்களுக்கு கிடைக்க செய்வது போன்ற விடயங்கள் இந்தச் சந்திப்புக்களில் ஆராயப்பட்டுள்ளன.

தமிழர் தரப்பிலான பல்வேறு விடயங்கள் பல்வேறு அமைப்புக்களினாலும் இந்தியக் குழுவினருக்கு வழங்கப்பட்டுள்ள அதே சமயம் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சரவை உறுப்பினரான அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) செயலாளருமான டக்ளஸ் தேவானந்தா மிக முக்கிய விடயம் ஒன்றை அவர்களுக்கு வழங்கியிருப்பதாக அறிய முடிகிறது. சென்னை நீதிமன்ற கொலை வழக்கு ஒன்றில் சம்பந்தப்பட்டிருப்பதால் அங்கு செல்ல முடியாதுபோனாலும் டக்ளஸ் தேவானந்தாவை இந்தியக் குழுவினர் சந்தித்துப் பேச விரும்பினார்கள். அவர் யாழ்ப்பாணத்தில் வட மாகாண முதலமைச்சர் பதவிக்கு போட்டியிட விருப்பதால் அதற்கான பணிகளில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது.

டக்ளஸ் தேவானந்தாவுடன் இந்திய குழுவின் தலைவர் மேனன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார். 13 ஆவது திருத்தம், இந்திய மீனவர்களின் அத்துமீறல், 50,000 வீடுகள் திட்டத்தை துரிதப்படுத்துவது போன்ற விடயங்கள் கலந்

## பிரிட்டன் விதித்துள்ள 6 மாதக் காலக்கெடு

துரையாடப்பட்டதாகத் தெரிகிறது. அன்று மாலை ஈ.பி.டி.பி. ஓர் அறிக்கையை வெளியிட்டது.

''நாடாளுமன்ற தெரிவுக் குழுவொன்றை நியமிப்பதே இனப்பிரச்சினை தீர்வுக்கான சிறந்த வழி. இந்த செயல்பாட்டில் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் எல்லாக் கட்சிகளும் அங்கம் வகிக்கவேண்டும். தீர்வுத்திட்டம் ஒன்று விரைவாக முன்வைக்கப்பட வேண்டும். எல்லாருமே அங்கம் வகிக்கும் வகையில் தெரிவுக்குழு வழிசெய்ய வேண்டும். அந்த வகையில் ஒரு தீர்வு இறுதித் தீர்வு ஏற்படுமானால் ஒரு கட்சியும் அதனை எதிர்க்க முடியாது. மூன்று ஆறு மாதங்களுக்குள் ஒரு இறுதித்தீர்வு ஏற்படமுடியும்'' இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்திய மூவர் குழு இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் அசோக்காந்தாவுடன் அலரிமாளிகைக்குச் சென்று கடந்தவாரம் ஜனாதிபதியுடன் காலை உணவருந்தியதுடன் கலந்துரையாடலிலும் பங்கு பற்றினார்கள்.

இந்தக் கூட்டத்தில் வைத்து ஜனாதிபதி இந்தியக் குழுவிடம் தமது அரசினால் 13 வது திருத்தத்தை அமுல்படுத்துவதானால் மாகாணங்களுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்க முடியாது என்ற விடயத்தை வெளிப்படுத்தினார். பட்டியலிலுள்ள ஏனைய விடயங்களில் எவ் வெதனை மாகாணங்களுக்கு வழங்கலாம் என்பது பற்றி விவாதிக்க தாம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி அவர்களிடம் தெரிவித்தார். காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாணங்களுக்கு வழங்கப்படு வதை தமது அரசில் அங்கம்வகிக்கும் ஏனைய கட்சிகள் எதிர்ப்பதாக ராஜபக்ஷ அவர்களிடம் தெரிவித்தார்.

13 ஆவது திருத்த அத்தியாயம் 2 (2.2) இல் மாகாணங்களுக்குப் பொலிஸ் பிரிவுகள் வழங்கப்படுகின்றது. பிரதி இன்ஸ்பெக்டர் ஜெனரல், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் சுப்பிரின்டென் டண்ட், உதவி பொலிஸ் சுப்பிரின் டென் டண்ட், சபை பிரதம இன்ஸ் பெக்டர்கள், இன்ஸ் பெக்டர்கள், உதவி இன்ஸ்பெக்டர்கள், சார்ஜண்ட்டுகள் மற்றும் கான்ஸ்டபிள்கள் மாகாணத்துக்குள்ளே இருந்தே தெரிவு செய்யப்படுவார்கள். இந்தத் திருத்தத்தின்படி மூன்று விஷேட பிரிவுகளைத் தவிர்த்து எல்லா காணி விவகாரங்களும் மாகாணத்தின் பொறுப்பில் இருக்கும். அந்தப் பிரிவுகளாவன, (I) அரசுக்குத் தேவை யானவைகள். இந்த விடயத்துள் குறித்த சட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும். சம்பந்தப்பட்ட மாகாண சபையுடன் அரசு கலந்தாலோசிக்கவேண்டும். (II) மாகாண சபைக்குத் தேவையெனில் அரச காணிகள் அரசினால் வழங்கப்படும் (III) மாகாணத்துக்குள்ளிருக்கும் அரச காணிகளை அந்நியருக்கு வழங்க அல்லது கைவிடல் குறித்து மாகாண சபையின் ஆலோசனையின் பேரில் ஜனாதிப தியே இதனைச் செய்வார்.

13 ஆவது திருத்தத்தில் பல்வேறு விடயங்கள் ஏக காலத்தில் செயற்படுத்துவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளன. புதிய பல்கலைக்கழகங்களை நிறுவிப் பராமரித்தல், விவசாய தொழில்கள், விலங்கு விவசாயம், பண்ணைகள், வனபரிபாலனம், தொழில் வாய்ப்பு, உல்லாசப் பயண விஸ்தரிப்பு, உற்பத்திகள், விநியோகம் பத்திரிகை விநியோகம் முதலியன.

டக்ளஸ் தேவானந்தா தனது கட்சியின் சார்பில் அறிக்கையை வெளியிட்டுஒரு மேடையை உருவாக்கியுள்ளார் என்று கூறலாம்.

தமிழர் பிரச்சினை தீர்வுக்கான ஒரு புதிய பொதியை உரு

**தொகுப்பு: கோகுலன்**

வாக்குவதற்குத் தெரிவுக்குழு நியமிப்பதை தமது அரசு ஆதரிக்கும் என்று ஜனாதிபதி தெரிவித்தார். அவ்வாறான பொதி உருவாக்கப்படும்போது அது நாடாளுமன்ற அங்கீகாரத்துக்கு வைக்கப்பட்டு குறுகிய காலத்தில் செயற்படுத்தப்படும் அதற்கென காலக்கெடு விதிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

### முன்பு கூறியவை எல்லாம் காற்றில்

"13 ஆவது திருத்தமும் அதற்கு மேலும்'' என்று முன்பு கூறிய

(27 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் பிரசார மேடையாக மாறிய காரைநகர் ஒருங்கிணைப்புக் கூட்டம்

## அமைச்சர் டக்ளஸ் ஆதரவு கோரினார்

யாழ்ப்பாணம், ஜூன் 20
காரைநகர் உதவி அரச அதிபர் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அரச தரப்பின் தேர்தல் பிரசார மேடையாக மாறியது.

இந்தக் கூட்டத்தைத் தனது தேர்தல் பிரசாரத்துக்கு நன்கு பயன்படுத்திக்கொண்டார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டார். கூட்ட நேரத்தில் பெரும் பகுதியை அவர் தனது தேர்தல் பிரசாரத்துக்காகவே பயன்படுத்தினார்.

அவர் அந்தக் கூட்டத்தில் ஆற்றிய உரை முழுக்க முழுக்க தேர்தல் பிரசார உரையாகவே அமைந்தது.

அங்கு உரையாற்றிய அமைச்சர், விரைவில் உள்ளூராட்சித் தேர்தல் நடக்க இருக்கின்றது. இந்தத் தேர்தல் பிரசாரப் பணிகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அமைச்சர் பஸில் ராஜ பக்ஷவும் ஈடுபட உள்ளனர். பிர .தேச சபைகளைத் தேர்தலில் வென்றெடுப்பதன் ஊடாக அபி விருத்திகளை மேற்கொள்ள முடியும்.

1998 இல் யாழ்.மாவட்டத்தில் 15 பிரதேச சபைகளில் 10 சபைகளை வென்றெடுத்தோம். இருப்பதைப் பாதுகாப்பதும் அதனை வளர்த்தெடுப்பதும் எமது நோக்கம். தவறான அரசியல் தலைமைகளினால் பெருமளவை இழந்துவிட்டோம்.

அரசியல் பிரச்சினைகளை பத்திரிகைகள் உள்நோக்கத்துடன் எழுதுவதனால் அவற்றை நான் கவனத்தில் எடுப்பதில்லை. 25 வருடங்களுக்கு முன்னர் சுதந்திரமாக பேசவும் நடமாடவும் முடிந்தது. தவறான அரசியல் தலைமையினால் இந்த நிலைமை இல்லாமல் போனது. அந்த நிலைமையை மீண்டும் பெற்றுத் தந்த ஜனாதிபதிக்கு நன்றி கூற நாங்கள் கடமைப் பட்டுள்ளோம்- என்றார்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் இவ்வாறு தேர்தல் பிரசாரம் செய்தது அதில் கலந்துகொண்ட பலரையும் விசனத்துக்குள்ளாக்கியது.

தேர்தல் காலத்தில் அரச திணைக்களக் கூட்டம் ஒன்றில் தேர்தல் பிரசாரம் செய்வது தேர்தல் திணைக்களத்தின் விதிமுறைகளுக்கு முரணானது என்பது குறிப்பிடத்தக்கது.

(த)

# கட்டாக்காலி கால்நடைகளுக்கு காரைநகரில் பராமரிப்பு நிலையம்

யாழ்ப்பாணம், ஜூன் 20
காரைநகர் பிரதேசத்தில் கட்டாக் காலிகளாகத் திரியும் கால்நடைகளைப் பிடித்து ஓர் இடத்தில் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மகா வித்தியாலய நடராசா மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்திலே மேற்படி தீர்மானம் எட்டப்பட்டது.

கூட்டம் ஆரம்பிக்கப்பட்டதும் அதிகளவான நேரம் கட்டாக்காலி கால்நடைகள் தொடர்பாகவே ஆராயப்பட்டது.

காரைநகரில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாகவும் விவசாய நடவடிக்கைகள், வர்த்தக நடவடிக்கைகளை இவை பெரிதும் பாதித்து வருவதாகவும் பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் ஒவ்வொரு கடைகளிலும் கட்டாக்காலி கால்நடைகள் இரவில் படுத்துறங்கி வருகின்றன. வரி அறவிடும் பிரதேச சபையினர் அவற்றை அகற்ற நடவடிக்கை எடுப்பதில்லை என வர்த்தகர்கள் விசனம் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

இந்தக் கட்டாக் காலிகளை ஒரு இடத்தில் பாதுகாத்து பசு மாடுகளை விவசாயிகளுக்கும் எருது மாடுகளை ஏலத்திலும் விடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த செயற்பாடு எதிர்வரும் பெரும் போகத்துக்கு முன்னர் மேற்கொள்ளப் படும்.

ஆலயங்களுக்காக கால்நடைகளை நேர்ந்துவிட்டால் அவற்றைப் பராமரிப்பதற்கான செலவினையும் அவர்கள் வழங்க வேண்டும். வீதிகளில் ஆடு, மாடுகளை விடுவது சட்ட விரோதமானது.- என்றார்.

இதில் கருத்துத் தெரிவித்த விவசாயிகள் கடந்த ஆறு வருடமாக கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிப்பதற்கு பிரதேச சபை அனுமதிப்பத்திரம் வழங்கவில்லை எனவும், கால்நடைகளைப் பிடிப்பவர்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும் எனவும் கோரிக்கையை முன்வைத்தனர்.

(த-250)

## மாணவர் நலனுக்காக...



நற்பணி: ஆ.பிருந்தாபனின் ''தமிழ்இலக்கியத் தொகுப்பு தரம் -9'' நூல் வெளியீட்டு விழா யாழ். மத்திய கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. கல்லூரியின் பிரதி அதிபர் செ.பத்மநாதன் நூலை வெளியிட்டு வைக்க கோப்பாய் வடக்கு றோ.க.த.க பாடசாலை அதிபர் கு.திலீபன் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்கின்றார். (த)

# தீயில் எரிந்த குடும்பப் பெண் சிகிச்சை பயனின்றி மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 20
இரண்டு மாதங்களுக்கு முன்னர் தனக்குத்தானே மண்ணெண்ணெய் ஊற்றித் தீ மூட்டியதால் உடல் முழுவதும் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளம் தாயொருவர் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் மரணமானார்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி, பொன்நகர் மத்தி பிரதேசத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த உதயகுமார் தனுசா (வயது-22) என்ற ஒரு பிள்ளையின் தாயாரே இவ்வாறு மரணமானார்.

இவர் மனநோயினால் பாதிக்கப்பட்டிருந்தவர் என உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ தினத்தன்று அதிகாலை வேளை இவர் மண்ணெண்ணெய் ஊற்றித் தீ மூட்டியுள்ளார். எரிகாயங்களுக்குள்ளான நிலையில் உறவினர்களால் மீட்கப்பட்ட இவர் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டுப் பின்னர் நோயாளர் விடுதியில் வைத்து சிகிச்சையளிக்கப் பட்டுவந்தது. இந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காது நேற்று முன்தினம் மரணமானார்.

யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது (த-4-313)

## மட்டுவில் புளியடிப்பிட்டி வாய்க்கால் புனரமைப்பு

சாவகச்சேரி, ஜூன் 20
மட்டுவில் வடக்கு, கிராப்- புளியடிப்பிட்டி வாய்க்கால் 'வேள்ட் விசன்' நிறுவனத்தின் அனுசரணையுடன் மட்டுவில் வடக்கு கமக்கார அமைப்பினைச் சேர்ந்த விவசாயிகளால் புனரமைக்கப்பட்டு வருவதாக கமக்கார அமைப்பின் தலைவர் செ.சிவராசா தெரிவித்தார்.

இந்தத் திட்டமானது யாழ். மாவட்ட உதவிக் கமநல சேவை ஆணையாளரின் அனுமதியுடன் மேற்கொள்ளப்படுவதாகவும் மக்கள் வாழ்வாதாரத்தை வளர்ச்சியடையச் செய்யும் நோக்கில் அமைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இந்த வாய்க்கால் புனரமைப்புச் செய்யப் படாமல் இருந்ததாகவும் மேலும் தெரிவித்தார். (எ-131)

# சுன்னாகம் மாகியம்பிட்டி வீதி மிக மோசமாகச் சேதம்

சுன்னாகம், ஜூன் 20
சுன்னாகத்திலிருந்து மாகியம்பிட்டிவரை செல்லும் வீதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது. பல இடங்களிலும் பெரும் குழிகள் காணப்படுவதுடன் அவற்றால் தினசரி விபத்துக்கள் நேர்வதாக அந்த வீதியால் பயணிப்போர் தெரிவித்துள்ளர்.

மிக ஒடுங்கிய இந்த வீதியால் பயணிப்போர் குழிகளில் விழுந்து நிலை தடுமாறுவதாலும், குழிகளை விலத்திச் செல்ல முற்படுவதாலுமே விபத்துக்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை- கந்தரோடைப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப் பட்டுள்ள மதகு நிர்மாண வேலைகள் முடிவுற்று இரு வாரங்களுக்கு மேலாகியும் சுற்றியுள்ள பகுதி மண் நிரவப்படாதுள்ளதால் இதனூடாகப் பயணிப்போர் பெரிதும் கஷ்டமுறுவதாகவும் அந்தப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (த-38)

# இந்திய அரசின் பங்களிப்புடன் காங்கேசன் துறைமுகம் விஸ்தரிப்பு

## துணைத் தூதரக அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 20
காங்கேசன்துறை துறைமுகத்தை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொண்டு வருவதாக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் அதிகாரி வி. மகாலிங்கம் தெரிவித்தார்.

யாழ். பிறவுண் வீதியில் கடந்த 15 ஆம் திகதி 'நேசன் பொப்புலர் ரவல்ஸ் அன்ருவர்ஸ்' நிறுவனத்தின் கிளை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்த வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

உலக நாடுகளில் சுற்றுலாத் துறையை மேம்படுத்த இத்தகைய அலுவலகங்கள் பிரசன்னமாகின்றமை பயனுள்ளதாக அமையும்.

குறிப்பாக தொழில் முயற்சி, வர்த்தகம், கல்வி, கலாசாரம் போன்றவற்றை மேம்படுத்த முடியும். இது நாட்டினுடைய வளர்ச்சிக்கும் உதவுகின்றது.

வடமாகாணத்துக்குள் சுற்றுலாத்துறையை மேம்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

இந்தியாவுக்கும் கொழும்புக்குமான கப்பல் சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

அதில் பயணிப்போர் முதல் வகுப்பில் 200 கிலோகிராம் எடையுள்ள பொருள்களைக் கொண்டு செல்ல முடியும். அடுத்தடுத்த வகுப்புகளில் பயணிப்போர் 1000 கிலோக் கிராம் பொருள்களையும் கொண்டு செல்ல முடியும். இதனைப் போல் இராமேஸ்வரம் தலைமன்னார் கப்பல் சேவையை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

அத்துடன் ரயில் சேவையை மேம்படுத்தக்கூடிய அடித்தளமாக ஓமந்தை வரை ரயில் சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் மன்னார் மதவாச்சி ரயில் சேவையை ஆரம்பிக்க முயற்சிகளும் எடுக்கப் படும் - என்றார். (த-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் கரையோரக் கிராமங்களுக்கு மின்சாரம் பெற்றுத் தருமாறு கோரிக்கை

காரைநகர், ஜூன் 20
காரைநகர் பிரதேசத்தில் இதுவரை மின்ஒளி காணாத கரையோரக் கிராமங்களுக்கு மின்சாரத்தைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காரைநகர் பிரதேச, ஒருங்கிணைப்புக்கு குழுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை காரைநகர் கலாநிதி அ. தியாகராசா ம.ம.வித்தியாலய நடராசா மண்டபத்தில் இடம்பெற்ற போது அந்தப் பகுதி மக்களால் மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டது.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் காரைநகரில் தோப்புக்காடு, ஊரி, பிட்டியெல்லை, கொட்டப்புலம், வெண்னன் அடைப்பு உள்ளிட்ட பல கரையோரக் கிராமங்கள் இதுவரை மின்ஒளியைக் காணாத கிராமங்களாகவே உள்ளன.

இந்தக் கிராமங்களுக்கு மின்சாரத்தை வழங்குவதன் ஊடாக இந்தக் கிராமங்களில் உள்ள மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்கு உதவவேண்டும் எனவும் இருளில் மூழ்கியுள்ள காரைநகர் பிரதேச வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்த வேண்டும் எனவும் கோரிக்கையை முன்வைத்தனர்.

இது தொடர்பாக மின்சார சபை அத்தியட்சகர் எஸ். மகேந்திரன் கருத்து தெரிவிக்கையில்- காரைநகர் அபிவிருத்திச் சபையின் உதவியுடன் 25 மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் மேலும் மின் விளக்குகளைப் பொருத்துவதற்கு அபிவிருத்திச் சபை முன் வந்துள்ளதால் ஏனைய பிரதேசங்களுக்கும் பொருத்தப்படவுள்ளதாக தெரிவித்தார்.

இங்குள்ள பெரும்பாலான கிராமங்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாப்பாணவூரி சேவகர் கோயில் வீதி, வழுப்போடை கிழக்கு வீதி, வியாவில் உள்ளிட்ட பகுதிகளுக்கு உடனடியாக மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ-250)

# கீரிமலை நகுலேஸ்வராவின் பழைய கட்டடங்கள் அகற்றல்

யாழ்ப்பாணம், ஜூன் 20
கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம் முழுமையாகப் புனரமைக்கப்படவிருப்பதால் இடிந்த நிலையில் உள்ள சகல கட்டடங்களும் கனரக வாகனங்கள் மூலம் அகற்றப்பட்டு வருகின்றன.

கீரிமலையில் இயங்கிவந்த நகுலேஸ்வரா மகா வித்தியாலயம் போர்க்காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து இடம்பெயர்ந்து சண்டிலிப்பாய் பிரதேசத்தில் பல வருடங்களாக வசதியீனங்கள் மத்தியில் இயங்கி வருகின்றது.

வலி.வடக்கில் உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்கள் படிப்படியாக மீளக்குடியமர்த்தப்பட்டு வருகிறார்கள்.

இதைத் தொடர்ந்து நகுலேஸ்வரா மகாவித்தியாலயமும் சொந்த இடத்தில் இயங்க உள்ளது. மகாவித்தியாலத்தை முழுமையாகப் புனரமைப்பதற்கு பல மில்லியன் ரூபாவை அரசு வழங்கியுள்ளது.

கட்டட வேலைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்பட விருப்பதால் இடிந்த நிலையிலுள்ள கட்டடங்கள் கனரக வாகனங்கள் மூலம் அகற்றப்பட்டு வருகின்றன.

மகாவித்தியாலயத்திலிருந்து அகற்றப்படும் கற்கள் கீரிமலை வீதிகளைப் புனரமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. (ம-115)

# சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரிப்புக்கு பெற்றோர்களே அதிகம் காரணமானவர்கள்

## சட்டவைத்திய அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20
யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்துள்ளமைக்கு 95 வீதம் பெற்றோர்களே காரணமாகின்றனர் என்று சட்டவைத்திய அதிகாரி எஸ்.சிவரூபன் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக 14 முதல் 16 வயதுக்குட்பட்ட பெண்பிள்ளைகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது அதிகரித்துள்ளது.


இதில் பெற்றோர்களின் கவனயீனம் தான் முக்கிய பங்கு வகிக்கின்றது. பேஸ்புக் ,கைத்தொலை பேசிப் பாவனையில் குறித்த வயதுப் பெண் பிள்ளைகள் தவறான போக்குக்கு சென்று விடுகிறார்கள்.

இது தொடர்பில் பெற்றோர் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த வருடம் ஜனவரி மாதம் 15 பேரும் பெப்ரவரி மாதம் 14 பேரும்,மார்ச் மாதம் 13 பேரும், ஏப்ரல் மாதம் 14 பேரும்,மே மாதம் 15 பேரும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் அதிகமானோர் தவறான நவீன சாதனங்களின் தொடர்பால் இணைப்பால் ஏற்பட்டவை. பிள்ளைகளின் இவ்வாறான செயற்பாடுகளுக்கு பெற்றோர்களே காரணமாகின்றனர்.பிள்ளைகளின் செயற்பாடுகள் நடவடிக்கைகள் தொடர்பில் இவர்கள் அக்கறை கொள்ளாது இருப்பது முதற் காரணம் என்று அவர் மேலும் கூறினார். (ம-313)

கௌரவம்...



சாவகச்சேரி நீதிமன்றத்துக்கு இளைப்பாறிய உயர்நீதிமன்ற நீதியரசரும் இலங்கை நீதிபதிகள் பயிற்சி நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளரும் சட்ட உதவிகள் ஆணைக்குழுவின் தலைவருமாகிய என்.கே. உடலகம வருகை தந்திருந்தார். நீதிமன்ற நீதிவான் மா. கணேசராஜா மற்றும் சட்டத்தரணிகள் உத்தியோகத்தர்களுடன் அவர் கலந்துரையாடுகின்றார். (ம-207)

# இரவு நேர பஸ் சேவைகளை நடத்துமாறு கோரிக்கை

அல்லைப்பிட்டி, ஜூன் 20
அரச, தனியார் போக்குவரத்து பேருந்து சேவையை இரவு நேரங்களிலும் மேற்கொள்ளுமாறு அல்லைப்பிட்டி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துகளும், தனியார் போக்குவரத்து பேருந்துகளும் இணைந்து தமது சேவையை பகலில் செய்துவருவதாகவும் மாலை 4.30 மணிக்குப் பின்னர் எது வித போக்குவரத்து சேவையும் கிடைப்பதில்லை என அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தூர இடங்களுக்கு பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கு நடந்து வந்து தமது பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

ஆகவே குறிகாட்டுவானில் இருந்து மாலை 6 மணிக்கு புறப்படும் பேருந்தினையாவது அல்லைப்பிட்டியூடாக பயணத்தை மேற்கொள்ள ஆவன செய்தால் தமது பயணத்தை மேற்கொள்ள வசதியாக இருக்கும் என்றும் மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (எ-325)

# அல்லைப்பிட்டியில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 20
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் இன்று முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 3.15 மணிவரை நடமாடும் சேவை. அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் சட்ட உதவி ஆணைக்குழு, இலங்கை மனித உரிமை ஆணைக்குழு, பதிவாளர் நாயகத்திணைக்களம், வேலணை பிரதேச செயலகம், தீவகம் வலயக் கல்விப் பணிமனை, ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி, சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு, ஊர்காவற்துறை பொலிஸ் நிலையம், பால் நிலை வன்முறைக்கு எதிரான அமைப்பு, கடற்றொழில் திணைக்களம், விவசாயத் திணைக்களம், மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு, வேலணை பிரதேச சபை ஆகியன இணைந்து சேவைகளை வழங்கவுள்ளன.

இந்த நடமாடும் சேவையில் அல்லைப்பிட்டிப் பிரதேச மக்கள் கலந்துகொண்டு தமது பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ம-313)

# அவசரகாலக் கருத்திட்டத்தின் கீழ் உவர்நீர் தடுப்பணைகள் புனரமைப்பு

நாவற்குழி, ஜூன் 20
வடமாகாண சபை, பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகாலக் கருத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் 3 இடங்களில் உவர்நீர் தடுப்பணைகளின் புனரமைப்பு வேலைகளைச் செய்யவுள்ளது.

இலங்கை அரசினதும் ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் நிதியின் மூலம் செய்யப்படவுள்ள இந்த வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்களை அடுத்த மாதம் 16 ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அராலி - பொன்னாலை உவர்நீர் தடுப்பணை புனரமைப்பு 3லட்சம் ரூபா செலவிலும் - வேணன்உவர்நீர் தடுப் பணை புனரமைப்பு 3 லட்சம் ரூபா செலவிலும் - புங்குடுதீவு மடத்து வெளி உவர்நீர் தடுப்பணை புனரமைப்பு ஒன்றரை லட்சம் ரூபா செலவிலும் - நடைபெறவுள்ளன. (எ-121)

# காரைநகர் மேற்கு வீதிக்கு 'காப்பெற்' போட ஏற்பாடு

காரைநகர், ஜூன் 20
காரைநகர் மேற்கு வீதி 'காப்பெற்' வீதியாகப் புனரமைக்கப்பட உள்ளது என வீதி அபிவிருத்தித் திணைக்களப் பொறியியலாளர் எம். சிறிஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

காரைநகர் மேற்கு வீதி பொது மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு மிக மோசமாகச் சேதமடைந்திருப்பதாகவும் அதனை உடன் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொது மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து 7.5 கி.மீ. நீளமான காரைநகர் மேற்கு வீதியை 'காப்பெற்' வீதியாக புனரமைக்க நடவடிக்கை எடுப்பதாக பொறியியலாளர் எம். சிறிஸ்கந்தராசா தெரி வித்தார்.

வீதிகளின் அருகில் காணப்படும் கால்வாய்களை பிரதேச சபை துப்புரவு செய்யவோ புனரமைக்கவோ நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் அதனைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் பிரதிநிதிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (எ-250)

# உணவு கையாளும் நிலையங்களில் உரிமையாளர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 20
தென்மராட்சி பிரதேசத்தில் இயங்கும் உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரப் பணிமனையில் நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,பிராந்திய உணவு மருந்துகள் பரிசோதகர்,மாவட்ட பொது சுகாதார பரிசோதகர், சுகாதார கல்வி உத்தியோகத்தர் ஆகியோர் கருத்துரைகளை வழங்க உள்ளனர். உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்கள்,உணவு தயாரித்து விநியோகிப்பவர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-313-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
20 ஜூன் 2011 திங்கட்கிழமை

# இந்தியா இலங்கைக்கு உதவி செய்து தமது நலனைப் பாதுகாக்க முயற்சிக்கிறது

## சோசலிச இணையத்தளம் குற்றச்சாட்டு

இலங்கை அரசானது சீனா மற்றும் பாகிஸ்தானுடன் சுமுகமான உறவைப் பேணிவருகின்றது. இது இந்தியாவைப் பொறுத்தவரை பாதகமான ஒன்றாகும். எனவே இலங்கை அரசுக்கு உதவிகளைச் செய்வதன் மூலம் தமது நலனைப் பாதுகாக்க இந்தியா முயற்சிப்பதாக சோசலிச இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தியா ஐக்கிய நாடுகள் செயலாளர் பான் கீ மூனின் நிபுணர் குழு அறிக்கையைப் பயன்படுத்தி இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதாக அந்த இணையத்தளம் குற்றம் சாட்டியுள்ளது.

இதன் அடிப்படையிலேயே அண்மையில் இலங்கைக்கு இந்திய உயர்மட்டக் குழு விஜயம் செய்ததாகவும் குறித்த இணையத்தளம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் அறிக்கையை அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் ஆகியன வரவேற்று அறிக்கையை வெளியிட்டன.

எனினும் இந்தியா, நேரடியாகக் கருத்து எதனையும் வெளியிடாமல், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி எல் பீரிஸை அழைத்து அவரைக்கொண்டு சூசகமாக போர்க்குற்ற விசாரணையை மேற்கொள்ளும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இது இந்தியாவின் கபடத்தனத்தை வெளிப் படுத்துகிறது என்று அந்த இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை இந்தியாவையும் சீனாவையும் சமமாக வைத்து இலங்கையின் ராஜபக்ஷ அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக இலங்கையில் பாதகமான நிலை தோன்றும் என்றும் இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.(வ)

# புகலிடக் கோரிக்கையாளர்களை மலேஷியா அனுப்பும் திட்டம் தொடரும்

## ஆஸ்திரேலியப் பிரதமர் அறிவிப்பு

இலங்கை உள்ளிட்ட புகலிடக் கோரிக்கையாளர்களை மலேஷியாவிற்கு அனுப்பி வைக்கும் திட்டம் தொடரும் என ஆஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லார்ட் தெரிவித் துள்ளார்.

படகு மூலம் ஆஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்கும் சட்டவிரோதமான புகலிடக்கோரிக்கையாளர்களை தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

புகலிடக் கோரிக்கையாளர்களை மலேஷியாவிற்கு அனுப்பி வைக்கும் திட்டத்திற்கு எதிராக ஆஸ்திரேலிய நாடாளுமன்றில் அண்மையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சட்டவிரோத ஆள்கடத்தல் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஆஸ்திரேலியப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும் ஆஸ்திரேலியாவின் இந்தத் திட்டத்தை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை ஆணையாளர் மற்றும் பல்வேறு மனித உரிமை அமைப்புப் பிரதிநிதிகள் கண்டித்துள்ளனர். (வ)

# இலங்கையின் அபிவிருத்திப் பணிகளில் சர்வதேசத்தின் ஒத்துழைப்பு அவசியம்

## ஸ்பெயின் பிரதமர்

ஐக்கியநாடுகள் சபையும் சர்வதேச நாடுகளும் இலங்கையில் இடம்பெறும் அபிவிருத்திப் பணிகளில் அந்த நாட்டுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று ஸ்பெயின் பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

ரஷ்யாவில் நடைபெறும் பொருளாதார உச்சி மகாநாட்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந் தித்தபோதே அவர் மேற்கண்ட கருத்தை வலியுறுத்தியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மூன்று தசாப்த கால யுத்தத்தின் பின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்படும் மீளக்குடியேற்ற நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள்குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஸ்பெயின் பிரதமருக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

இதன்போதே ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேசமும் இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் போருக்குப் பின்னரான இலங்கையைக் கட்டியெழுப்ப தங்களாலான பங்களிப்பை நல்க வேண்டும் என்று ஸ்பெயின் பிரதமர் வலியுறுத்தியுள்ளார். என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# ஈழத் தமிழர்கள் உணவின்றித் தவிக்கும் நிலையில் சகல வசதிகளுடன் கப்பலை இயக்குகிறது மத்திய அரசு

## இயக்குநர் மணிவண்ணன் தெரிவிப்பு

இலங்கையில் தமிழர்கள் உணவுக்கு வழியின்றித் தவித்து வருகின்றனர். ஆனால் மத்திய அரசு நட்சத்திர விடுதி வசதிகளுடன் அங்கு கப்பலை இயக்குகிறது. இதில் ஏறி நாம் எப்படிப் பயணம் செய்ய முடியும் என்று இயக்குனர் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

ஈழத் தமிழர்களை கொன்றுக் குவித்த இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றிய முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவித்து நாம் தமிழர் கட்சியின் பொதுக்கூட்டம் சென்னை சைதாப்பேட்டை தேரடி திடலில் நடந்தது. அதன் போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்

இலங்கைத் தமிழர்களுக்காகத் தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்டுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானம் வரவேற்கத்தக்கது. ஈழத் தமிழர்களின் விவகாரத்தில் தைரியத்துடன் செயற்பட்டு வரும் ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை. தேர்தலின் போது எந்தவித எதிர்பார்ப்புகளும் இல்லாமல் நாம் தமிழர் கட்சி செயற்பட்டது. சீமான் ஒருவர் மட்டும்தான் இலங்கை தமிழர் பிரச்சினைகளைப் பற்றி மட்டும் பேசினார். எனவே தமிழர்கள் அவருக்கு துணையாக இருக்க வேண்டும் என்றார் அவர். (வ)

# பருத்தித்துறையில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 20

டி.ஆர்.சி.நிறுவனத்தால் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடமாடும் சேவை எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் பிறப்பு, இறப்பு, விவாகம் தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளதால். பிரதேச மக்கள் ஆவணங்களுடன் வருகை தருமாறும் மேலதிக விவரங்களை பிரதேச கிராமசேவகரிடம் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறும் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

(ம-313)


# என்றும் எங்கள் நினைவில்...

தோற்றம்: 12.10.1969

மறைவு: 01.07.2011



அமரர் பாலசிங்கம் பாலமுரளி

திதி: அபரபக்கப் பஞ்சமி

வாசமலராய் பாசமலராய் எம்
பூஞ்சோலைதனில் பூத்துக் குலுங்கினாயே
சட்டென உதிர்ந்து எமைவிட்டு
சிட்டாகப் பறந்து எங்கு நீ சென்றாயோ!
ஆறிரண்டு மாதங்கள் ஓடி மறைந்திடினும்
ஆறாத எங்கள் மனம் ஆற்றிட நீ வாராயோ!

பா.சிவராஜா,
40/1, புதுவீதி,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

உம் நினைவில் வாடும்:
குடும்பத்தினர்

(48,27)



## காணி விற்பனைக்குண்டு

புலோலி தெற்கு, புலோலியில் உள்ள இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

மேலதிக தகவலுக்கு: ஆர். மகேந்திரா
0212240103, 0750492181

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி ஸ்ரேசன் வீதிக்கு அருகில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. கிணறும் சுற்று மதிலும் மலசலகூடமும் உள்ளது.

தொடர்புகளுக்கு அழைக்கவும்
சற்குணசிங்கம்
0778048414 (வேவி)

கண்ணாடிக் குவளைகள்



குறைந்த செலவில்

டயிடஸ் ஸ்டோஸ்

2439422



# கண்ணீர் அஞ்சலி



பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் பிரதம முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி கேதீஸ்வரன் பத்மராணி அவர்களின் அன்புத் தந்தையாரும் பதில் நூலக சேவகராகக் கடமையாற்றும் திருமதி நிர்மலரூபன் அனுராதா அவர்களின் அன்பு மாமாவுமாகிய திரு.மயிலு செல்லையா அவர்கள் 16.06.2011 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
ஊழியர் நலன்புரி சங்கம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.



# பிரிவின் துயரில் மூன்றாண்டுகள்

மலர்வு 19.05.1937

உதிர்வு 20.06.2008



எம் உயர் சிகரத்தாய்

## திருமதி லாசறஸ் பிலோமினம்மா

(சேர்மனம்மா)

ஆயிரம் விளக்குகளை அவனியில் ஏற்றிய தாயே!
அணையா விளக்கே அம்மா நீ மட்டும் அணைந்ததேனோ?
ஆருயிர் கணவனோ அவனியில் தினமெண்ணித் துடித்திட
அன்பு மழலைகளோ அம்மா உமைத் தேடியழுதிட
மூன்றாண்டுகள் எமைவிட்டு ஓடி மறைந்ததுவோ உம்முயிர்
ஆயிரம் வருடங்கள் கானல் நீராய் புவியினில் கரைந்தோடினும்
விண்ணிலும் மண்ணிலும் உம் வாசனை காற்றோடு வீசுதம்மா
எம் மனதில் உதித்த நட்சத்திர தாரகையே அம்மா!
சேர்மனம்மா எனும் பெயர் கொண்டு இறைபதம் சேர்ந்த தாயே
அன்னை மரி மடியமர்ந்து இறைபதமலர் உம் ஆத்மா பணி செய்ய
அம்மா தினம் வேண்டுகின்றோம் இறைகரம் கூப்பி

பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

இல.16A, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

(49,22,27)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை தனிமைப்படுத்தத் திட்டம் எச்சரிக்கிறார் மங்கள சமரவீர எம்.பி.

கொழும்பு, ஜூன் 20

சர்வதேச ரீதியில் இலங்கை தனிமைப்படுத்தக்கூடிய அபாயம் காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது:

அரசின் செயற்திறனற்ற தன்மையினால் சர்வதேச அரங்கில் நாடு பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடலாம் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். யுத்தத்தின் பின்னரான இலங்கையின் நல்லிணக்க மற்றும் அபிவிருத்திப் பணிகளை இது பாதிக்கும்.

'சனல்-4' ஊடகத்தின் ஆவணப்படம் நாட்டின் நன்மதிப்புக்குப் பெரும் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இராஜதந்திர விவகாரங்கள் தொடர்பில் அரசு பின்பற்றி வரும் தூர நோக்கற்ற கொள்கைகளே இதற்கான காரணமாகும்.

'சனல்-4' ஊடகத்தில் ஒலிபரப்புச் செய்யப்பட்ட ஆவணம் போலியானது. பிரிவினைவாதிகளால் உருவாக்கப்பட்டது என்றால் இந்த ஊடகத்துக்கு எதிராக அரசு வழக்குத் தொடர முடியும்.

'சனல்-4' தொலைக்காட்சி பிரித்தானியாவின் ஊடக நிறுவனமொன்று எனவும் அதற்கு எதிராக வழக்குத் தொடர்ந்து நியாயத்தை நிலைநாட்டக்கூடிய சகல சந்தர்ப்பங்களும் அரசுக்குக் காணப்படுகின்றது.



போலியான தகவல்கள் வெளியிடப்பட்டிருந்தால் பொறுப்பு வாய்ந்த அரசு என்ற ரீதியில் 'சனல்-4' ஊடகத்துக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

யுத்தத்தில் வெற்றியீட்டிய படைவீரர்களுக்கான நினைவுத் தூபிகளை அமைப்பதை விட படைவீரர்களுக்கு ஏற்படும் களங்கத்தைத் நீக்குவதே முக்கியமானது- என்றார். (ச)

## மாநாடு......



ரஷ்யாவில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச பொருளாதார மாநாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜி.எல்.பீரிஸ் மற்றும் குழுவினர்.

# நாடு கடத்தப்பட்டவர்கள் விசா காலாவதியான 26 பேரே!

கொழும்பு, ஜூன் 20

விசா காலாவதியாகி பிரிட்டனில் தங்கியிருந்தவர்களையே பிரிட்டிஷ் அரசு இலங்கைக்கு திருப்பி அனுப்பியுள்ளதாக இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரோ தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வெள்ளிக்கிழமை பிரிட்டிஷ் அரசினால் இலங்கைக்கு 26 பேர் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் இலங்கையர்களா என முதலில் நாம் பரிசோதனைகளை மேற்கொண்டோம்.

அந்தப் பரிசோதனைகளை அடுத்து அவர்கள் அனைவரும் இலங்கையர்களே என்பதை உறுதிசெய்து கொண்டோம். அத்துடன் அவர்களது இருப்பிடங்களையும் அடையாளம் கண்டு கொண்டுள்ளதுடன் அவர்களது விவரங்களையும் திரட்டினோம்.

இவர்களது முழு விவங்களையும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளோம். அவர்கள் விசாரணைகளை தொடர்ந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

இவ்வாறு திருப்பி அனுப்பப்படுபவர்களுக்கு எந்தவித பாதுகாப்பு அச்சமும் ஏற்படாது என பிரிட்டன் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தமது நாட்டுச் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப பிரிட்டிஷ் அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதை அநீதி என்றோ அல்லது நியாயமற்றது என்றோ என்னால் ஒன்றும் கூறமுடியாது. நாடு கடத்தப்பட்டவர்களின் பெரும்பாலானவர்கள் மாணவர்களுக்கான விசாவில் பிரிட்டனுக்குச் சென்று விசா காலாவதியான பின்னரும் அங்கு திங்கியிருக்க முயற்சித்தவர்கள் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது - என்றார். (ச)

# மாகாண சபைகளுக்குக் காணி அதிகாரம்; வழங்க வேண்டும் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஜூன் 20

மாகாண சபைகளுக்கு காணி அதிகாரங்கள் வழங்கப்படுவதுடன், பொலிஸ் அதிகாரம் வழங்குவது குறித்தும் ஆலோசிக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாண சபை முறைமையே அதற்காக முன்வைக்கப்பட்டுள்ள மிகச் சிறந்த தீர்வாகும். காணி அதிகாரம் மாகாண சபைகளுக்கே உரியது என்று இன்றைய பிரதம நீதியரசர் கடந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற காணி வழக்கொன்றின் போது தீர்ப்பளித்துள்ளார். அந்தத் தீர்ப்புத்தான் இறுதியானது.



அதன் பிரகாரம் மாகாண சபைகளுக்கு காணி அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவது குறித்து ஏதேனும் அச்சங்கள் இருந்தால் அது குறித்து ஆலோசிக்க முடியும். அதற்கும் வேறு வழிமுறைகள் இருக்கின்றன. தமிழ்ப் பிரதேசங்களில் தமிழர்களையே பொலிஸ் உத்தியோகத்தர்களாக நியமிப்பதன் மூலமாக பொலிஸ் அதிகாரங்கள் குறித்த பிரச்சினையையும் ஓரளவுக்குத் தீர்த்துக்கொள்ள முடியும் - என்றார். (ச)

# இனி மீனுக்கும் நிர்ணய விலை

கொழும்பு, ஜூன் 20

இடத்துக்கிடம் மாறுபட்ட விலையில் மீன்கள் விற்பனை செய்யப்படுவது தொடர்பான முறைப்பாடுகளை அடுத்து அவற்றுக்கு நிர்ணய விலை கொண்டுவரப்படவுள்ளதாக மீன்பிடி நீரியல்வள அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பேலியகொட புதிய மீன் சந்தைக்கு அண்மையில் அமைச்சர் ராஜித சேனாரத்ன சென்றுள்ளார். அப்போது வியாபாரிகள் ஒவ்வொருவரும் வேறுபட்ட விலைகளில் மீன்களை விற்பது குறித்து அவருக்கு பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதனையடுத்து இது தொடர்பாக அமைச்சர், அதிகாரிகளுடன் கலந்துரையாடி மீன்களுக்கு புதிய விலைகள் நிர்ணயிக்கப்படும் என அறிவித்துள்ளார்.

இதேபோல நாட்டின் ஏனைய மீன் சந்தைகளிலும் மீன்களுக்குரிய புதிய விலைகள் அறிவிக்கப்படும் என அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கோழி இறைச்சி, மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி என்பனவற்றுக்கு விலை நிர்ணயிக்கப்படும்போது கடல் உணவுகளுக்கு ஏன் விலை நிர்ணயிக்கப்படவில்லை எனப் பாவனையாளர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மத்திய வங்கியில் தங்க விற்பனையா? வீண் புரளிகளை நம்பாதீர்கள்!

கொழும்பு, ஜூன் 20

மத்திய வங்கி உள்ளூரில் தங்கத்தை வர்த்தகம் செய்வதாக ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. அத்தகைய கூற்றுகள் ஆதாரமற்றவை. பொதுமக்களைத் தவறாக நடத்திச் செல்வதற்கான நோக்கத்தை கொண்டுள்ளது என மத்திய வங்கி அறிவித்துள்ளது. மத்திய வங்கி நாட்டின் அலுவல்சார் பன்னாட்டு ஒதுக்குகளை முகாமை செய்வதுடன், அதன் வெளிநாட்டு நாணய நிலுவைகளை வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட சாதனங்களிலும் தங்கத்திலும் வெளிநாடுகளிலுள்ள பிரபல்யமான பன்னாட்டு வங்கிகளில் பேணுகின்றது.

மத்திய வங்கி அதன் பண்ணாட்டு ஒதுக்கு முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் ஒரு பகுதியாக பன்னாட்டுச் சந்தையில் மட்டும் தங்கக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கிறது. இதன்படி, வங்கி உள்நாட்டுச் சந்தையில் எந்தவிதமான தங்கக் கொடுக்கல் வாங்கல்களிலும் ஈடுபடுவதில்லை.

எனவே, மத்திய வங்கியால் மேற்கொள்ளப்படும் தங்க விற்பனை தொடர்பாக அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் காணப்பட்ட இந்தக் கூற்றுகள் முழுப் பொய்யானது என்பதை பொது மக்களுக்கு அறியத் தருவதுடன் அத்தகைய பொய்யான தகவலால் தவறாக வழிநடத்தப்பட வேண்டாம் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் - என மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ச)

# 'சனல்-4' வீடியோக் காட்சிகள் கலந்துரையாட அரசு இணக்கம்

'சனல்- 4' தொலைக்காட்சியின் காண்பிக்கப்பட்ட இலங்கையின் கொலைக்களம் என்ற காணொளிக் காட்சிகளின் பிரதி தமக்குத் தரப்படவில்லை என்று இலங்கை அரசு குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த காணொளிக் காட்சிகள் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் சட்டவிரோதக் கொலைகள், சித்திரவதைகளுக்கான விசேட பிரதிநிதி கிறிஸ்டோவ் ஹெய்ன்ஸ்சுடன் கலந்துரையாட இலங்கையரசு விருப்பம் கொண்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

'சனல்-4' தொலைக்காட்சியில் இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான காணொளிக் காட்சிகள் ஜெனீவாவில் மனித உரிமைகள் பேரவை அமர்வின் போது காட்டப்பட்டது. இந்தக் காணொளிக் காட்சிகளை நிராகரித்த இலங்கை அரசு தற்போது அழுத்தங்கள் அதிகரித்து வருகின்ற நிலையில் ஐக்கிய நாடுகளுடன் இணைந்து செயற்பட இணங்கியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# நாய் மருந்தை அருந்தியவர்கள் வைத்தியசாலையில்

கொழும்பு, ஜூன் 20

கசிப்பு என எண்ணி நாய் உண்ணிகளை அழிக்கப் பயன்படுத்தப்படும் நாசினியை அருந்திய மூவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சம்பவம் பஸ்யால, எல்லமுல்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. நாசினியை அருந்தியவர்கள் வத்துபிடிவல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் நிலைமை கவலைக் கிடமாக உள்ளது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச)

உலகக் குருதிக் கொடையாளர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் உள்ள தன்னார்வக் குருதிக் கொடையாளர்கள், எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியினரால் கௌரவிக்கப்பட உள்ளார்கள்.




இரத்ததானம் இலகுவானது, உன்னதமானது

✱ இரத்தம், உடல் இழையங்களுக்கு உணவு, ஒட்சிசன் போன்றவற்றை வழங்குவதற்கும் நோய்க்கிருமிகளுக்கும் எதிராகப்போராடி அவற்றை அழிப்பதற்கும் அத்தியாவசியமானது.


✱ அதிகளவு இரத்தப்போக்கின் போதோ, இரத்தத்தின் வெவ்வேறு கூறுகள் குறைபாடாக உள்ள பொழுதோ இரத்தத்தை முழுமையாகவோ அல்லது அதன் கூறுகளாகவோ அவ்வவ் நோயாளிகளுக்கு ஏற்றப்படும்.


மேற்கூறிய தேவைகளுக்கு மனிதக் குருதியை மட்டுமே பயன்படுத்த முடியும்.
இரத்தவங்கி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். 021-2223063.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
20 ஜூன் 2011 திங்கட்கிழமை

# பராமரிப்பின்றி அழியும் நிலையில் மன்னாரின் அல்லிராணிக் கோட்டை





மன்னார், ஜூன் 20

மன்னார் மாவட்டத்தில் அரிப்புக் கிராமத்தில் அமைந்துள்ள அல்லிராணிக்கோட்டை பராமரிப்பின்றியும், கடலரிப்பாலும் அழியும் நிலையில் காணப்படுவதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் மாவட்டத்தில் பிரசித்தி பெற்றதும் சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரும் விதத்தில் அமைந்ததுமான கிராமங்களுள் அரிப்புக் கிராமமும் ஒன்று. இந்த அரிப்புக் கிராமத்தில் பழமை வாய்ந்த அல்லிராணிக் கோட்டை காணப்படுகிறது.

கடந்த யுத்த காலத்தின் போது இந்தப் பிரதேசத்துக்குச் செல்ல முடியாத நிலை காணப்பட்டது. இதனால் அல்லிராணிக் கோட்டை என்ற பெயரை மட்டும் தான் மக்கள் கேட்டிருப்பார்களே தவிர அதனைப் பார்க்க முடியாத நிலையில் இருந்தனர்.

யுத்தம் ஓய்ந்த பின்னர் தற்போது அதனைப் பார்வையிடுவதற்கான சூழ்நிலை தோன்றியுள்ளது. கடற்கரையோரத்தில் அமைக்கப்பட்ட இந்த அல்லிராணிக் கோட்டை இராவணன் காலத்தில் கட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இத்தகைய பெருமை வாய்ந்ததும் சிறந்த சுற்றுலாத்தலமாகத் திகழ்வதுமான அல்லிராணிக்கோட்டை தற்போது கடலரிப்புக்கு உள்ளாகியுள்ள நிலையில் காணப்படுகின்றது.

இதனைப் பார்ப்பதற்கு மிகவும் வேதனையளிப்பதாகப் பலரும் கூறுகின்றனர்.

இந்தக் கோட்டை தொடர்ந்தும் சிதைந்து வருவதுடன் கடலரிப்பாலும் பெரும் அபாயத்தை எதிர்கொள்கிறது.

ஆனால் இந்த நிலையிலும் இதனைப் பார்வையிடுவதற்கு நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.

மன்னார் மாவட்டத்தின் பெருமையையும் சரித்திர சிறப்புக்களையும் காட்டி நிற்கும் இந்த அல்லிராணிக் கோட்டையைப் பாதுகாத்துப் பராமரிக்க வேண்டியது உரியவர்களின் தலையாய பணியாகும். இதனையே மன்னார் மக்கள் எதிர்பார்க்கின்றனர். (க-601)

## நாட்டுக் கூத்தில் வெற்றி பெற்றோர்

கிளிநொச்சி, ஜூன் 20

வடமாகாணப் பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற நாட்டுக்கூத்துப் போட்டியில் கிளிநெச்சி கல்வி வலயத்துக்கு மூன்று இடங்கள் கிடைத்துள்ளன அவை வருமாறு:

இசை நாடகம் - கிளிநொச்சி ம.வி (முதலாமிடம்)

சிந்துநடைக்கூத்து - கிளிநெச்சி இந்துக்கல்லூரி (இரண்டாமிடம்)

விசேட கூத்து -பளைறோ.க. த.க.பாடசாலை (மூன்றாமிடம்)

(க-ம-405)

## வீதிப் புனரமைப்பு

கிளிநொச்சி, ஜூன் 20

கிளிநெச்சியில் இருந்து திருநகர், ஜெயந்திநகர் ஆகிய கிராமங்களுக்குச் செல்லும் பிரதான வீதி இராணுவத்தினரால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்பட்ட இந்த வீதி கிரவல் இடப்பட்டு புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த வீதியில் புகையிரத வீதிச் சந்தியில் இருந்து சுமார் ஒன்றரைக் கிலோமீற்றர் தூரமான பகுதி இவ்வாறு புனரமைக்கப்பட்டுள்ளது. இந்த புனரமைப்புப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இவ்வீதியின் ஆரம்பத்தில் A-9 வீதியில் இருந்து புகையிரத வீதி வரையான சுமார் 500 மீற்றர் வரையான பகுதியின் புனரமைப்பு வேலைகள் பல மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இன்னும் பூரணப்படுத்தப்படவில்லை. பல மாதங்களாக ''வீதி திருத்தத்துக்காக வீதி மூடப்பட்டுள்ளது'' எனும் அறிவுறுத்தல் பாதாகை கூட அகற்றப்படாத நிலையில் உள்ளது. இவ் வீதியோரத்திலே கரைச்சி பிரதேச சபை அலுவலகம் அமைந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-405)

# தட்டுவன்கொட்டி அம்பாளுக்கு மகாகும்பாபிஷேகப் பெருவிழா

கிளிநொச்சி, ஜூன் 20

கிளிநொச்சி, தட்டுவன்கொட்டி கண்ணகி நகர் அருள்மிகு கண்ணகை அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை மு.ப. 10.02 முதல் 11.50 மணிவரை நடைபெறவுள்ளது.


வன்னிப் பெருநிலப்பரப்பில் திருவருட் செல்வங்கள் சிறந்து விளங்கும் கிளிநொச்சி தட்டுவன் கொட்டி கண்ணகி நகர்ப் பகுதியில் அருள்பாலித்து வரும் கண்ணகை அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நிகழும் மங்கலகரமான கரவருஷம் ஆனித் திங்கள் ஐந்தாம் நாளாகிய இன்று சிங்க இலக்கின சுப முகூர்த்த வேளையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

பிரதிஷ்டா பிரதம குருவாகிய சிவஸ்ரீகலாதர சிவாச்சாரியார் (பரம்பரைக்குரு - இணுவில் கந்தசாமி கோவில்) தலைமையில் சிவஸ்ரீ இர.கந்தசாமிக் குருக்கள், ஆலய குரு இ.தெய்வேந்திரம் குருக்கள், சிவஸ்ரீ ஆறுமுககணேசக் குருக்கள், கலாநிதி எஸ். உமாபதி சிவாச்சாரியார், பிரபாகர சிவாச்சாரியார், சோ.வரதராசக் குருக்கள் ஆகியோரால் கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெறவுள்ளது என்பதுடன் நாட்டின் பல பகுதியில் இருந்து ஆலயக் குருக்கள் பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கும்பாபிஷேகத்துக்குத் தேவையான பால், தயிர், இளநீர், புஸ்பங்கள், வில்வங்கள், பழவகைகள் போன்றவற்றை வழங்கவுள்ளவர்கள் ஆலய பரிபாலன சபையினரிடம் வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

கும்பாபிஷேக நிகழ்வுகளில் கலந்து கொண்டு அம்பாளின் திருவருள் பெறுமாறு ஆலய நிர்வாகத்தினர் மக்களைக் கேட்டுக்கொள்கின்றார்கள். (க-426)

## வெயிலின் தாக்கம்...



கொக்குகளுக்கு வேட்டை: தற்போதைய கடும் வெப்பம் காரணமாக மன்னாரிலுள்ள சிறு குளங்கள் வற்றிய நிலையில் அவற்றிலுள்ள மீன்களை உண்பதற்காகக் கொக்குகள் குவிந்து காணப்படுகின்றன. (601)

## சனச வங்கிக் கிளை

வவுனியா, ஜூன் 20

சனச அபிவிருத்தி வங்கி தனது கிளையை வவுனியா 2 ஆம் குறுக்குத் தெருவில் எதிர் வரும் 22 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.30 மணிக்கு திறந்து வைக்கவுள்ளது.

(க-எ-421)

# கிளிநொச்சி வலய கரைச்சிக் கோட்ட ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

கிளிநொச்சி, ஜூன் 20

கிளிநொச்சி கல்வி வலய கரைச்சிக் கோட்ட முடிவுகள் வருமாறு:

**உரத்து வாசித்தல்**

**தரம் - 3**

பி. தர்மிலன் - கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு, கே. நிஷாலினி - சென். திரேசா பெண்கள் கல்லூரி, எஸ். சஞ்சிகா - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

**தரம் - 4**

ஆர். சாதனா - கிளிநொச்சி ம.வி., பி. அமுதினி - கிளிநொச்சி மத்திய கல்லூரி - ஆரம்பப்பிரிவு, எஸ். கேசிகா - கிளிநொச்சி மத்திய கல்லூரி - ஆரம்பப்பிரிவு.

**தரம் - 5**

ஜே. லியான்சிகா - கிளிநொச்சி ம.வி, கே.தருஷா - வட்டக்கச்சி ம.வி, பி.சாருஜா - கிளிநொச்சி மத்திய கல்லூரி - ஆரம்பப்பிரிவு.

**ஒப்பித்தல்**

**தரம் -3**

பி.தமிழருவி - கிளிநொச்சி மத்திய கல்லூரி - ஆரம்பப் பிரிவு, எஸ். துஷாலிகா - திருவையாறு ம.வி., கே.நிஷாலினி - சென்.திரேசா பெண்கள் கல்லூரி.

**தரம் -4**

எஸ். நிதுர்ஷிக்கா, ரி. சந்துஷா - கிளிநொச்சி ம.வி, ரி. அஸ்வினா - சென். பற்றிமா றோ.க.பா.

**தரம் - 5**

ஏ. பபிசாஜினி - புதுமுறிப்பு வித்தியாலயம், பி.கேதாகரன் - வட்டக்கச்சி ம.வி, எம். மதுபாலன் - கிளிநொச்சி மத்திய கல்லூரி.

**தரம் - 6**

என். அபிராமி - திருவையாறு ம.வி, பி.யூட்டி காஷ்மிரா - கிளிநொச்சி மத்திய கல்லூரி, ஆர். அஜித்மிலன் - கிளிநொச்சி ம.வி.

**தரம் - 7**

எம். கீர்த்தனன் - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, பி. அபிநயா - கிளிநொச்சி ம.வி, எஸ். அக்ஷனா - கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

**தரம் - 8**

ரி. கீர்த்தனா - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, எஸ். நிசாந்தினி - சென். திரேசா பெண்கள் கல்லூரி, பி. அபிஷா - கிளிநொச்சி ம.வி.

**தரம் -9**

என். கேசவராஜ் - கிளிநொச்சி மத்திய கல்லூரி, என். காயத்திரி - இராமநாதபுரம் [illegible] நொச்சி ம.வி.

**தரம் - 10**

வை. ஹர்ஷிகா - கிளிநொச்சி ம.வி, பி. சிந்துஜா - கிளிநொச்சி மத்திய கல்லூரி, கே. சரண்யா - கிளிநொச்சி ம.வி.

**நடிப்பு**

**தரம் - 6**

கிளிநொச்சி இந்துக் கல்லூரி, சென். திரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி ம.வி.

**தரம் - 7**

சென். திரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி ம.வி,

**தரம் - 8**

கிளிநொச்சி ம.வி.

**தரம் - 9**

கிளிநொச்சி இந்துக் கல்லூரி, சென். திரேசா பெண்கள் கல்லூரி, உருத்திரபுரம் ம.வி.

**தரம் - 10**

சென். திரேசா பெண்கள் கல்லூரி.

**கதை சொல்லுதல்**

**தரம் - 6**

ஏ. சோஜினி - சென். திரேசா பெண்கள் கல்லூரி, எஸ். இசைவாணி - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, ஜி. குகப்பிரியன் - கிளிநொச்சி ம.வி.

**தரம் - 7**

எம். கீர்த்தனன் - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, ஆர். கேஜிமி - கிளிநொச்சி ம.வி, கே.கோபிகா - கிளிநொச்சி ம.வி.

**தரம் - 8**

பி. பிரகாசினி - கிளிநொச்சி ம.வி, எம்.சங்கீதா - பாரதிபுரம் அ.த.க., எம்.தர்மினி - பாரதிபுரம் அ.த.க.

**தரம் - 9**

பி.சௌசியா - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, ஜி. அரிமர்த்தனா - சென். திரேசா பெண்கள் கல்லூரி, ஆர். நிலவரசி - கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

(க-405)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 968 குடும்பங்கள் மீளக்குடியமர்வு

## முல்லைத்தீவு அரச அதிபர் தகவல்

வவுனியா, ஜூன் 20

வவுனியா இடைத் தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 968 குடும்பங்கள் இந்த வாரத்தில் மீளக் குடியமர்த்தப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.பத்திநாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் இரண்டு உதவி அரச அதிபர் பிரிவுகளின் நான்கு கிராம அலுவலர் பிரிவுகளில் இந்த மக்கள் மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர்.

'மெனிக்பாம்' முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள 968 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 189 பேர் நாளை மறுதினம் புதன்கிழமை தொடக்கம் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் உள்ள கிராம அலுவலர் பிரிவுகளான சுதந்திரபுரத்தில் நாளை மறு தினம் 346 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 106 அங்கத்தவர்கள் மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர்.

தேவிபுரத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி 306 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 98 பேரும், வள்ளிபுனத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி 292 குடும்பங்களைச் சேர்ந்த 894 அங்கத்தவர்களும் இவ்வாறு மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இதேபோன்று கரைதுறைப் பற்று உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள செம்மலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் 24 ஆம் திகதி 24 குடும்பங்களைச் சேர்ந்த 91 அங்கத்தவர்களும் மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர்.

மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு ஏதுவாக மிதிவெடி அகற்றியதற்கான சான்றிதழ் கிடைக்கப் பெற்றதனை அடுத்தே இந்தப் பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (க-14)

# வவுனியாவில் இருந்து கொழும்பு செல்லும் ரயில் நேரமாற்றம்; பயணிகள் சிரமம்

வவுனியா, ஜூன் 20

வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கிப்புறப்படும் ரயில் சேவை நேர அட்டவணை மாற்றம் செய்யப்பட்டதால் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

முற்பகல் 3.20, 5.45, 7.00, 14.30, 22.00, மணிக்கு வவுனியாவில் இருந்து ரயில் புறப்படுவதாகவும், முறையே முற்பகல் 9.35, 10.30, 15.30, 19.20, 4.45 மணிக்கு கொழும்பு சென்றடைவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

வழக்கமான நேரத்துக்குச் சென்று வரும் பயணிகள் நேர மாற்றத்தால் தமது அன்றாட செயற்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதிலும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாகக் கவன மெடுத்து உரிய நடவடிக்கைகளை பயணிகள் தேவை கருதி மேற்கொள்ள வேண்டுமெனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க-எ-421)

# வற்றிய நிலையில் குளங்கள்

மன்னார் மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வெயில் காரணமாக இங்குள்ள சிறு குளங்கள் அனைத்தும் வற்றிய நிலையில் உள்ளன. இதனால் இந்தக் குளங்களில் காணப்படும் மீன்களைப் பிடித்து உண்பதற்காக ஏராளமான கொக்குகள் இந்தக் குளங்களை நோக்கிப் படையெடுத்துள்ளன. (க-6)

## பாராட்டப்பட வேண்டியவர்கள்...



உழைப்புக்கு வெற்றி: மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம்பெற்று மாகாண மட்டத்துக்குத் தெரிவாகியுள்ள வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தின் 17 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்டக் குழுவினர் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியைகளுடன் காணப்படுகின்றனர்.

# முகாம்களில் இருந்த 48 ஆயிரம் குடும்பங்கள் இதுவரை மீள்குடியமர்வு

## வவுனியா அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

இறுதி யுத்தத்தின் போது இடம் பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியிருந்தவர்களில் சுமார் 48 ஆயிரம் குடும்பங்கள் இதுவரை மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளதாகவும் இன்னமும் 4 ஆயிரம் குடும்பங்கள் மட்டுமே வவுனியாவிலுள்ள நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளன என்றும் வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது 52 ஆயிரம் குடும்பங்கள் வவுனியாவிலுள்ள 15 நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்ததாகவும் யுத்தம் முடிவடைந்தன் பின்னர் இவர்களுள் 48 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது 4 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரம் பேர் வவுனியாவிலுள்ள இரண்டு நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் தமது பகுதிகளில் மீளக்குடியமர்த்தப்படவுள்ளதாகவும் வவுனியா மாவட்ட அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (எ-14)

# புதிய பிரதேச செயலகம் அமைக்கப்படும் தினத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் அக்கராயன் மக்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் புதிய பிரதேச செயலகப் பிரிவுகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் 2006 ஆம் ஆண்டிலிருந்து வலுப் பெற்று வந்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டம் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை என்ற நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளைக் கொண்டிருக்கின்றது.

புதிதாக வட்டக்கச்சி, பல்லவராயன்கட்டு, அக்கராயன் ஆகிய பகுதிகளில் பிரதேச செயலகப் பிரிவுகளை உருவாக்க வேண்டும் என்ற கருத்துக்களுக்கு மத்தியில் அக்கராயனிலும் பல்லவராயன் கட்டிலும் பிரதேச செயலகப் பிரிவுகள் உருவாக்கப்படுவதற்கான காணிகள் கூட இனம் காணப்பட்டிருந்தன. பிரதேச செயலகம் உருவாக்கம் பெறுவதன் முக்கியத்துவம் தொடர்பாக முதலில் ஆராய்வோம்.

கிளிநொச்சி மேற்கில், கிளிநொச்சியிலிருந்து 19 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள முக்கிய கிராமம் அக்கராயன் குளமாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக் குளத்துக்கு அடுத்ததாக இரண்டாவது பெரியகுளமாக விளங்குவது அக்கராயன் குளமாகும்.

இந்தக் குளம் அக்கராயன் மக்களின் பொருளாதார வாழ்வைத் தீர்மானிக்கும் சக்தியாக உள்ளது.

இந்த நிலையில் இந்தப் பிரதேச மக்கள் 1964 ஆம் ஆண்டு குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் 19 கிலோ மீற்றர் தூரம் நெருக்கடிகளுக்கு மத்தியில் பயணம் செய்து கரைச்சிப் பிரதேச செயலகத்தில் தமது பணிகளை நிறைவேற்றி வருகின்றனர்.

அக்கராயனில் பிரதேச செயலகம் அமைக்கப்பட்டால் வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம், ஸ்கந்தபுரம், மணியங்குளம், முக்கொம்பன், கண்ணகைபுரம், ஊற்றுப்புலம், யூனியன்குளம், அமைதிபுரம், ஆரோக்கியபுரம், அம்பலப்பெருமான்குளம், திருமுறிகண்டி ஆகிய பகுதி மக்கள் நன்மையடைவர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தமது தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய மக்கள் 60 கிலோ மீற்றர் தூரம் சென்று இவற்றை நிறைவு செய்ய வேண்டிய நிலையில் உள்ளனர்.

உதாரணமாக திருமுறிகண்டி முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளமையால் இப்பகுதி மக்கள் 60 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்குச் சென்றே தமது தேவைகளை நிறைவு செய்ய வேண்டும.

அதேபோன்று அமைதிபுரம், ஆரோக்கியபுரம் மக்கள் 22 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள துணுக்காய் பிரதேச செயலகத்துக்குச் செல்ல வேண்டிய தேவையுள்ளது.

அக்கராயனில் பிரதேச செயலகம் உருவானால் திருமுறிகண்டி, அமைதிபுரம், ஆரோக்கியபுரம் மக்கள் தமது தேவைகளை 10 கிலோமீற்றர் தூரத்துக்குள் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கு ஏதுவாக திருமுறிகண்டி, இந்துபுரம் அமைதிபுரம், ஆரோக்கியபுரம், அம்பலப்பெருமாள்குளம் போன்ற பகுதிகள் கிளிநொச்சி மாவட்டத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைந்திருந்த பாலங்குளம் கூட 2000 ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்டத்துடன் இணைக்கப்பட்ட நிலையில் இந்தக் குளத்தின் பயன்களை பெறும் ஆரோக்கியபுரம் மக்கள் முல்லைத்தீவு மாவட்ட நிர்வாகத்தின் கீழ் உள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் உள்ள அம்பலப்பெருமாள்குளம் கிராம மக்கள் அக்கராயனில் பிரதேச செயலகம் உருவானால் பெரும் நன்மையடைவர். அம்பலப்பெருமாள் குளம் கிராம மக்களுக்கு தபால் விநியோகம் கூட அக்கராயன் தபாலக மூடாகவே மேற்கொள்ளப்படுகிறது.

அக்கராயனில் பிரதேச செயலகம் உருவானால் மக்கள் பல்வேறு நன்மைகளைப் பெறமுடியும். அக்கராயன் குளத்தின் கீழான விவசாய முயற்சிகளை ஊக்குவிக்க முடியும்.

அக்கராயன் பிரதேச அபிவிருத்தியில் அவசர உதவிகளைத் தனித்துவமகாகப் பேணமுடியும்.

மீளக்குடியமர்ந்துள்ள 4000 வரையான குடும்பங்களின் வீடமைப்பு வாழ்வாதார முயற்சிகளை விரைவுபடுத்த முடியும்.

போரினால் அழிவடைந்த மக்களின் வாழ்விடங்களை விரைவாக அமைக்க முடியும்.

கரைச்சி பிரதேச செயலகத்தில் வேலையற்ற மக்களின் நெருக்கடியினைக் குறைக்க முடியும்.

மக்களின் போக்குவரத்து நெருக்கடிகளைக் குறைக்க முடியும். அக்கராயனில் பிரதேச செயலகம் உருவாக வேண்டும் என்பது இப்பகுதி மக்களின் கனவாக உள்ளது.

1996 இல் கிளிநொச்சி இடம் பெயர்வு நிகழ்ந்து மாவட்டச் செயலகம் உட்பட மாவட்டத் திணைக்களங்கள் அனைத்தும் அக்கராயனிலும், கந்தபுரத்திலும் இயங்கின.

போர்க்காலத்தில் உதவிய மண்ணில் மக்களின் தேவைகளை நிறைவேற்ற பிரதேச செயலகம் உருவாக அனைத்து தரப்பினரும் முயற்சி செய்ய வேண்டும்.

அக்கராயன் மகாவித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் அக்கராயனில் பிரதேச செயலகம் உருவாக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

கி.பிருதிவி

அக்கராயனில் எப்போது பிரதேச செயலகம் உருவாகும் என்பதே அக்கராயன் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் வினாவாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீது பொருளாதாரத் தடை; ஜெயலலிதாவின் கோரிக்கை நியாயமா?

அம்பாறை, ஜூன் 20

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இலங்கை மீது பொருளாதாரத்தடை விதிக்கத் தீர்மானம் நிறைவேற்றுவிப்பதும், தூத்துக்குடி- கொழும்பு கப்பல் சேவையை இடை நிறுத்தக் கோருவதும் எந்த வகையில் நியாயமாகும்?

இவ்வாறு கிழக்கு மாகாண சுகாதார, விளையாட்டுத்துறை, கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். சுபைர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தெஹியத்தகண்டி பகுதியில் இடம்பெற்ற சிறுவர் நன்னடத்தை அலுவலகத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் இவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

நாட்டில் பயங்கரவாதத்தை ஒழித்து சுமுக நிலையைத் தோற்றுவித்த மஹிந்த அரசு மீதும் நாட்டின் மீதும் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி பழி எண்ணம் கொண்டவராக தமிழக முதல்வர் திகழ்வது வேதனைக்குரிய விடயமாகும்.

இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியும், தூத்துக்குடி- கொழும்பு கப்பல் சேவையை இடைநிறுத்தவேண்டுமெனவும் தமிழக முதல்வர் ஜெயலலிதா கோருவது எந்த வகையில் நியாயமான செயலாகக் கொள்ள முடியுமென்பதை அவரே உணர்ந்து கொள்ளவேண்டும். அரசியல் இலாபம் தேடுவதற்காக உண்மை நிலைமைகளை மூடிமறைப்பதும், மனச்சாட்சியை விற்றுப் பிழைப்பதும் ஒருபோதும் நியாயமாகாது.

எமது நாடு ஜனநாயக இறைமையுள்ள நாடு, மக்களை என்றும் நேசித்து மக்கள் நலன் ஒன்றையே நோக்காகக்கொண்டு செயற்படும் தலைவனையும் அரசையும் கொண்டநாடு. எந்த அந்நிய சக்திகளின் தலையீடுகளுக்கும் இங்கு இடமில்லை.

மூன்று தசாப்தகால பயங்கரவாத நிலைமையை முடிவுக்குக் கொண்டுவந்து பலம் பொருந்திய ஆட்சியைக் கொண்டிருக்கும் நாம் எந்த சக்திகளுக்கும் மசிந்து விடமாட்டோம் -என்றார் (ச-30)

# கிழக்கில் ஆசிரியர்கள் இடமாற்றம்; இரத்துச் செய்யக்கோரி இன்று பேச்சு

அம்பாறை, ஜூன் 20

கிழக்கில் பெரும் சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் மேலதிக ஆசிரியர் சமப்படுத்தல் விவகாரம் தொடர்பாக ஆசிரிய தொழிற்சங்கங்களின் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் இன்று திங்கட்கிழமை கிழக்கு மாகாண ஆளுநரையும் முதலமைச்சரையும் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இடமாற்றங்கள் தொடர்பில் இறுதித் தீர்வுக்கான முயற்சியாக இந்தச் சந்திப்புகள் இடம்பெறவுள்ளன.

இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோஸப் ஸ்டாலின், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் எஸ். ராஜநாயகம், இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத் தலைவர் எம்.அனஸ், கிழக்கு மாகாண தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் ஆர். ஜெரோம் ஆகியோர் இந்த ஆளுநர், முதலமைச்சரான சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ளனர்.

கிழக்கு மாகாண ஆளுநரை இன்று முற்பகல் பத்து மணிக்கு அவரது அலுவகத்திலும், முதலமைச்சரை பிற்பகல் இரண்டு மணிக்கு அவரது அலுவலகத்திலும் இந்த ஆசிரியர் சங்கங்களின் தலைவர்கள் சந்திக்கவுள்ளனர்.

தேசிய இடமாற்றக் கொள்கைக்கு முரணாக அதிகாரிகளால் தயாரிக்கப்பட்ட இந்த இடமாற்றத் திட்டம் உடனடியாக இரத்துச் செய்யப்படவேண்டுமென்ற பிரதான கோரிக்கையையே தாங்கள் இந்தச் சந்திப்பின்போது முன்வைக்கவுள்ளதாகவும்,

தவிர்க்க முடியாத பட்சத்தில் 01-01-2012 வரை இந்த இடமாற்றங்களை ஒத்திவைக்க வேண்டுமென வலியுறுத்தவுள்ளதாகவும் இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத் தலைவர் எம்.அனஸ் தெரிவித்தார்.

இந்த இறுதித் தீர்வை எட்டுவதற்கான பேச்சுக்கள் தோல்வியில் முடிவுறும் பட்சத்தில் நீதிமன்றத்தை நாடி நியாயம் பெறவுள்ளதாகவும் இதற்கான சட்ட ஆலோசனைகள் பெறப்பட்டு தயார் நிலையிலி ருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-30)

# போகம்பரை சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகள் மீது தாக்குதல்

கண்டி போகம்பரை சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் கடந்த 14 ஆம் திகதி சிறைச்சாலை அதிகாரிகளினால் தாக்கப்பட்டமைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்தத் தாக்குதலானது இங்கு நடைபெறுகின்ற இராணுவ ஆட்சியின் உச்சக்கட்டம். தமிழர்களுக்கு இலங்கையில் எங்குமே பாதுகாப்பில்லை என்பதனை இந்தத் தாக்குதல் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டியவர்களே இனத்துவேசத்தை விதைக்கிறார்கள். இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாமல் இருக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.(ச)

## வழங்கல்.....



*மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சித்தாண்டி மத்திய மகா வித்தியாலய மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் கலந்து கொண்டு மாணவி ஒருவருக்கு கற்றல் உபகரணங்களை வழங்குகின்றார். (ச)*

# தென் எருவில்பற்று பிரதேச சபையை நகரசபையாக மாற்றக் கோரிக்கை

மண்முனை, தென் எருவில் பற்று பிரதேச சபையை நகர சபையாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

100இற்கும் மேற்பட்ட கிராம சேவகர்கள் பிரிவுகளைக்கொண்ட மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தைப் பல்வேறு தடவைகள் நகரசபையாக மாற்றுமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இது வரையில் அவை நிறைவேற்றப்படவில்லையென மக்கள் கவலை தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று பிரதேச சபை மாநகரசபையாக மாற்றப்படும்போது, ஏறாவூர் பிரதேச சபை நகர சபையாக மாற்றப்படும்போது ஏன் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையை நகரசபையாக மாற்ற முடியாது எனவும் இங்கு கேள்வியெழுப்பப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் எதிர்வரும் மாகாணசபை அமர்வில் இது தொடர்பில் பிரேரணையைக் கொண்டுவந்து எப்படியாவது அதனை நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்தார். (ச)

# வெல்லாவெளிப் பிரதேசத்தில் மண் அகழ்வில் 2 நிறுவனங்கள்

## பொது அமைப்புகள் முறைப்பாடு

மட்டக்களப்பு,ஜூன் 20

வெல்லாவெளிப் பிரதேசத்தில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவுக்குச் சொந்தமான நவலோக நிறுவனம் மண் அகழ்வில் ஈடுபட்டிருக்கின்றது. இந்த நிறுவனம் தினசரி வெளிமாவட்டங்களுக்கு மண்ணை எடுத்துச் செல்கின்றது.

- இவ்வாறு வெல்லாவெளிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற போரதீவுப்பற்று பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அந்தப்பிரதேச பொது அமைப்புகள் முறைப்பாடு செய்துள்ளன.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், தமது கிராமங்களிலிருந்து தினமும் பெருமளவில் மணல் அகழ்ந்து செல்லப்படுகின்றது என முறைப்பாடு செய்தனர். இந்த மண் அகழ்வில் முக்கியமாக ஈடுபடுவது நவலோக மற்றும் மகா என்ற நிறுவனங்களாகும் என சுட்டிக் காட்டிய பொதுமக்கள், இதனை தடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர்.

மண் எடுப்பதாக இருந்தால் பிரதேச செயலகத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். ஆனால், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவுக்குச் சொந்தமான நவலோக நிறுவனமும், மகா நிறுவனமும் நேரடியாக கொழும்பில் உள்ள பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் வந்து லொறிகளில் மண்ணை எடுத்துச் செல்கின்றன. இதனைப் பொலிஸாரோ, இராணுவத்தினரோ தடுப்பதில்லை என்றும் பிரதேச மட்ட அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் உள்ளூரில் உள்ள மக்கள் தமது தேவைகளுக்கு மண்ணை எடுக்க முடியாமல் உள்ளனர். தமது கிராமம் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் அப்பிரதேச அமைப்புகள் இந்தக் கூட்டத்தில் சுட்டிக் காட்டின. (ச)

# பிரதிப் பொலிஸ் மா அதிபர் நியமனம்

மூதூர், ஜூன் 20

கிழக்கு மாகாணத்துக்கான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக எச்.என்.பி. அம்பவெல நியமிக்கப்பட்டுள்ளார்.

கண்டி மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்றிய அம்பவெல கிழக்கு மாகாணத்துக்கான பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரை வரவேற்கும் நிகழ்வு மட்டக்களப்பிலுள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் மா அதிபர் விஜேகுணவர்தன, மட்டக்களப்பு மாவட்டப் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச)

# ஊவா, மொனராகலை மாவட்டத்தில் புற்றுநோய் நிவாரண அமைப்பு

பதுளை,ஜூன் 20

பதுளை, மொனராகலை மாவட்டத்திலுள்ள புற்று நோயாளர்கள் நன்மைகருதியும், இவர்களுக்கு உதவியளிக்கும் பொருட்டும் 'ஊவா வெல்லஸ்ஸ புற்று நோய் நிவாரணம்' என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என பதுளை வைத்தியசாலையின் புற்றுநோய்ப் பிரிவு வைத்திய நிபுணர் ஜாம குணதிலக்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வைத்தியசாலையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

பொதுவாக பதுளை, மொனராகலை ஆகிய இரு மாவட்டங்களிலும் புற்றுநோயாளர்கள் பெரும்பாலும் நோய் ஏற்பட்டு குறைந்த பட்சம் நான்கு, ஐந்து மாதங்கள் கடந்த பின்னரே இங்கு வருகின்றனர்.

நோயின் ஆரம்பக் கட்டத்திலேயே வருவார்களானால் அவர்களை மிகவும் இலகுவாக குணப்படுத்த முடியும். இந்த நோய் குறித்து மக்களுக்கு போதிய தெளிவின்மையே இதற்குக் காரணம் எனலாம்.

புற்றுநோயை ஆரம்பத்திலேயே இனங்கண்டு சிகிச்சையளித்தால் குணப்படுத்துவது இலகுவாகுவதுடன், நோயாளர்களும் தமது வீண் சிரமங்களை தவிர்த்துக்கொள்ள முடியும். செலவையும் குறைத்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

கடந்த காலங்களில் மொனராகலை, பதுளை மாவட்டத்திலுள்ள புற்றுநோயாளிகள் சிகிச்சைக்காக மஹரகம வைத்தியசாலைக்கே செல்லவேண்டும். ஆனால் அந்த நிலைமை தற்போது இல்லை. புற்றுநோய்க்குத் தேவையான மருந்துகள் உட்பட அனைத்து வசதிகளும் பதுளை வைத்தியசாலையின் புற்று நோய்ச் சிகிச்சைப் பிரிவில் உள்ளன.

அத்துடன், பதுளை மொனராகலை மாவட்டத்திலுள்ள புற்றுநோயாளர்களின் நன்மை கருதி வெலிமடை, தியத்தலாவை, மஹியங்கனை, மொனராகலை ஆகிய மாவட்ட வைத்தியசாலைகளில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு வைத்தியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் வலி.கிழக்கு சைவசமய அருள் நெறி மன்றமும் இணைந்து நடத்திய திருஞான சம்பந்தர் குருபூசை விழாவில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் லலீசன் உரையாற்றுகிறார்.

# மாணவர்கள் கணித பாடத்தில் காட்டும் ஈடுபாடு எதிர்காலத்தை வளம்படுத்துவதற்கு உதவும்

## வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்

சுன்னாகம் ஜூன் 20

மாணவர்கள் கணித பாடத்தில் ஈடுபாடு காட்டுவது எதிர்காலத்தை வளம்படுத்தும் என்று தெரிவித்தார். வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன்.

கணித பாட உதவிக்கல்லிப் பணிப்பாளராகக் கடமையாற்றி இளைப்பாறிச் செல்லும் சி.சுகுமாரனது சேவை நயப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை ஆசிரிய ஆலோசகர் வே.சிவகுமாரன் தலைமையில் நடைபெற்றது.

அந்த நிகழ்வில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

கணிதபாடம் கற்கும் மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் கஷ்டமான பாடம் என்ற ஒரு கருத்து நிலவுகின்றது.

ஆனால் பல ஆசிரியர்கள் மாணவர்கள் விரும்பிக் க்ற்கும் வகையில் கணித பாடத்தைக் கற்பித்து அவர்கள் உயர் புள்ளிகள் பெறவைத்துள்ளனர்.

கணித பாடத்தில் சித்தியடைந்தால் பல உயர் கல்வி வாய்ப்புக்கள் பெற்றுக் கொள்ளலாம். எனவே, மாணவர்கள் கணித பாடத்தில் ஈடுபாடு காட்டுவதற்கு வழி செய்யப்பட வேண்டும்.

வலிகாமம் வலயம் கணித பாடத்தில் தேசிய ரீதியான சித்தி வீதத்தை விட உயர்வாக உள்ளதெனில் அதற்குப் பிரதான கர்த்தாவாக விளங்கியவர் ஓய்வு பெற்றுச் செல்லும் சுகுமாரனே ஆவார்.

எடுத்துக் கொண்ட கருமத்தைச் செவ்வனே நிறைவேற்றி முடித்த பின்னர்தான் அவர் அடுத்த வேலையில் இறங்குவார். எல்லோருடனும் இணக்கமாகப் பழகி கணித பாட ஆசிரியர்களை அவர் வழி நடத்தினார். - என்றார்.

இந்த நிகழ்வில் வலிகாமம் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் ச.சிவநேஸ்வரன், ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஆறுதிருமுருகன் உட்பட பலரும் உரையாற்றினர். (ம-38)

# ஆங்கில மொழிக் கல்வி அறிவு வடபகுதியில் வீழ்ச்சியடைகிறது

## கலைமகள் சர்வதேசப் பாடசாலை இயக்குநர்

யாழ்ப்பாணம் ஜூன் 20

ஆங்கில மொழிக்கல்வி அறிவு வடபகுதியில் வீழ்ச்சியடைந்து வருகின்றது. ஆங்கிலக் கல்வி வளர்ச்சியை ஏற்படுத்த எமது கல்லூரி திட்டமிட்டு செயற்பட்டு வருகிறது.

கலைமகள் சர்வதேச கல்லூரி இயக்குனர் சி.கௌரிபாலன் இவ்வாறு தெரிவித்தார்.

கலைமகள் சர்வதேச கல்லூரியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடமாகாணத்தில் ஆங்கிலக் கல்வியில் நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவடைந்து காணப்படுகிறது.

இந்த வகையில் ஆங்கிலக் கல்வியை வளர்க்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இந்த வகையில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் ஆங்கில அறிவை பெறும் நிமிர்த்தம் குறைந்த செலவில் கல்வியைக் கற்பிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

எமது இன அடையாளத்தை பேணும் நிமிர்த்தம் தமிழ், சமயம் என்பவற்றைத் தமிழில் கற்பித்து வருகின்றோம். இன்றைய சூழலில் கல்வி மூலமாக அரசியல் சமூக கலாசாரத் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். கல்விமூலமாகவிடுதலை பெற்றுக் கொள்ள வேண்டும். தற்போது எமது கல்லூரியில் 278 பேர் கல்வி கற்று வருகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் ஆங்கில மொழித்தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை உருவாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறோம். - என்றார். (ம-319)

# தெல்லிப்பழைக் கோட்டத் தமிழ்த் தினப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 20

தெல்லிப்பழைக் கோட்ட மட்டத் தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் தொடர்ந்து உதயனில் வெளியாகி வருகின்றன. அவற்றின் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகிறது .

**நாட்டிய நாடகம்**

**அளவெட்டி அருணோதயக் கல்லூரி**

தி. பௌசிகா, அ.தாட்சாயினி, சி.அகலிகை, இ.சாலிகா, பா.கிருஸ்ரிகா, ஜெ.சுபேகா, மு.ஜன்சிகா, த.துளசிக்கா, மு.நிறோஜா, ம.கஸ்தூரி, சு.கீர்த்திகா, த.ரேணுகா,

**நாட்டார் பாடல்**

**வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்**

கோ.மோகன்யா, ச.மேனகா, சி.தியானிதா, உ.கயன்சிகா, இ.கிரிஜா, வி.நிர்மலா.

**மயிலிட்டி றோ.க.த. பாடசாலை**

ஆ.லக்சனா, ஜெ.சுகன்யா, ர.அனிற்றா, யூ.குயின்ரன், த.பிரதீப், பு.நிக்சன்.

**குட்டியப்புலம் அ.த.க.பாடசாலை**

றோ.மேரிசுகன்யா, சி.கஜேந்தினி, சு.சுஜாதினி, வே.வேணுசா, ப.ஜெயதர்சா.

**இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்**

செ.மேரிசந்திரமலர், அ.ஜெஜீபா, செ.கஜேந்தினி, இ.நிதர்சா, ச.லக்சிகா, சி.கிருஷ்ணவேணி, சி.வட்சாயினி, செ.வியோன்லீசன், சி.தேர்வட்சன், ச.ஜினோஜன், நா.கம்சிகா, சி.சிந்துஜா.

**வில்லுப் பாட்டு**

**தெல்லிப்பழை யூனியன் கல்லூரி**

ச.அபிராம் சங்கர், ம.நிரோசன், ஸ்ரீ.பபீந்திரன், லோ.பிரதாஸ், கு.சாயிசங்கர், த.பிரியங்கன், ச.சதுர்சன்.

**தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி**

வ.மகாந்தன், இ.திகர்சன், சி.இராகுலன், ம.உணதீஸ்வரன், பா:கபில்ராஜ், ம.தர்சன், தி.அரண்ராஜ்

**விவாதம்**

**தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி**

இ.கஜீபன், கே.கௌசிகன், சு.நிருசா.

**தமிழறிவு வினாவிடை**

**தெல்லிப்பழை யூனியன் கல்லூரி**

சொ.தருமதன், சு.தசாங்கன், ம.நிருஷா, சௌ.பிரதர்சனா, க.கஜேந்தினி.

**தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி**

வி.கல்யாணி, இ.மருந்தா, செ.சுவேதா, க.யறூசனா, சி.மகிழினி. (ம-38) (முற்றும்)

## கண் சிகிச்சை முகாம்

தென்மராட்சி, ஜூன் 20

அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தினர் சங்கப் பணியாளர்கள் அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள் ஆகியோருக்கான இலவச கண் சிகிச்சை முகாமை அண்மையில் சங்க மண்டபத்தில் நடத்தினர்.

சாவகச்சேரி லக்ஸறி மூக்குக் கண்ணாடியக நிறுவன உத்தியோகத்தர்களால் நடத்தப்பட்ட கண் பரிசோதனையின் போது பார்வையில் குறைபாடு காணப்பட்டவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை வழங்கப்பட்டன.

சங்க நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட மூக்குக் கண்ணாடிகளை சங்கத் தலைவர் எஸ்.காந்தராசா பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு வழங்கியதாக சங்கப் பொதுமுகாமையாளர் பொ.செல்வராஜா தெரிவித்தார். (ம-207)

## நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாணம் அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலைமையப்பு (சொண்ட்) நிறுவனத்தால் மகளிரால் உற்பத்தி செய்யப்படும் பொருள் விற்பனை நிலையம் வெகு விரைவில் அமைக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட மகளிரின் பொருள்களில் சந்தை வாய்ப்பை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் நோக்குடனும் இந்த நிலையம் ஆரம்பிக்கப் படவுள்ளது.

உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்த ஆர்வமுடைய மகளிர் உற்பத்தியாளர்கள் தொடர்பு கொள்ளுமாறு நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ச.செந்துராசா அறிவித்துள்ளார். (ம-313)

## அபராதம் விதிப்பு

மதுபோதையில் வாகனம் செலுத்திச் சென்ற கல்வியங்காட்டைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு யாழ். நீதிமன்றம் மூவாயிரத்து ஐநூறு ரூபாவை அபராதமாக விதித்தது.

மதுபோதையில் வாகனம் செலுத்திச்சென்ற பிரஸ்தாப நபரை கோப்பாய் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிபதி ஏ.ஆனந்தராஜா குற்றவாளிக்கு மூவாயிரத்து ஐநூறு ரூபாவை அபராதமாக விதித்துத் தீர்ப்பளித்தார். (த-4)

## நியமனங்கள்

நாவற்குழி,ஜூன் 20

பளை தபாலகத்துக்கு தபாலதிபராக திருமதி.சிவானி கௌரிதாசன் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் கைதடி வடக்கு உப தபாலதிபராக இருந்து பதவி உயர்வு பெற்றுள்ளார். (ம - 121)

* * *

நாவற்குழி,ஜூன் 20

கைதடி வடக்கு உப தபாலகத்தின் உப தபாலதிபராக இராஜேஸ்வரன் பகிரதன் நியமனம் பெற்றுள்ளார். உப தபாலதிபர்களை ஆள்சேர்ப்பதற்காக நடத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்ததன் அடிப்படையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ம-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
நீண்ட நாள்களாக எண்ணத்தில் இருந்த விடயங்களை இன்று நிறைவேற்ற முற்படுவீர்கள். பெண்கள் வழியில் மனதிற்கு இனிய உதவி கிடைக்கலாம். ஆரோக்கியக் குறைபாடுகளைத் தவிர்க்க சிலரிடம் ஆலோசனை கேட்பீர்கள். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். உதிரி வரவுகள் வரலாம்.

**இடபம்:**
உங்களின் செயற்பாடுகளை மற்றவர்கள் பாராட்டலாம். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். வெளியூர் பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். உடன் பிறப்புகள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். சிலர் உங்களிடம் கடன் கேட்கலாம். நண்பர்களுடன் கொண்டாட்டம் உண்டு.

**மிதுனம்:**
எங்காவது புறப்பட்டுச் செல்லும் நேரத்தில் வாகனங்கள் பழுதாகி தொந்தரவு கொடுக்கலாம். மற்றவர்கள் மீதுள்ள கோபத்தை நண்பர்கள் சிலர் உங்கள் மீது காட்டலாம். சிறிய வேலை ஒன்றுக்காக பல முறை அலையலாம். ஒய்வாக இருக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு யாராவது வந்து தொந்தரவு கொடுக்கலாம்.

**கடகம்:**
எங்காவது வெளியில் செல்லும் போது உறவினர்கள் சிலரைப் பார்க்கலாம். சொத்து வாங்கல் கொடுக்கல் விவகாரங்களில், முன்னேற்றம் உண்டு. சொந்த பந்தங்களுக்காகச் சில செலவுகளைச் செய்யலாம். பிரியமானவர்கள் கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். வீட்டைச் சீரமைப்பதில், அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**சிங்கம்:**
மனதை குடைந்து கொண்டிருந்த பிரச்சினை ஒன்றுக்கு தெளிவான முடிவு காண்பீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். சிலரிடம் கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம்.

**கன்னி:**
மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலை ஒன்று முடியாமல், அதை நீங்களே செய்ய நேரிடலாம். பெண்கள், பிள்ளைகள் வழியில் திடீர் செலவு ஏற்படும். உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். முக்கிய நிகழ்ச்சிகளுக்காக வெளியூர் பயணங்கள் செல்லலாம். உடல் ரீதியான சிறு உபாதைகளைச் சந்திக்கலாம்.

**துலாம்:**
வீண் பிடிவாதத்தால் சிலரின் அதிருப்திக்கு ஆள்படலாம். உறவினர்கள் சிலர் அவர்களின் பிரச்னையை சொல்லி உங்களிடம் உதவி கேட்கலாம். நீங்கள் பெரிதும் எதிர்பார்த்த ஒருவர் உங்களை கண்டு கொள்ளாமல் புறக்கணிக்கலாம். கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தை செலவிடலாம்.

**விருச்சிகம்:**
உங்களின் யோசனைகளை பிறர் ஏற்க வேண்டும் என, கட்டாயப்படுத்துவீர்கள். மற்றவர்கள் உங்களைப் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காகவே சில காரியங்களைச் செய்வீர்கள். பாதகமாக நடப்பது போல தோன்றிய விடயம் இறுதியில் சாதகமாக அமையும். வெற்றிகரமான நாள்.

**தனுசு:**
பிள்ளைகள் தொடர்பான விடயங்களுக்காக கணிசமான பணத்தைச் செலவிடலாம். மற்றவர்களுக்குக் கிடைத்த வாய்ப்பு ஒன்று உங்களுக்குக் கிடைக்கவில்லையே என மனவருத்தம் அடைவீர்கள். உறவினர்களின் உபசரிப்புகளால் மகிழ்ச்சி, சந்தோஷம் அடைவீர்கள். பிரியமான சிலர் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். வாக்குவாதத்தில் ஈடுபடலாம்.

**மகரம்:**
கௌரவம், மரியாதை பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். சில விடயங்களில் பிரச்னைகளைச் சந்தித்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நடந்து கொள்வீர்கள். சுகமான, சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். கனவுகள் பலிக்கும் நாள்.

**கும்பம்:**
சந்தோஷம் அல்லது சங்கடம் தரும் செய்தியைக் கேட்கலாம். பண விடயங்களில் சிலரிடம் கடும் வாக்குவாதம் செய்யலாம். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களிடம் கவனம் அவசியம். உல்லாசமான செயற்பாடுகளால் வம்பில் மாட்டிக் கொள்ளலாம். மற்றவர்களுக்காக உங்களின் சேமிப்பணத்தை செலவு செய்யலாம்.

**மீனம்:**
நண்பர்கள் சிலருக்கு சரியான நேரத்தில் உதவி செய்து அவர்களின் அன்பைப் பெறுவீர்கள். சீக்கிரமே துவங்க நினைத்த வேலை ஒன்றை, வேறொரு வேலை காரணமாக தாமதமாகத் தொடங்கலாம்.. பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெற்று மகிழ்ச்சி அடைவர். விருப்பமான உணவ் வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும்.

# ஜெனீவா-
# கட்டுநாயக்க-
# முள்ளிவாய்க

*கடந்த மே 30 ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமான மனித உரி*
*கண்ணோட்டமே இது. மேற்படி பேரவையின் கூட்டத் தொடர், இ*
*வர்த்தக வலயத்தில் அண்மையில் நிகழ்ந்த அடக்குமுறை, அராஜக*
*டத்தில் முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த கொடூரங்கள் ஆகியவற்றை ஒ*
*ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய ராவய பத்திரிகைக்கு எழுதிய*

கடந்த மே மாதம் 30 ஆம் திகதி மனித உரிமைகள் பேரவையின் 17 ஆவது கூட்டத் தொடர் ஜெனீவாவில் ஆரம்பமானது. அன்றைய கூட்டத் தொடரின் ஆரம்பத்தில் சட்டத்துக்கு முரணான படுகொலைகள் தொடர்பாக ஐ.நா வின் விசேட பிரதிநிதி கிறிஸ்தோ கயின்ஸ் உரையாற்றுகையில் - ''எதிர்ப்புக்களை எதிர்கொள்வது தொடர்பாக அதிகாரத்தைப் பிரயோகிக்கும் சந்தர்ப்பங்களில் அரசுகள் சட்டத்துக்கு அமைவாகவே செயற்பட வேண்டியுள்ளது. அத்தகைய சந்தர்ப்பங்களில் உயிரிழப்புக்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பெரும் சவாலாக ஆகிவிடக்கூடும்'' எனத் தெரிவித்துள்ளார்.

**மாறுபட்ட விதத்தில் கட்டுநாயக்க சம்பவம்**

ஜெனீவாவில் இடம்பெற்ற பேரவையின் கூட்டத்தொடரில் கிறிஸ்தோ கயின்ஸ் அந்தக் கருத்தைத் தெரிவித்துக்கொண்டிருந்த வேளையில் அக்கருத்துக்கு முற்றிலும் மாறானது எனக் கருதத்தக்க சம்பவம் ஒன்று இலங்கையின் கட்டுநாயக்க முதலீட்டு வலயத்தில் நிகழ்ந்துகொண்டிருந்தது.

தமது தொழில்சார் பிரச்சினை ஒன்றை முன்னிறுத்தி உழைக்கும் வர்க்கம் சாத்வீக எதிர்ப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டிருந்தது. முதலீட்டு வலயம் ஒன்றான கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய வீதிகளில் இறங்கி அவர்கள் தமது அந்த எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தினர். பல ஆயிரம் தொழிலாளர்கள் தமது முக்கியமான கோரிக்கை ஒன்றுக்காக வீறுகொண்டு எழுந்திருந்தனர்.

அவர்களை அடக்கி ஒடுக்கி விடுவதற்காக இலங்கையில் அதீதமாக அதிகாரகப் பலம் அங்கு பிரயோகிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அரச,பொலிஸ் படையின் துப்பாக்கிகள் அவர்கள் மீது திருப்பப்பட்டன. துப்பாக்கி ரவைகள் மழையெனப் பொழிந்தன. சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிராயுதபாணிகளான ஏராளமான தொழிலார்கள் காயங்களுங்கு உள்ளானார்கள். அங்கு சீறிப்பாய்ந்த துப்பாக்கி ரவைகளால் படுகாயமடைந்த 22 வயதான றொசான் சாணக்க பின்னர் உயிரிழந்தார்.

இங்கு, வரம்பு மீறிக் கட்டவிழ்த்துவிடப்பட்ட அதிகாரப் பலம் எந்தவொரு சவாலுக்கும் உள்ளாகி இருக்கவில்லை. கயின்ஸின் கருத்தும் இங்கு செத்துப் போனது மட்டுமல்லாமல், அரசுக்கு எதிராகக் கோஷமிட்ட றொஷான் சாணக்கவும் உயிரிழந்தார்.

இது இதற்கு 30 ஆண்டுகளுக்கு முன்னதாக 1981 ஆம் ஆண்டுக்கு எம்மை அழைத்துச் செல்கிறது. அந்த ஆண்டில் இடம்பெற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தின் போது, அரச வேட்டை நாய்களால் கொடூரமாகத் தாக்கப்பட்டு கொன்று போடப்பட்ட சகோதரன் சோமபாலாவுக்கு பின்னர் உழைக்கும் மக்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் படுகொலைகளுக்குள்ளான முதலாவது நபர் றொஷான் என்பது இங்கு முக்கியத்துவம் பெறுகிறது.

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றிக்கொண்டிருந்த ஐ.நாவின் விசேட பிரதிநிதி கிறிஸ்தோபர் கயின்ஸ் அத்தகைய சந்தர்ப்பங்களில் உயிர்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு முன்னுரிமை வழங்குவது எவ்வாறு என்பது பற்றி அப்போது விளக்கம் அளித்துக்கொண்டிருந்தார்.

**சாத்வீகப் போராட்டங்களுக்கு இடமளியாமை வன்முறைகளைத் தூண்டிவிடுகிறது**

உலக வரலாற்றில் இடம்பெற்றிருந்த அத்தகைய சந்தர்ப்பங்கள் பலதையும் அவர் தமது உரையில் சுட்டிக்காட்டினார். அத்தகைய சாத்வீகப் போராட்டங்களுக்கு இடமளிக்கப்படாதபோதுதான் அதை வன்முறைகளாக உருக்கொள்வதாகவும் அவர் தெளிவுபடுத்தி இருந்ததார். மக்களுக்கு இருக்கும் ஒன்றுகூடும் உரிமையை உறுதிப்படுத்தி வழங்குவதன் மூலம் மோதல்களை குறைத்துக்கொள்ள வாய்ப்பாக அமைகின்றது. இரத்தக் களரிகளைத் தடுத்துக்கொள்ள முடிகிறது எனவும் அவர் கருத்து வழங்கி இருந்தார்.

அவர் அந்தக் கருத்தை அங்கு முன் வைத்த அதே சந்தர்ப்பத்திலேயே பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள இலங்கையில் அடக்கு முறை ஆட்சியின் காரணமாகத் சாத்வீக எதிர்ப்புப் போராட்டம் ஒன்று கிளர்ச்சியாக வெடித்தது. அதை ஒடுக்கி விடுவதற்குத் துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டு அரச அடக்குமுறை பிரிதொரு கோணத்தில் உச்சப் படுத்தப்பட்டிருந்ததை அங்கு காணமுடிந்தது.

கிறிஸ்தோபர் ஹயின்ஸின் அடுத்த பிரவேசம் இலங்கையுடன் நேரடித் தொடர்பைக் கொண்டிருந்ததாக அமைந்திருந்தது. அது இலங்கை இறுதி யுத்தத்தின் போது நிகழ்ந்த மனிதப் படுகொலைகளைக் காட்டும் சனல்-4 வீடியோ தொடர்பானதாகும்.

அரசு - புலிகளுக்கு இடையில் இறுதிக் கட்ட மோதல்கள் உச்சமடைந்திருந்த முள்ளிவாய்காலின் வீடியோ எனவும் அதைச் சிலர் குறிப்பிட்டிருந்தார்கள். அங்குதான் இந்த இரு தரப்பு யுத்த மோதல்களின் இடையில் சிக்கிக் கொண்ட [illegible]யானான தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கில் [illegible]போயிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வீடியோவின் நீண்ட பிரதியொன்று தம்வசம் உள்ளதாகவும், அது ஐ.நா.அமைப்பினால் மேற்கொள்ளப் பட்ட பரிசீலனைகள் மூலம் நம்பகமான வீடியோ நாடாவே என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அங்கு வைத்து ஹயின்ஸ் தெரிவித்திருந்தார்.

இவை அலசிப் பார்க்கப்பட்ட மே 30 ஆம் திகதியன்று ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் போர்க் குற்றங்களைக் குறித்துக் காட்டும் அறிக்கையெனக் கூறப்படும் பான்கீ-மூனின் ஆலோசகர் குழுவினரின் அறிக்கையும் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது. ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை அந்த அறிக்கையை அடியொற்றிச் சென்று இலங்கையில் இடம்பெற்ற யுத்த மோதல்களின் இறுதிக் கட்டத்தில் நிகழ்ந்திருந்த மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளமை தொடர்பாகச் சுயாதீனமான விசாரணையொன்றின் அவசியம் பற்றி அங்கு வலியுறுத்தியிருந்தமையே அதற்குக் காரணமாயிருந்தது.

**மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லை என்ற மஹிந்த**

இலங்கையின் பிரதிநிதிகளாக அந்தப் பேரவையில் வீற்றிருந்த தூதுவர் கிஷேனுகா செனவிரத்னவும் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும் இவற்றை மறுத்துரைக்கும் பதிலுரைகளை ஆற்றினார்கள். யுத்த மோதல்களின் இறுதிக் கட்டத்தில் அரச படைகளினால் சாதாரணக் குடிமக்கள் படுகொலைக்கு உள்ளாகியிருக்கவில்லை என இவர்கள் இருவருமே அடித்துக் கூறினர். இவற்றைவிட ஒரு படி மேலாகச் சென்று ஒரு சந்தர்ப்பத்தில் கொழும்பில் உரையாற்றியிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எமது படையினர் ஒரு கரத்தில் துப்பாக்கிகளையும் மறுகரத்தில் மனித உரிமைகள் சாசனத்தையும் ஏந்தியவாறே யுத்தக்களம் சென்றனர். எனவே எமது சிப்பாய்கள் மூலமாக எந்தவொரு மனித உரிமை மீறல்களும் இடம்பெற்றிருக்கவில்லை. அதற்கான வாய்ப்பே இல்லை எனக் கூறியிருந்தார். இதை வைத்துப்பார்க்கும்போது, அது சம்பந்தமான எந்தவொரு தேடலுக்கும் அவசியமேயில்லையென அவர் மறைமுகமாகக் கோடி காட்டியுள்ளதாகவே கருத முடிகிறது.

ஆனால், அந்தக்கருத்துக்கு முற்றிலும் நேர்மாறாகவே கட்டுநாயக்க சம்பவத்தில் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. பொலிஸாரின் துப்பாக்கிப்பிரயோகம் காரணமாக உயிரிழந்த ரொஷானின் மரணத்துக்கான காரணங்களைக் கண்டறிவதற்கு முன்னாள் நீதிபதியொருவர் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார். அதுவும் ரொஷான் மரணித்து 24 மணித்தியாலங்கள் கடக்கு முன்னரே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல. இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் பாரதூரமானதொரு குற்றமாகக் கொள்ளப்பட்டு பொலிஸ்மா அதிபர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இதையொட்டிய மேலுமொரு நடவடிக்கையாகப் பெயரளவில் தானும் மேலும் பல பொலிஸ் அதிகாரிகளும் கூட கைது செய்யப்பட்டுள்ளனர். இவற்றைவிட, ரொஷானின் உயிரைக் காப்பாற்றுவதற்கு, அவரை வெளிநாடொன்றுக்கு கொண்டு செல்வதற்கு ஜனாதிபதி ஆயத்தங்களை மேற்கொண்டிருந்ததாகவும் ஊடகங்கள் தெரிவித்தன.

எந்த அளவு மாற்றமான நிலைப்பாடு இது? ஐ.நா. செயலாளர் பான் கீ-மூன் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களை நாம் இங்கு நோக்கியே ஆக வேண்டியுள்ளது. அதாவது, யுத்த மோதல்கள் தீவிரம் பெற்றிருந்த இறுதிக் கட்டத்தில் துப்பாக்கி ரவைகள், குண்டுகள் தாக்கிப் படுகாயங்களுக்கு உள்ளாகியிருந்த வன்னிப் பிரதேசத்தில் அந்த காயப்பட்ட அப்பாவிப் பொது மக்களுக்கு சிகிச்சைகளை

கட்டு
பொ
துப்
நிறை
கொ
இத
அ
தரா
கொ
தண்
வே
எதி

வழங்கத் தே
அனுப்பி
தாம
தெரிவித்து
உதவிகளை
தாதிருப்பன
மென்ற
களின் எண்
தாகவும், அ
அ
தமிழ் ம
அரசின் பு
அந்த யுத்த
பட்டிருந்த
அதிகாரிகள
கிட்டியவை
கட்டுநா
தாக்குதல்க
அடக்குமு
டத்தனமெ
எனவே, அ
தகுதி தரா
விதமாகத்
என்று சமு
திருக்கிறது
தில் அரசு
கொள்ள
நடவடிக்கை
இதுவே இன்
அதேபோ
சாத்வீகப் ே
ஸாரின் து
தமிழ் இனை
இதேபோன்
இடம்பெற்றிருந்த
நிற்கும் வி
வாய்க்கா
ஆயிரம் ம
பேசப்பட
தரப்பு சரி,

# ா-
# யக்க-
# வாய்க்கால்

*ஆரம்பமான மனித உரிமைகள் பேரவைத் தொடர் பற்றிய ...யின் கூட்டத் தொடர், இலங்கையின் கட்டுநாயக்க சுதந்திர ... அடக்குமுறை, அராஜகம் மற்றும் யுத்தத்தின் இறுதிக் கட் ...ரங்கள் ஆகியவற்றை ஒன்றுடன் ஒன்று இணைத்துப் பிரபல ... பத்திரிகைக்கு எழுதிய கண்ணோட்டத்தின் தமிழாக்கம்.*

ப்பினால்
ம்பகமான
ப்பட்டுள்
திருந்தார்.
தியன்று
ங்கையின்
அறிக்கை
சகர் குழு
ளப்பட்டி
ளை அந்த
வகையில்
ட்டத்தில்
ள்ளமை
பான்றின்
யே அதற்

5
ரவையில்
ரத்னவும்
வத்துரைக்
தல்களின்
தாரணக்
வில்ல
இவற்றை
ப்பத்தில்
மஹிந்த
துப்பாக்கி
த்தையும்
வே எமது
மை மீறல்
வாய்ப்பே
துப்பார்க்
லுக்கும்
கக் கோடி

றாகவே
க்கிவிடப்
ரயோகம்
ந்துக்கான
நீதிபதி
டுள்ளார்.
ள் கடக்கு
டுள்ளது.
ாகம் பார
ாலிஸ்மா
தையொட்
ல் தானும்
செய்யப்
உயிரைக்
ன்றுக்கு
ளை மேற்
தன.
? ஐ.நா.
குழுவின்
ளை நாம்
வது, யுத்த
ட்டத்தில்
டுகாயங்
தில் அந்த
சைகளை

**கட்டுநாயக்கவில் இடம்பெற்ற பொலிஸாரின் தாக்குதல்கள், துப்பாக்கிப் பிரயோகங்களையும் அடக்குமுறை அரசொன்றின் பீதி நிறைந்த துஷ்டத்தமொன்றாகவே கொள்ள வேண்டியுள்ளது. எனவே இதற்குப் பொறுப்பான அனைவருக்கும் தகுதி தராதரங்கள் கவனத்தில் கொள்ளப்படாத விதமாகத் தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்று சமுதாயம் எதிர்பார்த்திருக்கிறது**

வழங்கத் தேவைப்பட்ட மருந்து வகைகளை அங்கு அனுப்பி வைப்பதை அரசு வேண்டுமென்றே தாமதப்படுத்தியிருந்ததாக அந்த அறிக்கை தெரிவித்துள்ளது. அந்த விதம் நிவாரண உதவிகளை அனுப்பி வைப்பதை விரைவுபடுத்தாதிருப்பதை முன்னிட்டு இலங்கையரசு வேண்டுமென்றே வன்னியில் சிக்குண்டுள்ள தமிழ் மக்களின் எண்ணிக்கையை குறைத்துக் காட்டியிருந்ததாகவும், அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

**அரசின் புதுமையான நடவடிக்கை**

தமிழ் மக்கள் தொடர்பான அணுகுமுறையில் அரசின் புதுமையான நடவடிக்கை எதுவெனில், அந்த யுத்தத்தின் போது மனித உரிமைகள் மீறப்பட்டிருந்ததாகக் குற்றங்கள் சுமத்தப்பட்டிருந்த அதிகாரிகளுக்கு பதவி விலகல்களுக்குப் பதிலாகக் கிட்டியவை ராஜதந்திரப் பதவி நியமனங்களே.

கட்டுநாயக்கவில் இடம்பெற்ற பொலிஸாரின் தாக்குதல்கள், துப்பாக்கிப் பிரயோகங்களையும் அடக்குமுறை அரசொன்றின் பீதி நிறைந்த துஷ்டத்தனமொன்றாகவே கொள்ள வேண்டியுள்ளது. எனவே, அதற்குப் பொறுப் பான அனைவருக்கும் தகுதி தராதரங்கள் கவனத்தில் கொள்ளப்படாத விதமாகத் தண்டனைகள் வழங்கப்படவேண்டும் என்று சமுதாயம் எதிர்பார்த்திருக்கிறது. இது விடயத்தில் அரசு அவசியம் மேற்கொள்ள வேண்டியுள்ள நடவடிக்கையொன்றாகவும் அது கருதப்படுகிறது. இதுவே இன்றைய தெற்கின் நிலைப்பாடாகும்.

அதேவேளை, யாழ்ப் பாணத்தில் இதேவிதமான சாத்வீகப் போராட்டமொன்று இடம்பெற்று பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தின் காரணமாகத் தமிழ் இளைஞரொருவர் உயிரிழந்திருப்பாரானால் இதேபோன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு இடமிருந்திருக்குமா? என்பதும் இங்கு தொக்கி நிற்கும் வினாவொன்றாகும். அதேபோன்று முள்ளிவாய்க்காலைச் சூழவும் கொன்று போடப்பட்ட பல ஆயிரம் மக்கள் பற்றி ஏதாவது பேசப்படுகிறதா? பேசப்படக்கூடுமா? அது தொடர்பாக எந்தவொரு தரப்பு சரி, எவருக்காவது என்றாவது ஒரு நாள் தண்டனைகளை வழங்க இடமுள்ளதா? குறைந்த பட்சமாக அது தொடர்பாக பகிரங்கமானதுமான - சுயாதீன விசாரணையொன்று இடம்பெறக்கூடுமா? இவை நியாய தர்மத்துடன் எடுக்கப்படும் வினாக்களாகும்.

ஆனாலும் 1988 - 1990 என்ற காலகட்டத்தில் கிளர்ச்சிகளோடு சிவில் யுத்தமொன்றும் தெற்கில் இடம்பெற்றது என்பதும், அந்த யுத்தத்தில் படுகொலையுண்ட சிங்கள இளைஞர்களின் சமூகப் புதைகுழிகளைத் தேடுவதற்கும் காணாமல் போனவர்களைத் தேடிக்கண்டறியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

ஜெனீவாவின் இந்த மனித உரிமைகள் பேரவைத் தொடரில் இலங்கை தொடர்பாக எழு கின்ற அனைத்து விடயங்களும் போன்றே இந்தக் காரணியைச் சூழ்ந்தவைகளாகவே அமைந்திருந் தன. யுத்தத்தின் இறுதி நாள்களில் இலங்கையில் இடம்பெற்றுள்ளதாகக் குற்றம் சுமத்தப்படும் மனித உரிமைகள் பாரதூரமான விதத்திலும் மிகப் பெருமளவிலும் மீறப்பட்டுள்ளன என்பது பற்றிய முறைப்படியான விசாரணயொன்று அவசியமானதா? இல்லையா? என்ற வினாவுக்கும் கூட அத்தகைய ஒன்றுக்கு அவசியமேயில்லை என்ற பதிலே கிட்டுகிறது. தற்போது இலங்கையில் அது தொடர்பாக நிகழ்ந்து வரும் விசாரணைகள் திருப்திகரமானவையே - போதுமானதே என்றும் அடித்துக் கூறப்படுகிறது.

**முறையான விசாரணை தேவை**

பாரதூரமான விதத்தில் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளமை தொடர்பாக முறைப்படியான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டேயாக வேண்டுமென்ற யோசனையொன்றை முன்வைத்துள்ள நிபுணர்குழுவின் அறிக்கையையும் கூட இலங்கையரசு கடுமையாகச் சாடியுள்ளதோடு, அதை முற்றாக நிராகரித்துமுள்ளது. அதற்குக் கண்டனம் தெரிவிக்கும் அழுத்தங்களை விடுப்பதற்கும் அரசு பகீரதப்பிரயத்தனங்களில் இறங்கியது. தன்னால் முடிந்த அளவுக்கு அனைத்து நாடுகளையும் ஏவிவிட்டு அந்த அறிக்கையைக் கண்டிப்பதே அரசின் குறிக்கோளாக இருந்தது.

இலங்கையின் இந்த நிலைப்பாட்டை முழுமையாக ஏற்றுக்கொண்டவை பாகிஸ்தான், கியூபா, சீனா, ஈரான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் மட்டுமே. அதேவேளை இலங்கையின் அண்டை நாடுகளான மாலைதீவு, நேபாளம் மற்றும் இந்தியா என்பன அத்தகைய ஒத்துழைப்பை வழங்க முன்வரவில்லை. இங்கு நடுநிலைமை நின்று கருத்து வெளிப்படுத்தியிருந்த பங்களாதேஷ், உள்நாட்டில் என்றாலும் முறைப்படியான விசாரணையொன்று தேவை என்று வலியுறுத்தியிருந்தது. நாடுகளின் சுயாதிபத்தியத்துக்கு மதிப்பளிக்க வேண்டிள்ளது என்றவாறு கருத்து வெளியிட்டிருந்த ரஷ்யா, பெருமளவில் மனித உரிமைகள் மீறப்பட்டிருக்குமானால் அது தொடர்பாகத் தண்டனைகள் வழங்கப்படல் வேண்டும் எனவும், அதுவும் ஆக்கபூர்மானதும் நடுநிலை கொண்டதாகவும் இடம் பெறவேண்டியுள்ளது எனவும் தெரிவித்திருந்தது.

அணிசேரா நாடுகளின் அமைப்பிலிருந்து இலங்கைக்குச் சார்பான எந்தவொரு கருத்தும் வெளியிடப்பட்டிருக்கவில்லை. இது விடயத்தில் இந்தோனேஷியாவும், ஜப்பானும் கூட வாய் திறக்கவில்லை.

தென்னாபிரிக்காவைப் பொறுத்தவரையில் கூட நிபுணர் குழுவின் அறிக்கையை அது ஏற்றுக் கொண்டுள்ளது. மனித உரிகைள் ஆணையாளர் மட்டுமல்லாது நவநீதம்பிள்ளை தெரிவித்திருந்த கருத்துக்களை ஏற்றுக்கொண்டே அது கருத்து வெளியிட்டிருந்தது. ஐரோப்பிய ஒன்றியத்தின் தற்போதைய தலைமைத்துவத்தை ஏற்றுள்ள நாடான ஹங்கேரியும் கூட நிபுணர் குழுவின் அறிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளதோடு சுயாதீனமான விசாரணை ஒன்றின் அவசியம் பற்றி வலியுறுத்தியுள்ளது. அமெரிக்காவும் இலங்கை தொடர்பாக நிபுணர்குழு முன்வைத்திருந்த அறிக்கையைப் பாராட்டியதோடு நில்லாது பொறுப்புக் கூறுதல் மட்டுமல் லாது முறையாக விசாரணை யொன் றின் அவசியம் பற்றியும் கடுமையாக வலியுறுத்தியிருந்தது.

இதிலிருந்து இலங்கையரசின் பகீரதப்பிரயத்தனத்தின் பெறுபேற்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். குறிப்பிட்டுக் கூறுவதானால் மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை யின் கருத்தை அங்கீகரித்து கருத்து வழங்கியிருந்த அனைத்து நாடுகளும் அவரைப் பாராட்டத் தவற வீல்லை. அதேவேளை, இலங்கையின் சார்பில் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் கலந்து கொண்டிருந்த தூதுவர் திருமதி கிஷேனுகா செனவிரத்ன, நவநீதம்பிள்ளை அவர் வகிக்கும் பதவிக்கு சற்றுப் பொருத்தமற்றவர் எனத் தெரிவித்திருந்தார். இது இலங்கையரசின் தூதுவரொருவர் நவநீதம்பிள்ளைக்கு விடுத்திருந்த கடுமையான தாக்குதலொன்றாகக் கருதப்பட்டது.

சுருக்கமாகக் கூறுவதானால் ஜெனிவா 17 ஆவது மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்குக் கிட்டியிருந்த உச்ச பலாபலன் எதுவுமேயில்லை.

**தமிழில்: சரா**

# கலியுகம்



ஒரு தந்தை மகனைப் பார்த்து "கடைக்கு போய் பத்திரிகை வாங்கிக் கொண்டு வா" என்றார். "அதற்கு வேறு ஆளைப்பாருங்கள்" என்று சொல்லிவிட்டுப் போகிறான் மகன்.

"என்ன?உங்கள் பையன் இப்படிச் சொல்லிவிட்டுப் போகிறானே?"என்றார் ஒருவர் "அவனைச் சொல்லிக் குற்றமில்லை; கலியுகம்; அது தான் அப்படிக் கூறிவிட்டுப் போகிறான்" என்றார் தந்தை.

இந்த யுகங்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் தெரியவில்லை; இருந்தாலும் அதைப் பற்றி என்ன என்ன சொல்கிறார்கள் என்று தெரிந்து கொள்வதில் தப்பில்லை.

இப்போது வருஷம், மாதம், வாரம், நாள் இப்படி இருக்கிற மாதிரி யுகங்கள் நான்கு இருக்கின்றன. வருடம், மாதம் வாரம் திகதியை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. ஏனென்றால் அவையெல்லாம் நாம் இருக்கும் காலத்துக்குள் வந்து போகின்றன. யுகங்கள் அப்படியல்ல போனவருடம் உன்னை இலங்கையில் பார்த்தேன் என்று கூறமுடியும். ஆனால், போன யுகத்தில் உன்னைக் கண்டேன் என்று கூற முடியுமா? எந்தெந்த யுகங்கள் எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்பதற்கு மேகாதிதி என்பவர் விளக்கம் கொடுத்தார். அவருடைய கணிப்புப்படி கிருதயுகம் 4800 வருடங்கள்; திரேதாயுகம் 3600 வருடங்கள்; துவார யுகம் 2400 வருடங்கள், கலியுகம் 1200 வருடங்கள்.

சாஸ்திர ரீதியாக ஆராய்ச்சி செய்தால் வேறு சிலர் வேறு மாதிரியாகவும் கணக்குச் சொல்கிறார்கள். அவர்களின் கணக்குப்படி வருடங்கள் 1000,2000,3000,4000 என்று வருகிறது. இது எப்படியோ இருந்து விட்டுப் போகட்டும். சுமாராக அறுபது வருடங்களுக்கு முன்னால் பரமஹம்ஸ ஸ்ரீராஜ நாராயணவுட் சாஸ்திரி என்பர் ஒரு நூல் எழுதினார். அவர் நிறைய ஆராய்ச்சியெல்லாம் செய்துவிட்டு என்ன கூறியிருக்கிறார் தெரியுமா?

1943 ஒகஸ்ட் முதல் திகதி கலியுகம் முடிந்து கிருதயுகம் பிறந்துவிட்டது என்றார். பாகவதசுலோகப்படி சூரியன்,சந்திரன், குரு, பூச நட்சத்திரங்கள் எல்லாம் சமகாலத்தில் ஒரே இராசியில் பிரவேசிக்கின்ற போது அல்லது; சந்திரன்- சூரியன்,குரு இந்த மூன்றும் பூச நட்சத்திரத்தில் ஒரே ராசியில் ஒரேநேரத்தில் சேரும்போது கிருதயுகம் ஆரம்பமாகும்.

அந்த பூரணயோகம் 1943 ஒகஸ்ட் 1ம்திகதி வந்துவிட்டது. இதுதான் இவர் கூறும் கணக்கு.

இருந்தாலும் கிருதயுகத்தின் முழுப்பலனும் கிடைப்பதற்கு 100வருடங்கள் ஆகுமாம். கிருதயுகத்தில் ஜனங்களுக்கு நோய்கள் வராதால் அவர்கள் கோரிக்கையெல்லாம் பூர்த்தியாகும். சனங்களின் ஆயுள் 400 வருடங்களாம். அதுக்கப்புறம் மறுபடியும் யுகம் மாற தர்மத்தின் அளவு குறைய குறைய ஆயுளும் குறையுமாம்.

கிருகயுகத்தில் ஒரேமதம், ஒரே கடவுள் என்கிற நிலைமைக்கு உலகம் வந்து விடுமாம். தருமர் காலத்தில் நடந்த கதை ஒன்று உண்டு. அது துவாரபர யுகத்தின் கடைசிக் கட்டம்.

ஒருவர் தன்னுடைய நிலத்தை இன்னொருவனுக்கு விற்றார். நிலத்தை வாங்கியவன் அதில் உழவு செய்ய ஆரம்பித்தான். அதற்காக நிலத்தை உழுதபோது அதிலிருந்து ஒரு புதையல் கிடைத்தது. உடனே அந்தப் புதையலை எடுத்துக்கொண்டு அவன் நிலத்தைத் தனக்கு விற்றவனிடம் சென்றான். "இதோ பார் ; இந்தப் புதையல் உங்களுக்குத் தான் சொந்தம், நீங்கள் நிலத்தைத் தான் எனக்கு விற்றீர்கள்; புதையலை அல்ல; புதையலை எடுத்துக் கொள்ளுங்கள் என்றார்.

ஆனால் நிலத்தை விற்றவன் அதை வாங்க மறுத்துவிட்டான். "இந்தப் புதையல் உங்களுக்குத் தான் சொந்தம் எப்போது நிலத்தைவிற்றுவிட்டேனோ அப்போதே இந்தப் புதையலையும் விற்றுவிட்டதாகத் தான் அர்த்தம்" என்று கூறினான்.

இரண்டு பேரும் தருமரிடம் போய்த் தங்களுடைய விவகாரத்தை சொல்கிறார்கள். இவர்களுக்கு என்ன தீர்ப்பை வழங்குவது என்று தெரியாமல் தருமர் முழிக்க ஆரம்பித்தார்.

கடைசியில் "சரி ஒரு பத்து நாள் கழிந்து வந்து பாருங்கள் என்று சொல்லி அனுப்பி வைத்தார். அந்தப் பத்து நாள்களுக்குள் என்ன நடந்ததென்றால், கலியும் பிறந்துவிட்டது. அதற்குப் பின்னர் இரண்டு பேரும் வந்தார்கள். நிலத்தை விற்றவன் "புதையல் எனக்குத்தான் சேரவேண்டும், ஏனென்றால் நான் நிலத்தை மட்டும் தான் விற்றேன்" என்றார்.

வாங்கியவன் எப்போது நிலத்தை விற்றாரோ; அப்போதே புதையலையும் விற்றுவிட்டார் என்றார். தருமர் சிரிக்கிறார். கலியுகம் பிறந்துவிட்டது என்பதை உணர்கிறார்.

இப்போதும் அப்படித்தான்

ஒருத்தர் கத்தரி விதை வாங்கி அவருக்கு நெருக்கமான நண்பரிடம் கொடுத்து, "உங்கள் தோட்டத்தில் போடுங்கள் என்றார்" "காசு எவ்வளவு? என்றார் அவர். அதெல்லாம் ஒன்றும் வேண்டாம் என்று கூறிவிட்டு அவர் போய்விட்டார். இவரது கத்தரிச் செடிகளும் நன்றாகக் காய்த்திருந்தன.

விதை கொடுத்தவர் ஒரு நாள் தற்செயலாக இவரைப் பார்க்க வந்தார் "கத்தரி எப்படி இருக்கிறது? என்றார் நன்றாகக் காய்த்திருக்கின்றன என்றார். "கொஞ்சக்காய் கொடுங்கள் குழம்பு வைக்க என்று கேட்டார்.

"ஐயோ கத்தரிக் காய்கலெல்லாம் முற்றிப் போய்விட்டனவே என்ன செய்ய"என்றார் நண்பர். இவர் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்தார்.

வழியில் அந்த ஊர்க்காரரைப் பார்த்து "அதோ அந்த வீட்டுத் தோட்டத்தில் கத்தரிக் காய்களெல்லாம் முற்றிவிட்டனவா? என்று விசாரித்தார் உண்மையைத் தெரிந்து கொள்ள.

அதுக்கு அவர் "காய்கள் முற்றவில்லை கலிதான் முற்றிப் போய்விட்டது" என்றார்.

**கோ.சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தட்டுக்கு மேல் தட்டு சக்திக்கு மேல் சக்தி



கூடிய சி.வி ரூ.120,600/-+ வரிகள்

# இலங்கையில் நம்பர் 1 இரும்புக்கம்பி CN ஸ்டீல்

ISO 9001:2008 சான்றிதழ் பெற்ற கொன்பெப் ஸ்டீல் கம்பனியினால், முழுமையான தன்னியக்கத்துடன், நாளாந்தம் 400 தொன் உருக்கை உற்பத்தி செய்யும் ஆற்றல்மிக்க தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்றது. சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்ட முதல் நாளே அதியுயர் கட்டட நிர்மாணத் திட்டங்களுக்கு CN ஸ்ரீல் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. CN ஸ்ரீல் அதன் உயர்தரம் மற்றும் பலம் காரணமாக இலங்கையிலுள்ள பொறியியலாளர்களின் நம்பிக்கைக்குரிய தராதரத்தை வென்றுள்ளது.



தயவுசெய்து உங்களுக்கு அருகிலுள்ள முகவருடன் தொடர்புகொள்ளவும்.

CN ஸ்டீல்:

- BS 4449:1997 பிரிட்டிஷ் தராதரங்களுக்கு அமைவானது
- SLAS 375 & RB 460 சான்றிதழ்
- மூலப்பொருள் : 100% இறக்குமதி செய்யப்பட்ட இரும்புப் பாளங்கள்
- உற்பத்தி அளவு 10 MM DIA இருந்து 32 MM DIA வரை
- கிடைக்கும் அளவு 6 - 12 மீற்றர்கள்
- BOI தீர்வை விலக்கு திட்டங்களுக்கு விசேட விலைகள்

ISO 9001 :2008

துரித அழைப்பு 0772516088

உத்தரவாத ஆற்றல் SLS 375

**CONFAB**
ஸ்டீல் (பிரைவெட்) லிமிடெட்
அலுவலகம் : 5-9, உலக வர்த்தக நிலையம்
கிழக்குப் கோபுரம், எச்சலன் சதுக்கம், கொழும்பு 01
தொலைபேசி : 011 2394667 / 011 2382455 / 011 2382466
தொலைநகல் : 011 2382477
மின்னஞ்சல் : Confabcro@sltnet.lk
bsil@sltnet.lk

தொழிற்சாலை: P.O & விலேஜ் முத்தரகம
கம்பஹா மாவட்டம்,
மேல் மாகாணம், ஸ்ரீலங்கா
தொலைபேசி 060 2339788 / 060 2330333
மின்னஞ்சல் : Confabw@sltnet.lk


## ஜெய்ப்பூர் சேவை தற்காலிகமாக நிறுத்தம்

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் மீள் புனரமைப்புப் பணிகள் இடம்பெறுவதால் நிறுவனத்தின் சேவை ஒன்றரை மாதகாலத்துக்கு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை செயற்கை அவயத் திருத்த வேலைகள், அவயசார்புறுப்பு திருத்த வேலைகள், இயன் மருத்துவ சேவை ஆகிய வைத்திய சேவைகள் இடம்பெறும் என்று நிறுவனத்தின் முகாமைத்துவக் குழுவினர் அறிவித்துள்ளனர். (ம-313)


මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

2011.06.17

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2407

வெற்றி எழுத்து U
வெற்றி எண்கள் 8 8 6 4 9 1

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | U | 8 | 8 | 6 | 4 | 9 | 1 | ரூபா. 19,028,471/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 8 | 8 | 6 | 4 | 9 | 1 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 8 | 6 | 4 | 9 | 1 | ரூபா. 100,000/= | பரிசுகள் 10 |
| 3 பரிசுகள் | | | | 6 | 4 | 9 | 1 | ரூபா. 10,000/= | பரிசுகள் 117 |
| 4 பரிசுகள் | | | | | 4 | 9 | 1 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1217 |
| 5 பரிசுகள் | | | | | | 9 | 1 | ரூபா. 100/= | பரிசுகள் 12513 |
| 6 பரிசுகள் | | | | | | | 1 | ரூபா. 20/= | பரிசுகள் 122950 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 8 | 8 | 6 | 4 | 9 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 10 |
| 8 பரிசுகள் | | 8 | 8 | 6 | 4 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 113 |
| 9 பரிசுகள் | | 8 | 8 | 6 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1241 |
| 10 பரிசுகள் | | 8 | 8 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 12297 |
| 11 பரிசுகள் | U | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 49161 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
Rs. 11,032,470.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 2470662, 4607000, Hotline. 2433631 மின்னஞ்சல். www.nlb.lk





தோற்றம்:
1973.12.30

மறைவு:
2010.07.01

உதித் தெழுந்த சூரியனே உடைந்தா வீழ்ந்தாய்?
ஒளி கொடுத்த விண்மதியே ஒடிந்தா சாய்ந்தாய்?
கிழம் ஒன்று வீழ்ந்த தென்றால் இயற்கை என்போம்
இளமொட்டு உதிர்வ தென்றால் பொறுக்கலாமோ?
உருண்டோடிக் காலங்கள் ஒன்று ஆனதே
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்


ஏழாலை வடக்கு,
ஏழாலை. (48,21,23)

தாய்- ச.லீலாவதி, மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், பெறாமகன், மச்சான்மார், மச்சாள்மார்.

# நினைவலைகள்

3 ஆம் ஆண்டு நினைவு — 22 ஆம் ஆண்டு நினைவு





யோண் ஞானமுத்து — ஞானமுத்து பிலிப்குமார்

பிறப்பு:
1922.03.29

இறப்பு:
2008.06.20

ஆண்டவரே! நீர் அண்மையில் இருக்கிறீர்
உம் வழிகளெல்லாம் உண்மையானவை
நீர் என்றென்றும் உள்ளவரென
உம் வாக்குகளிலிருந்து நான் அறிந்திருக்கின்றேன்
சங்கீதம்: 118:15

பிறப்பு:
1969.06.17

இறப்பு:
1989.07.21

தேவாலய வீதி,
மல்லாகம். (48,21,23)

இவர்களின் பிரிவால் துயருறும்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை அம்பாளுக்கு பொருள்களை ஏற்றும் படகுகள் விற்கப்படுமா?

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்துக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு வரப்படுகின்ற பூசைப் பொருள்கள் உட்பட அனைத்துப் பொருள்களும் குறிகாட்டுவான் துறையில் இருந்து மோட்டார் படகுகள் மூலம்தான் நயினாதீவுக்கு எடுத்து வருவது காலாதிகால நடைமுறை. கடந்த காலங்களில் அதாவது, யுத்தச் சூழ்நிலை ஏற்படுவதற்கு முன்னர் கடல் உணவு வகைகள் மீன்பிடி வள்ளங்கள் மூலமாகவே குறிகாட்டுவான் துறைக்கு கொண்டு சென்று யாழ்ப்பாணம் உட்பட பிற பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டது.

மோட்டார் படகுகளில் கடல் உணவு வகைகள் எக்காரணம் கொண்டும் ஏற்றப்படுவதில்லை.

ஆலய இறங்கு துறைக்கு கடல் உணவு வகைகள் எடுத்துச் செல்லப்படாத காலம் ஒன்றும் இருந்தது. 1983 ஆம் ஆண்டுக்குப்பின் யுத்தச் சூழ்நிலை ஏற்பட்டபின் நிலைமை மாறியது.

மீன்பிடிப் படகுகள் குறிகாட்டுவான் துறைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. பயணிகள் படகில் பயணிகளோடு கடல் உணவு வகைகள் ஏற்றப்பட்டு அனுப்பப்படும் நிலை உருவானது.

அம்பாளுக்குரிய பூசைப் பொருள்கள் உட்பட அனைத்துப் பொருள்களும் தனியார் படகுகள் மூலம் கொண்டு வந்து சேர்க்கப்பட்டன. அம்பாளுக்குரிய புனிதமான பூசைப்பொருள்களும் கடல் உணவுவகைகள் ஏற்றப்படுகின்ற தனியார் படகுகளிலேயே எற்றப்பட்டு வந்தன.

சைவ ஆசாரம், புனிதம் போற்றப்பட வேண்டும் என்ற நோக்கம் கொண்ட ஆசார சீலர்கள் அம்பாளின் பூசைப் பொருள்கள் உட்பட அனைத்துப் பொருள்களையும் ஏற்றிவர அம்பாளுக்கென சொந்தமாக ஒரு மோட்டார் படகை வாங்க வேண்டும் என்ற தீர்மானத்தை மேற்படி ஆலய வழிபடுநர் பேரவையின் பொதுக் கூட் டத்தில் முன் மொழிந்து வழிமொழிந்து ஏகமனதான தீர்மானமாக ஏற்கப்பட்டு நாக பூஷணி படகு வாங்கப்பட்டது.

பின் தனியார் படகுகள் மிக குறைவாக இருந்தபடியால் அம்பாளின் அடியவர்கள் பயணம் செய்வதிலும் தாமதம் ஏற்பட்ட காரணத்தால் நாக பூஷணி படகு 2 ஆலய நிர்வாகத்தால் வாங்கப்பட்டது.

அம்பாளின் இரு படகுகளிலும் கடல் உணவு வகைகள் ஏற்றப் படுவதில்லை. இது நடைமுறையில் இருந்து வந்தது.

இந்த நிலையில் அந்த இரண்டு படகுகளும் விற்கப்படவுள்ளதாகக் கடந்த ஒரு சில மாதங்களில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டன.

இதேவேளை, இந்தப் படகுகளில் ஒன்று விற்கப்பட்டுவிட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அம்பாளின் பொருள்களை ஏற்றுவதற்கெனத் தனியாக இந்தப் படகுகள் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணம் தற்போதைய நிர்வாக சபையினருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

இதேவேளை படகுகளில் பயணம் செய்பவர்கள் உயிர்ப் பாதுகாப்பு அங்கி அணிய வேண்டும் என்ற நடைமுறை இருந்தும், அம்பாளை வழிபட வருகின்ற அடியவர்கள் அதை அணியத் தயங்குகின்றனர். தங்கள் புனிதமான வழிபாடு, கண்டவர்களும் அணிகின்ற உயிர்ப் பாதுகாப்பு அங்கியை அணிவதால் மாசடைந்து விடும் என்று மனம் நொந்து வேறுவழி இன்றி அணிவாரும் உண்டு. அணிய மறுப்பாரும் உண்டு. அம்பாளின் அடியவர்களே சைவ ஆசார கலாசாரத்தைக் காப்பாற்ற முனைப்பாக இருக்கின்றனர்.

இந்த நிலையில் அம்பாளின் இரு படகுகளும் விற்கப்பட்டு விட்டால் தனியார் படகுகளில் தான் அம் பாளுக்குரிய பூசைப் பொருள்கள் அடங் கலாக அனைத்துப் பொருள்களும் ஏற்ற வேண்டிய நிலை உருவாகும். கடல் உணவு வகைகளை ஏற்றி இறக்கும் தனியார் படகுச் சொந்தக்காரர்கள் அம்பாளின் பூசைப் பொருள்கள் என்பதற்காகக் கழுவிச் சுத்தம் செய்து தூபம் காட்டி ஏற்றமாட்டார்கள். அவர்களைக் குறை கூற முடியாது. அவர்களைப் பொறுத்த மட்டில் தொழில்தான் முக்கியம்.

சைவப் பாடசாலைகளில் கல்வி பயில்கின்ற மாணவ, மாணவிகள் அசைவ உணவு மதிய உணவாக வழங்கக் கூடாது என்று வாதாடிக் கொண்டிருக்கின்றன இந்து அமைப்புக்கள்.

அம்பாளுக்குரிய புனிதப் பொருள்களை தனித்துவமாக சைவ ஆசாரத்தை பேணிப் பாதுகாத்துப் பயணிக்கின்ற படகை விற்றுவிட்டு பலதையும் ஏற்றி இறக்குகின்ற படகுகளில் அம்பாளின் புனிதமான பொருள்களை ஏற்றி இறக்க வைப்பது சைவ ஆசாரத்தை குழி தோண்டிப் புதைப்பதற்கு ஒப்பானது.

சர்வதேச கோடீஸ்வரியாக நயினையில் வீற்றிருந்து அருளை வாரி வழங்குகின்ற நாகபூஷணிக்கு நாகபூஷணி படகு 1, நாகபூஷணி படகு 2 கடல் உணவு வகைகளை ஏற்றாமல் அம்பாளுக் குரிய பொருள்களை மாத்திரம் ஏற்றி இறக்குவதால் பெரிய நட்டம் ஏற்படாது. அப்படி ஏற்பட்டாலும் நஷ்டம் அம்பாளுக்கேயன்றி அறங்காவலர்களுக்கு நஷ்டம் ஏற்படாது.

''உலக்கை போகும் இடம்பாராது ஊசி போகும் இடம் பார்ப்பார்கள்'' என்று கூறுவார்கள். அதேபோல்தான் இதுவும். கடந்த 2003 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்படவில்லை.

இவற்றை வெளியிடுவதன் மூலம் படகுகளை விற்பனை செய்யலாமா வேண்டாமா என்ற பல்வேறு வினாக்களுக்கான விடைகள் வெளியாகும்.

நயினை பௌத்த விகாரைக்கு விகாரைக்குரிய பொருள்களையும் அடியவர்களையும் ஏற்றி இறக்க பெரிய புதிய படகு ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு சேவையில் உள்ளது. அண்மையில்தான் கொள்வனவு செய்யப்பட்டது.

இவ்வாறு அவர்கள் தமக்கெனத் தனியான படகைக் கொள்வனவு செய்யும் நிலையில் இவர்கள் விற்க நினைக்கின்றனர். அம்பாளின் நாக பூஷணிப் படகுகளை விற்க முன் வந்துள்ளனர். நம்பிக்கைச் சொத்தின் நம்பிக்கையாளர்கள். தாயே சிந்தை கலங்குகின்றது. அம்பாளின் தேவைக்குரிய பொருள்களை அம்பாளின் படகினில் ஏற்றுவது போல் ஆசாரம் தனியார் படகுகளில் இருக்காது. சைவ ஆசார சீலர்களின் சிந்தைக்கு இது சமர்ப்பணம்.

நயினை.நாக.கோபாலகிருஷ்ணன்

## அதிகளவில் வெங்காயச் செய்கை

அளவெட்டி,ஜூன் 20

அளவெட்டி, கந்தரோடை, மல்லாகம் பிரதேசங்களில் வெங்காயப் பயிர்ச் செய்கை கூடுதலாக இடம்பெற்று வருகின்றது.

இந்தமுறை சிறுபோகப் பயிர்ச் செய்கையில் வெங்காயச் செய்கையிலேயே விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். (ம-36)

## வளர்ப்பு நாய்களுக்கு கருத்தடை சிகிச்சைகள்

தென்மராட்சி,ஜூன்20

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாகக் கருத்தடை சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இன்று காலை 8 மணிமுதல் சாவகச்சேரி, கச்சாய் வீதி, உதயசூரியன் சனசமூக நிலையத்திலும், கெருடாவில் பாலமுருகன் சனசமூக நிலையத்திலும் சிகிச்சைகள் இடம்பெறவுள்ளன.

கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவதற்காக ஆறுமாதத்துக்கு மேற்பட்ட ஆண், பெண் வளர்ப்பு நாய்களை அந்தந்த நிலையங்களுக்குக் கொண்டு வருமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (அ-207-313)

கோழிக்குஞ்சு விநியோகம்
35 நாளில் 2kg வுக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRAHA No -01 புறொயிலர் குஞ்சுகள், 22.06.2011 விநியோகிக்கப்படும்.
ராஜீவ்,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
T.P. No- 0212222867, 0776090926

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி இலக்கங்கள்
1302 சிகப்பு
மீனம் 05 10 49 52 17-06-2011
ஜக்பொட் பரிசு ரூபா. 3,091,800/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 229,619 | 20/- | 4,592,380/- |
| 2 இலக்கங்கள் | 21,176 | 40/- | 847,040/- |
| 1 இல. + லக்கினம் | 20,959 | 60/- | 1,257,540/- |
| 2 இல. + லக்கினம் | 1,889 | 200/- | 377,800/- |
| 3 இலக்கங்கள் | 558 | 1000/- | 558,000/- |
| 3 இல. + லக்கினம் | 58 | 10,000/- | 580,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 3,091,800/- | 3,091,800/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 11,704,560/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 619 | | 608,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 274,881 | | 12,312,560/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

இரண்டாவது வாய்ப்பு
வெற்றி இலக்கங்கள்
கும்பம் 03 13 20 36 ஜக்பொட் பரிசு ரூபா. 300,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 616 | 500/- | 308,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 300,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 619 | | 608,000/- |

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 400,000/-

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2232 திகதி 18-06-2011
ஆங்கில எழுத்திற்கும் A
வெற்றி எண்கள் 22 50 51 58
போனஸ் இல: 41
ஜக்பொட் பரிசு ரூ. 10,213,225/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 196203 | 20/- | 3,924,060/- |
| 2 இல | 14090 | 100/- | 1,409,000/- |
| 3 இல | 281 | 1,000/- | 281,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7969 | 40/- | 318,760/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 527 | 1,000/- | 527,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 15 | 10,000/- | 150,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 10,213,225/- | - |
| 1 இல + போனஸ் இல | 9364 | 100/- | 936,400/- |
| 2 இல + போனஸ் இல | 450 | 500/- | 225,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 370 | 200/- | 74,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 10 | 1,500/- | 15,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | 229284 | | 9,260,220/- |
| ரத்தரங்வரம மொத்த பரிசு | 307 | | 253,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 229591 | | 9,513,220/- |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 10,749,125/-

தங்கக்காசு பரிசுப்பொதி வெல்லப்படவில்லை
ரத்தரங் வரம
வெற்றி எண்கள் 26 39 57 67
ஆங்கில எழுத்திற்கும் U

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 3 இல | 306 | 500/- | 153,000/- |
| 4 இல | 01 | 100,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | ஒரு பவுன் தங்கக்காசு13 | - |

இந்த புதன்கிழமை தங்கக் காசுப் பொதி 15 தங்க நாணயங்கள்
அபிவிருத்தி லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணத்தின் பின் பெண்களுக்கு மலரும் புதுவாழ்வு



பெண்கள் திருமணத்தின் பின் தமக்கென ஒரு புதுவாழ்வை ஆரம்பிக்கின்றார்கள் என்று நாம் கூறுவதுண்டு.

இவ்வாறு "புதுவாழ்வை" ஆரம்பிக்கும் பெண்களைப் பொறுப்புக்களும் கடமைகளும் பின் தொடர்கின்றன.

இந்தவேளை பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து கொடுத்த பின்னர் பெற்றோர் தமது கடமைகள் நிறைவேற்றப்பட்டுவிட்டன என்ற சந்தோஷத்தில் அவளை கணவனிடம் ஒப்படைத்து விட்டு விலகிவிடுவார்கள்.

திருமணமான இந்தப் பெண் தனது கணவன் வீட்டில் புது உறவுகளுடன் புதிய இடத்தில் புதிய வாழ்க்கையைத் தொடங்கும்போது அவளிடம் சுயமாகவே மனத்தைரியம் உருவாகுவதோடு பிடிவாதக்குணம் அவளைவிட்டு அகன்று விடுகின்றது. இவ்வாறு வாழும்போது தனது கணவனுக்காக அவளின் குடும்பத்துக்காக என்று பல தியாகங்களையும் அவள் செய்ய ஆரம்பிக்கின்றாள். இந்த நிலையில் தனக்கு விருப்பமான காரியங்கள், தேவைகள் நிறைவேற்றப்படாவிட்டால் பெரிதும் பாதிப்படைந்து விரக்தியின் வெளிப்பாடாய் வரும் கோபங்களைத் தனது அன்றாட செயற்பாடுகளின் மூலம் ஏற்படுத்தத் தொடங்குகிறாள். இதன் வெளிப்பாடாகவே கணவனுடனோ அல்லது அவரின் குடும்பத்தில் உள்ளவர்களிடமோ தனது வெறுப்புக்களைக் காட்டத் தொடங்குகிறாள்.

இத்தகைய மாற்றங்கள் ஏற்படும்போது கணவனோ அல்லது அவளைச் சார்ந்தவர்களோ நன்கு புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகின்றது. ஏனெனில் வீட்டுக்கு வந்த மருமகள் தங்கள் உறவுகளில் ஒருவர் என்ற மனப்பக்குவத்தை வளர்ப்பதோடு, அதை அவள் உணரும் வகையில் வெளிப்படுத்தவேண்டும்.

அதுமட்டுமன்றி அவளுடன் அன்பாய், ஆதரவாய் அவளது தேவைகள், விருப்பங்கள் நிறைவேறும் வகையில் ஒத்துழைப்பாய் இருக்க வேண்டும். அவ்வாறு செய்யும்போது அவளும் மனமகிழ்ச்சியில் புகுந்த வீட்டுக்காகச் செயற்பட ஆரம்பிப்பாள்.

இந்தவேளையில் கணவன்-மனைவிக்கு இடையில் ஏற்படும் சிறுசிறு சண்டை சச்சரவுகளின்போது ஏனையோரின் தலையீடுகளே அதிகளவான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே தேவையற்ற தலையீடுகளை மேற்கொள்வோர் இதிலிருந்து விலகி நடப்பதே அந்தக் குடும்பத்துக்கு அவர்கள் செய்யும் நற்காரியங்களாகும்.

**சோபியா**

அத்துடன், திருமணமான பெண் புதிதாக இன்னொரு வீட்டுக்கு வந்துவிட்டோம் என்பதை நினைவில் வைத்து பிறந்த வீட்டின் கௌரவத்தையும் காப்பாற்ற வேண்டும்.

"ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால்" என்று கவிஞர்கள் வர்ணித்தது போல் பிரச்சினைகள் உண்டாவதற்கும் அவற்றை இல்லாமல் அழிக் கும் திறனும் பெண்களிடம் தான் உள்ளது.

இத்தகைய பெண்களின் தன் மானத்தைக் காப்பாற்ற வேண்டியது குடும்பத்த வர்களின் கைகளிலும் உள்ளது.

# வெற்றிக்குப் பின்னால்

இன்றைய சமுதாயச் சூழலில் பெண்களின் நடைமுறைகள் மற்றும் செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்குப் பெண்களே காரணமாகியுள்ளார்கள் என்பதே பலரது கூற்றாக இருக்கின்றது.

இந்த நிலையில் பெண்களுக்குப் பெண்களே எதிரிகள் என்ற நிலையும் உருவாகிவிட்டது.

பெண்கள் எப்போதும் சமூகத்தில் சம அந்தஸ்து உள்ளவர்கள் என ஆண்கள் நினைத்துக் கொண்டாலும் அதனை முற்று முழுதாக எமது சமுதாயமும் சரி ஏனையவர்களும் சரி ஏற்றுக்கொண்டதாக இல்லை.

அதுமட்டுமன்றி பெண் உரிமை பெண்ணியவாதம் என வாதிட்டுச் சண்டை போட்ட காலங்கள் மாறித் தற்போது பல்வேறுபட்ட துறைகளிலும் பெண்களே தலைமைத்துவப் பொறுப்பை ஏற்று நடக்க ஆரம்பித்துவிட்டார்கள் என்பதை நினைக்கும்போது நாம் பெருமிதமடையக் கூடியதாக இருக்கின்றது.

இதற்கு முற்றுமுழுதான காரணம் பெண்களே என்பதோடு அவர்கள் தம்மில் கொண்டுள்ள தன்னம்பிக்கையும் விடாமுயற்சியுமே என்று கூறினால் அது மிகையாகாது.

ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் எப்போதும் ஒரு பெண் இருப்பாள் என்று எல்லோரும் கூறுவதுண்டு.

ஆனால் ஒவ்வொரு பெண்களுடைய வெற்றிக்குப் பின்னாலும் ஆண் கள் இருப்பார்கள் என்றும் நாம் சொல்வதில் லையே ஏன்?

பெண்களின் முன்னேற்றமானதும் அவளது தனியொருவரின் முயற்சியினால் கிடைத்ததாக இருக்கமுடியாது. அவளின் வெற்றிக்குப் பின்னாலும் இன்னொருவரின் துணை இருந்திருக்கும் என்பது மட்டுமே உண்மை.

பெண்கள் ஆண்களின் வெற்றிப் பாதைக்கு தம்மை எப்படி ஈடுபடுத்துகிறார்களோ அதேபோல பெண்களின் வெற்றிக்கும் தம்மை ஈடுபடுத்த முனைவது இல்லை.

இதற்குக் காரணம் பெண்கள் தாம் சார்ந்த இன்னொரு பெண்ணைத் தமக்கு எதிரியாகவும் பொறாமைத்தனத்துடனும் அணுகுவதே. இதனால் தான் பெண்களுக்கு எதிரி பெண்கள் என்று கூறவேண்டியுள்ளது.

இந்த நிலை மாற்ற மடையவேண்டும். இதற்கு ஒவ்வொரு பெண் களும் தமது எண்ணங்கள், சிந்தனைகளை மாற்றி வெற்றிப் பாதையை நோக்கியே அடியெடுத்து வைக்க வேண்டும்.

**-கே. சஞ்சீ,**
கொக்குவில்.

# பார் போற்றும் வெற்றி மகளாய்...!



வீட்டுக்குள் பெண்ணைப்
பூட்டி வைத்த காலம்
மறைந்து - இன்று
நாட்டின் - பார்
போற்றும் பொறுப்புக்களில்
பெண்ணவள் மிளிர்கின்றாள்
தனித்துவமான கடமைகளை
நிறைவேற்றும் பெண்ணாய்
தரணியில் விளங்குகின்றாள்
தூற்றுவார் தூற்றட்டும்
காற்றாய்ப் பறக்கட்டும்
விண் எங்கும் உன்பணி
வென்றெடுத்த வெற்றிகள்
எண்ணிலடங்கா பெருகட்டும்
தற்பெருமை உனக்கு எதற்கு
தானாய் உனைவந்து சேரும்
வெற்றி மகள் நீ என்று

**-சுமித்திரா,**
உடுவில்.

# தொடர்பாடல் சாதனங்களின் வளர்ச்சி பெண்களின் வாழ்க்கைக்கு வினையாகிறது



அதிகரித்துவரும் அல்லது வளர்ந்துவரும் நவீன தொழில்நுட்ப சாதனங்களின் வளர்ச்சி இளைய சமுதாயத்தை குறிப்பாகப் பெண்களைத் தவறான வழிகளை நோக்கி அழைத்துச் செல்கின்றது என்பது யாரும் மறுக்க முடியாத ஒன்றாகும். தற்போது நமது பிரதேசங்களில் நடைபெற்ற, நடைபெற்றுக் கொண்டிருக்கும் சம்பவங்களே இதற்குச் சான்றாக உள்ளன.

"படித்தும் மூளையில்லையா?" என்பது உண்மையாகி விட்டது. பெண் படித்துப் பட்டம் பெற்றவளாக இருக்கட்டும் அல்லது கிராமப் புறங்களில் படிப்பை இடை நிறுத்தியவளாக இருக்கட்டும் நாகரிக மோகம் அனைவரையும் ஒரே பார்வையில் நோக்குமளவுக்கு மாற்றி விட்டது. குறிப்பாக அதிகரித்துவரும் கைத்தொலைபேசிப் பாவனைதான் முக்கிய காரணமாக அமைந்து விடுகின்றது. இந்தத் தொலைபேசி மூலமான உரையாடல் பெண்களை தற்கொலை செய்துகொள்ளும் அளவுக்கு தூண்டிவிட்டது என்பதுதான் தற்போது உண்மைச் சம்பவங்களாக நடந்து கொண்டிருக்கின்றன.

இதைப்பற்றிப் பெண்கள் சிந்திக்க வேண்டிவர்களாகவே உள்ளனர். நமது முன்னைய வாழ்க்கை முறையைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கும்போது அந்தக் காலங்களில் நவீன தொழில்நுட்ப சாதனங்களின் பயன்பாடு மிகக்குறைவாகவே இருந்தது.

இதன்போது பெண்களைப் பாதிப்புக்கு உள்ளாக்கிய பாரதூரமான சம்பவங்கள் மிகக் குறைவாக இருந்தன. ஆனால் தற்போதைய வாழ்க்கை முறையை நோக்கிச் சிந்தித்துப் பார்க்கும்போது அதிகரித்து வரும் பாலியல் துஷ்பிரயோகங்களும் தற்கொலைச் சம்பவங்களும், கொலைகளும் எதனால் இடம்பெறுகின்றன?. இந்த நவீன தொடர்பு சாதனங்கள் மூலம் பலபாகங்களில் இருந்தும் நண்பர்கள், உறவினர்கள் ஏனையவர்களில் தொடர்புகள் அதிகரித்ததே இதற்குக் காரணம். தொழில்நுட்ப சாதனங்கள் எமக்கு நன்மையைப் பெற்றுத் தரக் கூடியதாக அமையவேண்டுமே தவிர, அவையே எமக்கு வினையாக மாறுமளவுக்கு இடளிக்கக்கூடாது. அதன் பயன்பாட்டைப் பெற்றுக் கொள்வதன் மூலம் நாம் நல்லதை அனுபவிக்க வேண்டுமே தவிர, எமது வாழ்வைச் சீரழிக்கக்கூடிய வகையில் வழிவிடக்கூடாது.

இந்தத் தொழில்நுட்பச் சாதனங்களின் பயன்பாடு வளர்ச்சியடைந்துவரும் பெண்களுக்கு ஏணிப் படிகளாகப் பயன்படுத்தப் படவேண்டும். சோதனைப் பெண்கள் குடும்பத்தின் சுமைகள் என்ற பெயர்மாறி சாதனைப் பெண்களாகப் புதுமைகள் படைத்து, வெற்றிகள் பல படைத்துவரும் இந்த உலகில் இன்றும் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்ல வேண்டிய அவசிய மானதாகியுள்ளது. உணர்வுகளுக்கும் ஆசைகளுக்கும் அடிமைப்பட்டு இவைதான் உலகம் என முடங்கிக் கிடப்போமானால் நிச்சயம் அதுதான் எமக் கான புதை குழியாக மாறிவிடும். பாதிப்புக்கள் ஏற்பட்ட பின் தவறுகளை நினைத்தோ அல்லது சம்பவங்களை நினைத்தோ எந்த விதப் பயனும் இல்லை என்பதை முன் கூட்டியே உணர்ந்து வாழ வேண்டியது அவசியமாகும். ஏழைகளாக இருந்தாலும் கோழைகளாக இருக்கக்கூடாது என் பதைப்போல் நமது சிந்தனைகள் யாவும் நல்லனவான இருக்க வேண்டும். அப்போதுதான் எமக்கு வெற்றி நிச்ச யம் என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளவேண்டும்.

**-ஜீவன்,**
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பணியில் 150 ஆண்டுகள் நிறைவெய்தும் 'கொலம்பகம்' சென்.யோசப்ஸ் வித்தியாலயம்

உலகில் பணம், பொருள், வீரம் அனைத்தும் அழிந்து போகும். ஆனால் அழிவில்லாதது கல்விச் செல்வமாகும். இயற்கை அனர்த்தங்கள் கல்விச்சாலைகளை, கல்விமான்களை காவு கொள்ளலாம். ஆனால் கல்வியை அழித்துவிட முடியாது. மனித மூளை சரிவர இயங்கும் வரை கல்வி புதிய பரிமாணங்களில் முன்னேறிச் சென்று கொண்டேயிருக்கும். உலகின் வளர்ச்சிக்கும் புதிய தொழில்நுட்ப வருகைகளுக்கும் அடிப்படையாக விளங்குவது கல்வித்துறையாகும்.

இலங்கையில் ஐரோப்பியர் வருகையின் பின்னர் கல்வித்துறையில் சீர்திருத்தங்களும் வளர்ச்சியும் மேம்பாடும் ஏற்பட்டன. கல்விப் பரவலாக்கலில் கிறிஸ்தவ, கத்தேலிக்க மிஷனரிமார், பாதிரிமார்களின் பங்களிப்பு மிகவும் காத்திரமானதாகும். நகரங்களில் கல்லூரிகளை அமைத்ததோடு மட்டுமல்லாது கிராமப் புறங்களிலும் பாடசாலைகளை ஆரம்பிப்பதில் முனைப்புடன் செயற்பட்டனர். இதனால் வசதி படைத்தோர் மட்டுமன்றி அனைவரும் கல்விபெறும் சமநிலை உருவானது.

இந்தவகையில் பொருளாதார, அடிப்படைக் கல்வி வசதிகளில் மிகவும் பின்தங்கியிருந்த யாழ். நகர கரையோர மக்களின் கல்வியூட்டலில் கவனம் செலுத்தப்பட்டது. பாஷையூர், கொழும்புத்துறை, நல்லூர், கொய்யாத் தோட்டம், குருநகர், நாவாந்துறை, பாண்டியன்தாழ்வு ஆகியபகுதிவாழ்மாணவர்களின் வசதி கருதி பாடசாலையொன்று அமைக்க வேண்டு மென்ற எண்ணம் எழுத்தாளரும், கத்தோலிக்க முற்போக்கு சிந்தனையாளரும் கத்தோலிக்க சம உரிமைக்காக போராடி வந்தவருமான அருட்திரு



கிறிஸ்தோப்பர் பொன்ஜின்(அ.ம.தி) அடிகளாரின் சிந்தனையில் உருவானது.

தனது பேரவாவை அப்போது யாழ். அப்போஸ்தலிக்க மறைமாவட்ட ஆயராக இருந்த மேதகு ஸ்ரீபன் செமேரியா ஆண்டகையிடம் தெரிவித்து அனுமதியையும் ஆதரவையும் பெற்றுக் கொண்டார். இவ்வாறு அருட்திரு பொன்ஜீன் அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்டதே இன்று 150 ஆவது ஆண்டு நிறைவினில் காலடி பதிக்கும் கொலம்பகம் சென். யோசப்ஸ் றோ.க. ஆண்கள் வித்தியாலயமாகும்.

கொழும்புத்துறையில் ஆயர் இல்லத்துக்குச் சொந்தமான சுவாமியார் தோட்டத்துக்குச் செல்லும் பாதையாகிய சுவாமியார் வீதியில் புனித சூசையப்பர் ஆலயம், அமலமரித் தியாகிகள் சபைக் குருமடம், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, புனித வளனார் சிறிய குருமடம், முதிய குருக்களின் வசிப்பிடமான அமல உற்பவம், சென்.யோசப் முதியோர் இல்லம் என்பன அமைந்துள்ளன.

அமைதியான கடற்கரைச் சூழலின் பின்னணியில் கல்விப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றது இந்தப் பாடசாலை.

ஆரம்பத்தில் கொலம்பகம் புனித சூசையப்பர் ஆண்கள் சாதனா கழகம் என அழைக்கப்பட்ட கல்விக்கூடம் இலங்கை முழுவதிலும் சிறப்பாக வட பகுதியில் அறிவொளி பரப்பிக் கொண் டிருக்கும் ஆரம்ப, உயர்தர கல்விச் சாலைகளில் பழைமையும் பெருமையும் பெற்றுச் சிறப்புடன் இயங்கிவருவது வரலாற்று உண்மையாகும்.

இற்றைக்கு நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் அருட்திரு பொன்ஜீன் அடிகளாரின் வேண்டுதலின் பேரில் உயர் நீதிமன்ற நீதியரசராக இருந்த உயர்திரு பி.பிறெயிஸ்துரையிடமிருந்து ''நைற்'' பட்டவர்த்தனராகிய சந்திர சேகரா முதலியாரது பெருமுயற்சியின் பயனாக இந்தப் பகுதியில் 14 ஏக்கர் தென்னந் தோட்டம் விலைக்கு வாங்கப்பட்டது. இந்தத்தோட்டம் ஆரம்பத்தில் 'பிறெயிஸ் துரைத் தோட்டம்', 'கொடியேறுவெளி', "சின்ன நுவரெலியா" எனப் பல பெயர்களில் அழைக்கப்பட்டுவந்தது. பிற்காலத்தில் 'சுவாமி வளவு','கொலம்பகம்' என்று பெயர் பெற்றது.

மேற்றிராசன் மற்றும் கத்தோலிக்க அமைப்புக்கள் உபகாரிகளின் உதவிகளைப் பெற்று, பொன்ஜீன் அடிகளாரின் அயராத உழைப்பினால் பாடசாலைக் கட்டடம் உருவாக்கப்பட்டது. கொலம்பகம் சாதனா கழகம் எனப் பெயரிடப்பட்டு 1861 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி புனித மரியன்னையின் பிறந்த தினத்தன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தப் பகுதியிலுள்ள வசதி குறைந்த மாணவர்களுக்கு இந்தப் பாடசாலை வரப் பிரசாதமாக விளங்கியது. நாளுக்கு நாள் மாணவர்களின் இணைவு அதிகரித்துச் சென்றது. அதேநேரம் ஆயரில்ல வளாகத்திலும் யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களிலும் சிறிய அளவில் இயங்கி வந்த அநாதை இல்லங்களிலிருந்து சிறுவர்கள் 1863 ஆம் ஆண்டு இந்தப் பகுதிக்கு கொண்டு வரப்பட்டு அவர்களும் பாடசாலையில் சேர்க்கப்பட்டனர்.

**தொகுப்பு: அ.கொர்னேலியஸ்**
**(பழைய மாணவர்)**
**யேசுதாஸ்**

இந்த நாள்களில் கத்தோலிக்கரின் தேவைகள் ஆன்மீக உருவாக்கம் ஆசிரிய உருவாக்கம்,இளைஞர் உருவாக்கம் போன்றவற்றை நிறைவு செய்யும் பொருட்டு யாழ். ஆயராகவிருந்த மேதகு செமேரியா ஆண்டகை 1864 மார்ச் 19 இல் புனித சூசையப்பர் சகோதரர்கள் சபை (SST) என்ற சுதேச துறவற சபையை ஏற்படுத்தினார். இந்தச் சபையானது பாடசாலையைப் பேணிக்காப்பதில் பெரும்பங்கு வகித்தது.

(வளரும்)


## பனம்காமம்பற்று பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் - வவுனிக்குளம் (வ-து)
## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு ,கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.16 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு, கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள் இதற்கு அமைய முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 2009.04.08 ஆம் திகதிய 1596/17 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் எம்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இற்கு அமைய சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இந்தக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் கீழ்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

**கிளைக்குழுத் தெரிவு நடைபெறும் திகதி : 2011.07.09**
**நேரம் முற்பகல் : 10.00 மணி**
**கிளைப்பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம்**

| கிளை இல. | கிளையின் பெயர் | தவிசாளர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01 | பாலிநகர் | திரு.இ.புவன்ராஜ் | பாலிநகர் கிளைக் கட்டடம் |
| 02 | சிவபுரம் | செல்வி மை. நிஷாந்தினி<br>செல்வி அ.மோகனகுமாரி | சிவபுரம் கிளைக் கட்டடம் |
| 03. | செல்வபுரம் | செல்வி.ச.லாவண்யா | செல்வபுரம் கிளைக் கட்டடம் |
| 04. | பாண்டியன் குளம் | திரு.சி.பாலசுந்தரம் | பாண்டியன்குளம் கிளைக் கட்டடம் |
| 05. | நட்டாங்கண்டல் | திரு.க.சிறிகரன் | நட்டாங்கண்டல் கிளைக் கட்டடம் |
| 06. | விநாயகபுரம் | திரு.அ.சிங்கநாயகம் | விநாயகபுரம் கிளைக் கட்டடம் |
| 07. | கொல்லவிளாங்குளம் | திரு.இ.தனுசன்<br>திரு.தி.பிரதீப் | கொல்ல விளாங்குளம் கிளைக் கட்டடம் |
| 08. | வன்னிவிளாங்குளம் | திரு.பெ.பவளராஜ் | வன்னிவிளாங்குளம் கிளைக் கட்டடம் |
| 12 | கரும்புள்ளியான் | திரு.வி.முகுந்தன் | கரும்புள்ளியான் கிளைக் கட்டடம் |

கிளைப்பொதுச்சபைக் கூட்டத்துக்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் 1998.05.16 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவுறுத்தலுக்கமைய கூட்ட அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. கிளைக்குழுத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவித்தல்களை சங்கத்தின் சகல கிளைகளிலும் பொது இடங்களிலும் பார்வையிடலாம். கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களை குறித்த அறிவிப்புக்களின்படி கிளைப்பொதுச்சபைக் கூட்டங்களுக்கு சமுகமளித்து தங்கள் ஜனநாயக உரிமையை பயன்படுத்திக் கூட்டுறவு அமைப்பினை ஜனநாயக ஆளுமை கொண்டதாக செயற்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பணிமனை,
மணற்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

(ƒ/956)(41,20,25)

(சி.[illegible]),
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
முல்லைத்தீவு.



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில்
15.03.1928



விண்ணில்
21.05.2011



*பல கோடி இன்பங்கள் இருந்தென்ன*
*பல நூறு உறவுகள் இருந்தென்ன*
*தெய்வம் நீங்கள் பிரிந்த இடைவெளியை*
*யார்தான் நிரப்புவரோ?*
*பிரிந்தும் பிரியாமல் எம்மோடு இருக்கும் உங்கள்*
*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

## சுப்பையா சண்முகநாதன்

எங்கள் இதய தீபத்தின் மறைவுச் செய்தி கேட்டவுடன் இல்லத்துக்கு விரைந்து வந்து எமது துயரில் பங்கேற்று எமக்குப் பல வழிகளிலும் உதவிகள் செய்த அன்பு உள்ளங்களுக்கும் அவரது இறுதிக்கிரியைகளிலும் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (20.06.2011) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நிகழும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன உபசாரத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ அழைப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் இந்த அழைப்பைத் தங்கள் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

[illegible] வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(49,20,25)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு வலய ஆசிரியர்களுக்கு விரைவில் சம்பள நிலுவைகள்

## ஐக்கிய தமிழர் ஆசிரியர் சங்கம் ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 20

கொழும்பு வலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களின் சம்பள நிலுவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஐக்கிய தமிழர் ஆசிரியர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தச் சங்கத்தின் நிர்வாகிகள் கடந்த திங்கட்கிழமை வலயக் கணக்காளரைச் சந்தித்து கொழும்பு வலயத்தில் பல ஆசிரியர்களுக்கு சம்பள நிலுவைக் கொடுப்பனவு வழங்கப்படாமையை சுட்டிக்காட்டினர்.

இதையடுத்து கணக்காளர் சம்பள நிலுவைகளை வழங்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்துள்ளார். கொழும்பு வலயமானது மாகாணத்தின் பிரதான வலயமாகும். மேல் மாகாணத்தில் ஏனைய வலயங்களை விட கொழும்பு வலயமே நிலுவைக் கொடுப்பனவு வழங்குவதில் பின்தங்கிய நிலையில் காணப்படுகிறது.

ஆகவே இதுவரை சம்பள நிலுவைக் கொடுப்பனவுகள் கிடைக்கப்பெறாத ஆசிரியர்களின் விவரங்களைப் பாடசாலை ரீதியாகத் தனக்குத் தருமாறு கணக்காளர் சங்கத்திடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சங்கம் தகவல்களைத் திரட்டவுள்ளது.

கொழும்பு வலயத்தில் தேசிய பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களில் இதுவரை நிலுவைக் கொடுப்பனவு கிடைக்காதவர்கள் விசேட சம்பளப்பட்டியலுடன் கணக்காளரை சந்தித்தால் நிலுவைக் கொடுப்பனவு வழங்கப்படும் என கணக்காளர் உறுதியளித்தார்.

எனவே சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் 0779265018 ஆகிய தொலைபேசி இலக்கங்களோடு தொடர்பு கொண்டு தமது விவரங்களை வழங்குமாறு சங்கம் கேட்டுக்கொள்கின்றது.

அத்துடன் அண்மையில் புதிதாக நியமனம் பெற்ற அதிபர்களை அதிபர் சேவைக்கு உள்வாங்கி அவர்களுக்கு அதிபர் சம்பளத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பது குறித்தும் வலயப் பணிப்பாளரைச் சந்தித்து வேண்டுகோள்விடுக்கப்படவுள்ளது என சங்கம் தெரிவித்தது. (சி)

# மின் விநியோக அபிவிருத்தி; கொரிய அரசு நிதி உதவி

இலங்கையின் மின் விநியோக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒரு கோடி 60 லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்க கொரிய அரசு முன்வந்துள்ளது. மின் சக்தித்துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுக்கும் கொரிய அரச உயர்மட்ட அதிகாரிகளுக்கும் இடையே கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பொன்றை அடுத்தே இந்த நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது, ஹம்பாந்தோட்டை, புறுத்தாக்கண்ட 500 கிலோ சூரிய சக்தி மின் நிலையத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாகவும் அமைச்சர் கொரிய அதிகாரிகளுக்கு விளக்கத்தை வழங்கியுள்ளார். சூரிய சக்தி மூலம் வீதி விளக் குகளை இயக்குவது தொடர்பாகவும் இந்தச் சந்திப்பின்போது ஆராயப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கொரியாவில் சூரிய சக்தியில் இயங்கும் வீதி விளக்குகள் திருப்திகரமாக செயல்படுவது குறிப்பிடத்தக்கது. (ச)

# 80 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓய்வூதியம்

கொழும்பு, ஜூன் 20

80 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு அடுத்த வருடம் முதல் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் ஏற்கனவே கிடைத்துள்ளதாகவும் மேலதிக நடவடிக்கைகள் துரிதகதியில் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த முதியவர்கள் தமது இளமைக் காலத்தில் நாட்டின் அபிவிருத்திகளில் அயராது உழைத்தவர்கள். இவர்களை முதுமையில் கவனிக்க வேண்டியது அரசின் தலையாய பொறுப்பு எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-5)

# கித்துள் மரங்களில் பதநீர் வடிப்பு; சுற்றி வளைப்பை நிறுத்த அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 20

மாத்தளை மாவட்டத்தில் கித்துள் மரங்களில் பத நீர்வடிப்பதை சுற்றி வளைக்கும் பொலிஸார் அந்த நடவடிக்கையை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு மாத்தளை அரச அதிபர் திருமதி ஹெலன் மீகஸ்முல்ல சிரேஷ்ட பொலிஸ் அதியட்சகருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இந்தப் பகுதியில் கித்துள் உற்பத்திகளை மேம்படுத்தும் நோக்கிலேயே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தேசத்தை முன்னேற்றுவோம், தேசிய வேலைத்திட்டத்தின்கீழ் மாத்தளை மாவட்ட அரசியல் அதிகார சபையினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கொன்றின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மாத்தளை மாகாண சபை உறுப்பினர் சஞ்சீவ் கவிரத்ன இம்மாவட்டத்தில் கித்துள் உற்பத்தியாளர்கள் சிரமம் இன்றி தொழிலைச் செய்ய உதவிசெய்ய வேண்டும் என சமர்ப்பித்த பிரேரணையொன்றின் பின்பே அரச அதிபர் இந்த முடிவை எடுத்துள்ளார். (ச-5)

# இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களுக்கு கணினி வசதி

கிழக்கு மாகாணத்தில் சகல இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களுக்கும் கணினி வசதி அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலுள்ள இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்களின் முகாமையாளர்கள், உயர்அதிகாரிகளுடான உயர்மட்ட கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை மாலை மட்டக்களப்பு இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போவில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலிலே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாணத்திலுள்ள 16 டிப்போக்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இதன்போது டிப்போக்களின் முன்னேற்றம் குறித்த பல்வேறு விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன. (ச)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவை மீளப்பெறும் எண்ணம் இந்திய அரசுக்கு இல்லை- சிவ்சங்கர் மேனன்

டில்லி, ஜூன்.20

இலங்கையிடம் தாரைவார்க்கப்பட்ட கச்சதீவை மீளப்பெற வேண்டும் என்று பிரதமரிடம் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்து வரும் நிலையில் இலங்கையிடம் இருந்து கச்சதீவை மீளப் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது என்று மத்திய அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இதேவேளை கச்சதீவை மீளப்பெற வேண்டுமென்று இந்திய மத்திய அரசிடம் தமிழ் நாடு முதலமைச்சர் ஜெயலலிதா விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள முடியாதிருப்பது குறித்து தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர்மேனன் அண்மையில் உத்தியோகபூர்வமாக தமிழக அரசுக்கு அனுப்பிய கடிதத்தில் அறிவித்துள்ளார்.

மன்மோகன்சிங் தலைமையிலான இந்திய மத்திய அரசுக்கு கச்சதீவை திரும்ப பெற்றுக் கொள்வது குறித்து எந்த விதமான நோக்கங்களும் கிடையாதென அவர் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

1974ஆம் ஆண்டு இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கச்சதீவை திரும்பப் பெற்று அங்கு தமிழக மீனவர்களுக்கு மட்டுமே மீன்பிடிப்பதற்கான அனுமதியைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ் நாடு சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானத்தின் மூலம் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார் என்பது குறிப் பிடத் தக்கது. (வ)

# அளவெட்டி பிரசாரக் கூட்டத் தாக்குதல்; விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கண்டனம்

யாழ்ப்பாணம், அளவெட்டியில் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலுக்கான பிரசாரக் கூட்டத்தின்போது இராணுவத்தினர் மேற்கொண்ட காட்டு மிராண்டித்தனமான வன்முறை வெறியாட்டத்துக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்திய அரசும் தமிழக அரசும் அங்கு வாழும் தமிழர்களின் வாழ்வுரிமை களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண் டும் என்று அவர் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இராணுவத்தின் இத்தகைய வன்முறை வெறியாட்டத்திலிருந்து ஈழத்தில் வாழும் தமிழர்களின் வாழ்க்கை நிலை எத்தகைய கொடூரமான நிலை யில் அமைந்துள்ளது என்பதை அறியலாம். மக்கள் பிரதிநிதிகளுக்கு பொது இடங்களில் கூட பாதுகாப்பு இல்லை என்பது உறுதியாகிறது. இந்தச் சம்பவத்தை எமது கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கிறது- என்றுள்ளது. (வ)

# ஈழ மக்களுக்காக குரல் கொடுக்கும் எந்த மேடையிலும் நான் இருப்பேன்

## நடிகர் சத்தியராஜ் கூறுகிறார்

சைதாப்பேட்டை, ஜூன்.20

ஈழத்தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கும் எந்த மேடையிலும் நான் இருப்பேன் என நடிகர் சத்யராஜ் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்காக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு பாராட்டு மற்றும் நன்றி தெரிவிக்கும் வகையில் நாம் தமிழர் கட்சி சார்பில் நேற்று முன்தினம் சைதாப்பேட்டை தேரடித் திடலில் பொதுக்கூட்டம் நடை பெற்றது. இதில் கலந்து கொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் உரையாற்றுகையில்:

ஈழப்பிரச்சினைக்கு மட்டும் ஏன் தொடர்ந்து குரல் கொடுக்கிறீர்கள் என்று எல்லோரும் என்னிடம் கேட்கின்றனர். ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக பேசுவதற்கு அதிகமான அமைப்புகள் இருக்கின்றன. எனவே ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பாக நாம் பேசவேண்டியுள்ளது.

ஆனால் ஈழ மக்களுக்கு குரல் கொடுக்க சில அமைப்புகள் தான் இருக்கின்றன. அதனால்தான் அந்த சில அமைப்புகளோடு கைகோர்த்திருக்கிறேன்- என்றார். (வ)

# தமிழர்கள் மீதான தாக்குதலை தங்கபாலுவும் கண்டிக்கிறார்

சென்னை, ஜூன்.20

இலங்கையில் நடை பெற்றவுள்ள உள்ளூராட்சித் தேர்தலையொட்டி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் மீது இலங்கை ராணுவத்தினர் நடத்திய தடியடித் தாக்குதலுக்கு தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலுவும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தமிழர்களுக்கு எதிராக சர்வாதிகாரத்தைக் கட்டவிழ்த்து விடும் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவின் போக்கை இந்தியா தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் ஜனநாயக முறைப்படி நடைபெறும் உள்ளூராட்சி அமைப்புக்கான தேர்தலை சீர் குலைக்க எத்தனிக்கும் இலங்கை அரசின் இத்தகைய போக்கு ஜனநாயகத்துக்கு விடும் சவாலாகும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (வ)

# இலங்கைக்கு எதிரான பொருளாதாரத் தடை ஏனைய மாநிலங்களிலும் தீர்மானம் வேண்டும்

## முதல்வருக்கு நாம் தமிழர் கட்சி வேண்டுகோள்

சென்னை, ஜூன்.20

இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை தீர்மானத்தை ஏனைய மாநில அரசுகளின் தலைவர்களிடமும், இந்தியாவின் அரசியல் கட்சிகளின் தலைவர்களிடமும் பேசி நிறைவேற்ற வேண்டும் என்று தமிழக முதல்வருக்கு நாம் தமிழர் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றிய முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவிக்கும் நாம் தமிழர் கட்சியின் பொதுக் கூட்டம் சென்னை சைதாப்பேட்டை தேரடி திடலில் இடம்பெற்றது. நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பிரதமரைச் சந்தித்து விட்டு கொழும்புக்குச் சென்ற தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனிடம் ஐ.நா. குழுவின் அறிக்கை குறித்து கருத்துக் கேட்டபோது, 'ஐ.நா. மனித உரிமை குழுவில் எந்த ஒரு நாட்டையும் தனிமைப்படுத்தி கண்டனம் செய்ய இந்தியா அனுமதிக்காது' என்று கூறியுள்ளார்.

இந்த விடயம் இலங்கை அரசை தனிமைப்படுத்தப்படமாட்டோம் என்பதே பொருள். எனவே மத்திய அரசு இலங்கைக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காது என்பது தெளிவாகியுள்ளது. எனவே மாநில அரசுத் தலைவர்கள், ஏனைய அரசியல் கட்சித் தலைவர்களிடமும் பேசி இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத்தடைத் தீரமானத்தை நிறைவேற்றவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (வ)



சென்னையிலுள்ள தலைமைச் செயலகத்தில் விவசாயத்துறையைச் சார்ந்த ஆய்வுக்கூட்டம், முதல்வர் ஜெயலலிதா தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் துறை அதிகாரிகள்.

# சமச்சீர் கல்வி குறித்து ஆராய புதிய குழுவை நியமித்தார் ஜெ.

சென்னை, ஜூன் 20

சமச்சீர் கல்வி குறித்து ஆராய்வதற்காக தமிழக அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில் குழு ஒன்றை நியமித்து அறிக்கை தாக்கல் செய்ய முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழகத்தில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு சிறந்த எதிர்காலம் அமைய தரமான மற்றும் சமமான கல்வி வழங்கப்பட வேண்டும் நோக்கில் 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டத்துக்கு எனது அரசால் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டத்திருத்தத்தை எதிர்த்து ஒரு சிலர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் இந்தச் சட்டத்துக்கு இடைக் காலத் தடை விதித்தது. இந்த உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் சிறப்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், பாடத் திட்டத்தின் தரம் மற்றும் பாடநூல்களின் தரம் ஆகியன குறித்து ஆராய்வதற்கு ஒரு குழு அமைக்கப்பட வேண் டும் என்றும், அந்த குழு ஜூலை 6 ஆம் திகதிக்குள் தனது அறிக்கையை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும் என்றும் உத்தர விட்டிருந்தது. உச்ச நீதிமன்ற உத்தரவின்படி குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது. (வ)

# திராவிட இனம் என்பதே இல்லை ஒரு பகுதியின் பெயர்தான் அது

## சுப்பிரமணியம் சுவாமியின் கண்டுபிடிப்பு



சென்னை, ஜூன்.20

திராவிட இனம் என்று எந்த ஓர் இனமும் இல்லை. திராவிடம் என்பது ஒரு பகுதியின் பெயரே என்று ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணியசுவாமி தெரிவித்தார்.

மதுரையில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து அங்கு பேசுகையில்:

தென்னிந்தியாவின் ஒரு பகுதி திராவிடம் என ஆதிசங்கரர் கூறியுள்ளார். ஆங்கிலேயர் திராவிடர், ஆரியர் என இனப் பாகுபாட்டை ஏற்படுத்தினர். இராவணன் ஒரு பிராமணர். ஆனால் ராமர் சத்திரியர் குலத்தில் தோன்றியவர். இராவணனை கொலைசெய்த ராமரை தான் வழிபடுகின்றனர். பெண் ஆசை காரணமாக ராவணன் உயிரிழந்தான். அனைவரும் சட்டத்துக்கு முக்கியம் கொடுத்தனர்.

பிறப்பு, நிறம், மொழியை வைத்து வேறுபாடு காணக்கூடாது. சமஸ்கிருதம், தமிழ் போன்றவை பிராமிய எழுத்துக்களில் இருந்து உருவானவை. எனவே அனைத்து மொழிகளையும் கற்கவேண்டும். அமெரிக்க நாசா விஞ்ஞானிகள் கூட, கணினிக்கு ஏற்ற மொழி சமஸ்கிருதம் என்று கூறியுள்ளனர். அங்கு சமஸ்கிருதம் கற்க புலமைப் பரிசில் வழங்கப்படுகிறது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தென்மராட்சி, ஜூன் 20

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு ஞான வீரபத்திரர் ஆலய அலங்காரத் திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். ஜூலை முதலாம் திகதி விசேட சங்காபிஷேகம் இடம்பெற்று மாலை சுவாமி வீதி உலா வருவதுடன் திருவிழா நிறைவு பெறும். (207)

***

தென்மராட்சி, ஜூன் 20

சாவகச்சேரி சங்கத்தானை கந்தசுவாமி ஆலயப் பெருந் திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 30 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் ஜூலை முதலாம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (207)

***

யாழ்ப்பாணம், ஜூன் 20

திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து நாளை செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (7)

***

யாழ்ப்பாணம், ஜூன் 20

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

இன்று திங்கட்கிழமை காலை 6 மணி முதல் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 6 மணி வரை எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

நாளை மறுதினம் புதன்கிழமை விசேட பூசை வழிபாடுகளுடன் காலை 6 மணிக்கு இராஜகோபுர கும்பாபிஷேகம் இடம்பெற்று காலை 6.30 மணிக்கு மகா கும்பாபிஷேகம் இடம்பெறும்.

பிரதம குரு பிரதிஷ்டா சிரோன்மணி ஸ்ரீ விஸ்ணுஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தாச் சாரியார் பூசை வழிபாடுகளை நிகழ்த்துவார். (313-302)

***

யாழ்ப்பாணம், ஜூன் 20

தாவடி ஐந்து வேம்படி, புளியடி ஞானவைரவர் ஆலயத்தின் பஞ்ச குண்டபஷ புனராவர்த்தனபிரதிஷ்டாமகா கும்பாபிஷேகம் இன்று திங்கட் கிழமை முற்பகல் 10.35 மணிக்கு இடம்பெற வுள்ளது.

அதனைத் தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும். (ம-313)

***

யாழ்ப்பாணம், ஜூன் 20

நல்லூர் மூத்தவிநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர் வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும்.

எதிர்வரும் ஜூலை மாதம் ஆறாம் திகதி புதன் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (313)

***

காரைநகர், ஜூன் 20

காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெற உள்ளது.

இதில் தேர்த்திருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமையும் தீர்த்தத் திருவிழா மறுநாள் வெள்ளிக்கிழமையும் நடைபெறும். (ம-250)



சங்கானை சிலம்புப் புளியடி ஞானவைரவர் ஆலய பூங்காவனத் திருவிழாவில் சுவாமி வீதியுலா வருகிறார்.

## பாட முகாம்கள் பிற்போடப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்.கல்வி வலயப்பாடசாலைகளிலிருந்து க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு நடத்தப்படவுள்ள பாடமுகாம் மாகாண மட்டப் பரீட்சைகள் இடம்பெறவுள்ளதால் பிற்போடப்பட்டுள்ளது. இதற்கமைய எதிர் வரும் 27 ஆம் திகதி முதல் ஜூலை மாதம் முதலாம் திகதி காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை பாட முகாம் இடம்பெறும்.

யாழ்.கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் சித்திரம், நடன பாடமுகாம்களும், யாழ்.செங்குந்த இந்துக்கல்லூரியில் சங்கீத பாடமுகாமும், யாழ்.மத்திய கல்லூரியில் நாடக பாட முகாமும் இடம்பெறும் என்று யாழ். வலயக்கல்வி அபிவிருத்திப்பிரிவு பிரதிக்கல்விப் பணிப்பாளர் ரி.இராசலிங்கம் அறிவித்துள்ளார். (ம-313)

### மணிவிழாக்காணும் மாண்புறு நாயகன்



எமது கல்லூரியில் பயின்று ஆசிரியராய்,உப அதிபராய் பணியாற்றி உதவிக் கல்விப்பணிப்பாளராய் உயர்வு பெற்று வலிகாமம் கல்வி வலயத்தில் சேவையாற்றி இன்று ஓய்வுபெறும் மதிப்புக்குரிய

**திரு.சி.சுகுமாரன்**

அவர்கள் சீரும் சிறப்புமாய் நீடூழி வாழ அன்புடன் வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

(4965) (45-20-25)

### உத்தியோகபூர்வ முடிவுகள்

சுபிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 618
திகதி 2011/06/18

சுப்பர் இலக்கம்: 11
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 15 20 48 49

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 16,958,159.20 | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000,000.00 | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 50,000.00 | 09 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 2,000.00 | 237 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000.00 | 485 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100.00 | 11,993 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 1 இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 40.00 | 6,878 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 20.00 | 173,161 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 20.00 | 27,709 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ.7,900,820.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.
ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிசட்டதிட்டங்களுக்கு உட்பட்டது
பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது

அடுத்த புதன்கிழமை ரூ 17,230,297.60

தேசிய லொத்தர் சபை

### இந்தியாவில் உயர்கல்வி
### STUDY IN INDIA

**SSM**
College Of Engineering
College Of Arts & Science
குமரபாளையம், தமிழ்நாடு.

affiliated to Anna University & Periyar University

Available DEGREE / ENGINEERING Courses

Mechanical Engineering, Electrical, Electronics, Communication Engineering, Computer Science, Information Technology, Textile Technology & Chemistry, Bio Technology, Microbiology, BBA, B.com, Computer Applications, BBM, Bsc

மேற்கூறப்பட்ட பாடநெறிகள் யாவும் Sri Lanka University Grant Commission இனால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதால் இவற்றை பூர்த்தி செய்யும் மாணவர்கள் எதிர்காலத்தில் Canada, Australia, New Zealand, UK, USA, ஆகிய நாடுகளில் குடும்ப சகிதம் வதிவுரிமை (PR) பெற வாய்ப்புண்டு.

- IELTS தேவையில்லை
- Bank Sponsor தேவையில்லை
- தகைமை : G.C.E A/L - 3 Passes

O/L மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் 3 வருட Govt. Diploma (Engineering, Bio, Management) பாடநெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

Call : 0777 767818 / 0776 209887

SIC CENTER, 101/35, STANLY ROAD, JAFFNA.

### ஒத்துமாறல்

யாழ்.நகரில் அமைந்துள்ள மத்திய அரசின் கீழ் திணைக்களமொன்றில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் ஒருவர், யாழ். மாவட்டத்துக்குள் இயங்கும் மாவட்டச் செயலகம் அல்லது பிரதேச செயலகம் ஒன்றுக்கு ஒத்துமாற விரும்புகிறார். விரும்புவோர் கீழ்க்குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல:- 0779004401

### முன்பள்ளி ஆசிரியர்கள் தேவை

எமது முன்பள்ளிக்கு பயிற்றப்பட்ட ஆங்கிலம், தமிழ் கற்பிக்கக்கூடிய தகுதியான ஆசிரியர்கள் தேவை. தொடர்பு:- 077 9122918

Mathuram kids, Kaddapirai.

### வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கில் சகல வசதிகளுடனும் கூடிய 3.75 பரப்பில் வீடும், காணியும் விற்பனைக் [illegible]

தொடர்பு:- 0772759225

(4978) (-2745)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் சிவப்புப் பேட்டுக் குஞ்சுகளும் (விலை ரூபா 150) 30.06.2011 காலை விநியோகிக் கப்படும் முன் பதிவு செய்யவும்.

- ★ சூட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
- ★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
- ★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
- ★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593

நல்லூர் பாம் சென்ரர்

19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல. 021 222 6944

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 ★ 10 ★ 1930

மறைவு 12 ★ 07 ★ 2009

அமரர்
சிற்றம்பலம் வேலுப்பிள்ளை

(திதி: 20.06.2011 திங்கட்கிழமை)

ஆண்டுகள் இரண்டு சென்றாலும் ஆறாது எம்துயர்

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். (சி/962) (27-45) குடும்பத்தினர்

### 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 13.12.1954

உதிர்வு: 20.06.2006

திதி: 25.06.2011

அமரர்
ஐயாத்துரை
நிர்மலகுமாரன்

இப்பூவுலகில் நீங்கள்
இல்லாவிட்டாலும்
உங்கள் ஆசீர்வாதம் எமக்கு
என்றென்றும் உண்டு நீங்கள்
எமக்கு ஒரு பாசமிகு
கடமையுணர்ச்சியுள்ள
தந்தையாகப் பாடுபட்டதை
மறக்க முடியுமா?

கல்வியங்காடு (48,20,50) மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் ஒசாமா பின்லேடன் மீது தொடரப்பட்ட குற்ற வழக்குகள் தள்ளுபடி

நியூயோர்க், ஜூன் 20

அல் குவைதா இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின்லேடன் மீது அமெரிக்காவில் தொடரப்பட்ட குற்றவழக்குகள் தள்ளுபடி செய்யபட்டுள்ளன.

அல் குவைதா தீவிரவாத இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின்லேடன். கடந்த மே 2 ஆம் திகதி பாகிஸ்தான் அபோதா பாத்தில் அமெரிக்க இராணுவத் தினரால் சுட்டுக் கொல்லப் பட்டார்.

அமெரிக்க நீதிமன்றுகளில் இவர் மீது பல குற்றவழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. கடந்த 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் திகதி நியூயோர்க் இரட்டை கோபுரங்களை அல் குவைதா தீவிரவாதிகள் விமானங்கள் மூலம் மோதித் தகர்த்தனர். அதில் ஏராளமானவர்கள் பலியாகினர்.

இதற்கு மூளையாகச் செயற்பட்டவர் பின்லேடன். எனவே இவர் மீதும், உதவியாளராகவும் தற்போது அல் குவைதா இயக்கத்தின் தலைவருமான அல் ஜவாகிரி மீதும் அமெரிக்க நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இவை தவிர 1993 ஆம் ஆண்டு சோமாலியாவில் 18 அமெரிக்க இராணுவத்தினர் அல் குவைதா தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர்.

1998 ஆம் ஆண்டில் கிழக்கு ஆபிரிக்காவில் 2 அமெரிக்க தூதரகங்கள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. அதில் 224 பேர் பலியாகினர்.

இச்சம்பவங்களிலும் பின்லேடன் மீது அமெரிக்க நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு இருந்தது. இந்நிலையில் பின்லேடன் சுட்டுக் கொல்லப் பட்டதால் அவர் மீதான வழக்குகளைத் தள்ளுபடி செய்ய அமெரிக்க நீதித் துறையினர் முடிவு செய்தனர்.

அதற்கான மனு நியூயோர்க்கில் உள்ள மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. அதை ஏற்றுக் கொண்ட நீதிபதி லெவிஸ் கப்லான் பின்லேடன் மீதான குற்ற வழக்குகளைத் தள்ளுபடி செய்தார். வழக்கு தொடரப்பட்டவர் உயிருடன் இல்லாததால் அவர் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளைத் தள்ளுபடி செய்வதாக அறிவித்தார்.

# தீவிரவாத அமைப்புக்கள் குறித்து தனித்தனியே கறுப்புப் பட்டியல்

## ஐ.நா.பாதுகாப்புச் சபையில் தீர்மானம்

நியூயார்க், ஜூன் 20

அல்-குவைதா, தலிபான் தீவிரவாத அமைப்புகள் ஆகியன குறித்து தனித்தனியே கறுப்புப் பட்டியல் தயாரிக்க ஐ.நா. சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஐ.நா. பாதுகாப்பு சபைக் கூட்டம் வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்றது. இதில் இந்தியா உட்பட 15 உறுப்பு நாடுகள் கலந்து கொண்டன. தடை செய்யப்பட்ட அல்-குவைதா, தலிபான் இயக்கங்கள் ஆகியன தொடர்பாக இரு முக்கியத் தீர்மானங்கள் இந்தக் கூட்டத் தின்போது நிறைவேற்றப்பட்டன.

தீவிரவாத இயக்கம் தொடர்பாக இரு வகை கறுப்புப் பட்டியல் தயாரிப்பது என்றும், அல்-குவைதாவுடன் தொடர்புடைய தனி நபர், இயக்கங்கள் ஆகியன குறித்த பட்டியலும் தலிபானுடன் தொடர்புடைய தனிநபர் பட்டியலும், இயக்கங்கள் பற்றிய பட்டியலும் தயாரிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

இவ்வாறு தனித்தனியே கறுப்புப் பட்டியல் தயாரிப்பதன் மூலம் ஒருவர் எந்த அமைப்பைச் சேர்ந்தவர் என்பதை அடையாளம் கண்டு, பிரித்து பட்டியலிடுவது எளிதாகும். இந்த இரு தீர்மானங்களும் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டன. இந்தியா சார்பில் இந்தக்கூட்டத்தில் ஹர்தீப் சிங் புரி கலந்து கொண்டார்.

# வடகொரியாவின் போர் விமானம் எனக் கருதி பயணிகள் விமானம் மீது தென்கொரியா சூடு

சியோல், ஜூன் 20

வடகொரியாவின் போர்விமானம் எனக் கருதி பயணிகள் விமானத்தின் மீது தென்கொரிய இராணுவத்தினர் சரமாரியாக துப்பாக்கியால் சுட்ட சம்பவம் தென் கொரியாவில் பரபரப்பை ஏற்படுத்தியது.

தென் கொரியாவைச் சேர்ந்த ஏசியானா நிறுவனத்துக்குச் சொந்தமான பயணிகள் விமானம் சீனாவில் இருந்து சியோல் நகருக்குப் புறப்பட்டு வந்தது. அதில் 119 பயணிகள் இருந்தனர். அந்த விமானம் வட கொரியா கடல் எல்லையில் இருந்து சுமார் 12 கி.மீற்றர் தூரத்தில் தென் கொரியாவில் உள்ள ஜிமூன் தீவு பகுதியில் பறந்து கொண்டிருந்தது.

அப்போது ஐடோடாங் தீவில் தென்கொரிய இராணுவத்தினர் [illegible]பேர் பாதுகாப்பு பணியில் இருந்தனர். அந்த விமானம் வட கொரியாவின் போர் விமானம் என தவறுதலாக கருதி விட்டனர். பிரிவினை ஏற்பட்ட பிறகும் கடந்த 1953 ஆம் ஆண்டு முதல் வடகொரியாவுக்கும், தென் கொரியாவுக்கும் இடையே தொடர்ந்து பகை நீடித்து வருகிறது. எனவே, வட கொரியா போர் விமானம்தான் அத்து மீறி நுழைந்து விட்டதாக கருதி அதன் மீது சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர்.

சுமார் 99 ரவுண்டுகள் துப்பாக்கியால் சுட்டனர். நீண்ட தொலைவில் பறந்ததால் இவர்கள் சுட்ட துப்பாக்கி குண்டுகள் விமானத்தை தாக்காததால் பாதிப்பு எதுவும் இல்லை. எனவே, அதில் பயணம் செய்த 119 பேரும் தப்பினர்.

இந்தத் துப்பாக்கி சூட்டுச் சம்பவம் சுமார் 10 நிமிடங்கள் நடந்தது. அதன் பிறகுதான் தவறுதலாக சுட்டது தெரிய வந்தது.

இச்சம்பவம் தென்கொரியாவில் பரபரப்பை ஏற்படுத்தியது.



இந்தோனேஷியஅதிபர் சுசிலோ பாம்பாங்க்(இடது), மற்றும் அவரது மனைவி கிறிஸ்டினி (இடமிருந்து இரண்டாவது), ஜப்பானில் உள்ள இந்தோனேஷிய தாதியர்களைச் சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

# ஆப்கனில் குண்டு வெடித்து 4 பேர் பலி

காபூல், ஜூன் 20

ஆப்கானிஸ்தானில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் 4 பேர் இறந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் கஜினி மாகாணத்தில் சனிக்கிழமை அதிகாலை இரண்டு குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்தன. இரண்டு மணிநேர இடைவெளியில் வெவ்வேறு இடங்களில் வெடித்த குண்டுகளில், நேட்டோ படைத் தளத்துக்கு சரக்குகளை ஏற்றிச்சென்ற வாகனங்கள் சேதமடைந்தன.

இதில் வாகனங்களுக்குப் பாதுகாப்பாகச் சென்று கொண்டிருந்த தனியார் பாதுகாப்பு நிறுவனப் பாதுகாவலர்கள் 4 பேர் இறந்துள்ளனர் என மாகாணக் காவல்துறைத் தலைவர் முகம்மது ஹுசைன் தெரிவித்துள்ளார்.

# மும்பைத் தாக்குதல் வழக்கு விசாரணை: நீதிபதி திடீர் மாற்றத்தால் ஒத்திவைப்பு

மும்பைத் தாக்குதலில் ஈடுபட்டனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ள பாகிஸ்தானியர்கள் மீதான வழக்கை விசாரித்து வந்த நீதிபதி திடீரென்று மாற்றம் செய்யப்பட்டதால் வழக்கு விசாரணை ஒருவார காலத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

2008ஆம் ஆண்டு மும்பையில் நடந்த தீவிரவாதத் தாக்குதலில் 122 பேர் கொல்லப்பட்டனர். இந்த நாச வேலையில் தொடர்புள்ளவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 7 பாகிஸ்தானியர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது. இதில் லஷ்கர்-இ-தொய்பா தலைவர் ஸக்கியுர் ரஹ்மான் லக்வியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ராவல்பிண்டியிலுள்ள தீவிரவாதக் குற்றங்களுக்கான 3ஆம் சிறப்பு நீதிமன்றத்தில் இவர்கள் மீதான வழக்கை கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் விசாரித்து வந்தார் நீதிபதி ராணா நிசார் அகமது. கடைசியாக ஜூன் 11ஆம் திகதி மும்பைத் தாக்குதல் குறித்த வழக்கு விசாரணை நடைபெற்றது. இப்போது திடீரென்று நீதிபதி ராணா மாற்றம் செய்யப்பட்டார்.

சனிக்கிழமை இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்த போது, நீதிபதி எவருமில்லாத காரணத்தால் ஒரு வார காலத்துக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என நீதிமன்ற அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த வழக்கை இதுவரை 3 நீதிபதிகள் விசாரித்துள்ளனர். பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ கொலை வழக்கும் இதே நீதிமன்றத்தில்தான் விசாரிக்கப்பட்டு வருகிறது. அந்த வழக்கில் 5 பேர் மீது சதிக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பல்வேறு காரணங்களால் இவ்விரு வழக்குகளின் விசாரணைகள் தாமதப்பட்டு வருகின்றன. நீதிபதிகளுக்குக் கொலை மிரட்டல் வருவதால் விசாரணை தாமதமாவதும், நீதிபதிகள் மாற்றலாவதும் வாடிக்கையாகியுள்ளது.

பெனாசீர் கொலை வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் மீது பிடிவிறாந்து உத்தரவு பிறப்பித்தவர் நீதிபதி ராணா.

# சிரியாவில் அரச எதிர்ப்பாளர்களில் சிறுவன் உட்பட 16 பேர் மரணம்

சிரியாவில் ஜனநாயக உரிமைகளைக் கோரி ஜனாதிபதி பஷார் அசாதுக்கு எதிராக வெள்ளிக்கிழமை திரண்ட பொது மக்கள் மீது இராணுவம் நடத்திய தாக்குதலில் சிறுவன் உட்பட 16 பேர் இறந்தனர், 15 பேர் காயமடைந்தனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது.

சிரிய இராணுவத்தினரும் பொலிஸாரும் ஜனாதிபதிக்கு விசுவாசிகளான துப்பாக்கி ஏந் திய சமூகவிரோதிகளுடன் சேர்ந்து கொண்டு ஜனநாயக உரிமைக்காகப் போராடும் சாதாரண மக்களை வேட்டையாடி வருகின்றனர். மூன்றுமாதங்களுக்கும்மேலாக இந்தக் கிளர்ச்சி அடங்காமல் நாளுக்கு நாள் வலுத்து வருகிறது.

வெள்ளிக்கிழமை முஸ்லிம்களுக்கு முக்கியமான நாள் என்றும் பாராமல், அரசு எதிர்ப்பாளர்களை இராணுவம் கொடூரமாகத் தாக்கியது.

# புகுஷிமா அணு உலை சிக்கல் நிலை நீடிக்கிறது

டோக்கியோ, ஜூன் 20

ஜப்பானில்ஆழிப்பேரலை, பூகம்பம் ஆகியவற்றால் பாதிப்புக்குள்ளான புகுஷிமா அணு உலையில் மேற்கொள்ளப்பட்டுவரும் பாதுகாப்பு ஏற்பாடுகளில் சிக்கல் நீடிக்கிறது.

புகுஷிமா அணு உலை யில் வெள்ளிக்கிழமை அணுக் கதிர் வீச்சினால் பாதிப்புக்குள்ளான நீரைச் சுத்தப்படுத்தும் பணி ஆரம்பமாகியது.

இந்த நீரை சுத்தப்படுத்தும் இயந்திரத்திலுள்ள ஓர் அமைப்பு அணுக்கதிர் வீச்சினால் பாதிப் புக்குள்ளான நீரிலுள்ள சீசியம் அணுப் பொருளை உறிஞ்சும் தன்மையுடையது.

வேலை செய்ய ஆரம்பித்த 5 மணி நேரத்துக்குள்ளாகவே இந்த அமைப்பு தனது அதிகபட்சத் திறனை அடைந்து விட்டதால் முழுமையாக நீரை சுத்தப்படுத்த முடியவில்லை.

இவ்வாறு அணு உலையைப் பராமரிக்கும் டோக்கியோ மின் கோர்ப்பரேஷனின் அதிகாரி ஜுனிச்சி மட்ஸமோட்டோ தெரிவித்துள்ளார். கதிர்வீச்சுக்குள்ளான நீரை சுத்தப்படுத்தும் பணி மீண்டும் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பது தெரியாது என்றும் அவர் கூறினார்.


கடந்த மார்ச் 11ஆம் திகதி ஆழிப்பேரலை, பூகம்பம் ஆகியவற்றால் பாதிப்புக்குள்ளான புகுஷிமா அணு உலையை குளிர்விக்க உபயோகப் படுத்தப்பட்ட ஒரு இலட்சம் தொன்னுக்கும் மேற்பட்ட நீர் கதிர் வீச்சு பாதிப்புக்குள்ளானது.

இதில் சிறிதளவு நீர் கடலுக்குள் செலுத்தப்பட்டது. மீதமுள்ள நீரை மீண்டும் அணு உலையைக் குளிர்விக்கவோ அல்லது வேறு பயன்பாட்டுக்கு மறுசுழற்சி செய்யவோ அதிலிருக்கும் கதிர்வீச்சு நீக்கப்படவேண்டும். இல்லையெனில் அந்நீர் அணு உலையின் குளிர்விப்பு அமைப்பைப் பாதிக்கும் என்று கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
20 ஜூன் 2011 திங்கட்கிழமை

# யாழ்.மாவட்டத்தின் சிறந்த அணியாக யாழ்.சென்றல் தெரிவாகியுள்ளது



யாழ்ப்பாணம், ஜூன் 20
பாட்டா மற்றும் சண்டே ரைம்ஸ் நிறுவனங்களின் அனுசரனையுடன் பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கைப் பாடசாலை துடுப்பாட்டச் சங்கம் 2011ஆம் ஆண்டுக்கான 19 வயதுக்கு உட்பட்ட சிறந்த அணிகளைத் தெரிவு செய்துள்ளது. யாழ். மாவட்டத்தில் சிறந்த அணியாக யாழ். சென்றல் தெரிவாகியுள்ளது.

முதலிடத்தை மேல் மாகாணத்தின் பாணந்துறை றோயல் கல்லூரியும்,இரண்டாம் இடத்தை வடமேற்கு மாகாணத்தின் கேகாலை சென். மேரிஸ் கல்லூரியும் மத்திய மாகாணத்தின் சென். சில்வெஸ்ரர் கல்லூரியும், தென்மாகாணத்தில் அம்பலங்கொட சிறிதேவனந்த கல்லூரியும்,வடமாகாணத்தில் யாழ். மத்தியகல்லூரியும் தெரிவு செய்யப்பட்டன. மிகவும் பிரபல்ய அணியாக கரன்தெனிய மத்திய கல்லூரி தெரிவுசெய்யப்பட்டது.

யாழ்.மத்திய கல்லூரி கலந்து கொண்ட 8 போட்டிகளில் ஆறு போட்டிகளில் வெற்றியையும் 2 போட்டிகளில் முதல் இன்னிஸ் முன்னணியுடன் சமநிலையையும் பெற்றுள்ளது.

வெற்றியீட்டிய பாடசாலைகளுக்கான பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் சிறிமாவோ பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (ஐ-23)

# ஆண்களுக்கான கரப்பந்தாட்டம் கரெவட்டி அணி சம்பியனானது

வலி. வடக்கு, ஜூன் 20
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் கரவெட்டி பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற அணி யாழ்.மாவட்ட சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் நல்லூர் பிரதேச செயலக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணியும் கரவெட்டி பிரதேச செயலக இளைஞர் சேவைகள்மன்ற அணியும் மோதிக் கொண்டன.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் முதல் மூன்று நேர் சுற்றுக்கள் முறையே 25:05, 25:08, 25:10, புள்ளிகள் என்ற அடிப்படையில் கரவெட்டி பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற அணி நல்லூர் பிரதேச செயலக இளைஞர்கள் சேவை மன்ற அணியை வென்று யாழ். மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

(ம-86)

# வடமாகாண மேசைப்பந்தாட்டம் யாழ்.மத்திய கல்லூரி அணி சம்பியன்

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான மேசைப் பந்தாட்டப் போட்டியில் யாழ். மத்தியகல்லூரி அணி வடமாகாண சம்பியனாகியது.

வவுனியா நகர சபை உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரிஅணியைஎதிர்த்து வவுனியா சுந்தரபுரம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணியினரும் தத்தமது அணியே வெற்றி பெற வேண்டும் என்ற நிலையில் கடுமையாக மோதிக்கொண்டனர். ஆட்ட நிறைவில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்று வடமாகாண சம்பியனானது.

முதலிடத்தை யாழ்.மத்திய கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை வவுனியா சுந்தரபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும், மூன்றாமிடத்தை மன்னார் சென். ஆன்ஸ் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

இந்த அணிகள் தேசிய மட்டத்தில் அகில இலங்கை ரீதியாக நடைபெறவுள்ள போட்டிகளில் விளையாடத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-23)


# விறுவிறுப்பான உதைபந்தாட்டம்: பிரதேச சம்பியனாக இருதயராசா

கரம்பொன், ஜூன் 20
ஊர்காவற்றுறை பிரதேச மட்டத்தில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டத்தின் இறுதியாட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராசா விளையாட்டுக்கழகம் பிரதேச சம்பியனாகத் தெரிவானது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம் பெற்றது. இப்போட்டியில் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகிய மெலிஞ்சிமுனை இருதயராசா விளையாட்டுக்கழகமும் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் இரு அணிகளும் மிகவும் துல்லியமான முறையில் பந்தை நகர்த்தி அசத்தி ரசிகர்களை கவர்ந்தன. எந்த அணி முதலில்கோல் போடப் போகின்றது என்பதை எவராலும் தீர்மானிக்கமுடியவில்லை. அந்த அளவுக்கு இரு அணிகளும் பந்தை கோல்கம்பங்கள் வரை நகர்த்தின. இரு அணிகளும் விறுவிறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதும் முதல் பாதி ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

இடைவேளையின் பின் இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகியது. இரு அணிகளும் அனல் பறந்த ஆட்டம் ஆடின. தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகம் தமக்கு கிடைத்த இரண்டு சந்தர்ப்பங்களையும் நழுவவிட மெலிஞ்சிமுனை இருதயராசா விளையாட்டுக்கழகம் கிடைத்த சந்தர்ப்பத்தை கோலாக பயன்படுத்த ஆட்டத்தின் விறுவிறுப்பு உச்சக்கட்டத்தை அடைந்தது. இரு அணிகளும் திறமையான நுணுக்கமான முறையில் மீண்டும் ஆட்டத்தை வெளிப்படுத்த மீண்டும் மெலிஞ்சிமுனை இருதயராசா விளையாட்டுக் கழகம் ஒருகோல் போட்டது. ஆனால் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகம் இறுதிவரை போராடிய போதும் கோல் போடமுடியவில்லை. இந்நிலையில் மெலிஞ்சிமுனை இருதயராசா விளையாட்டுக்கழகம் 2:0 என்ற கணக்கில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகத்தை வென்று ஊர்காவற்றுறை பிரதேச சம்பியனானது. (ம-325)



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.செயலக விளையாட்டுப் பிரிவு யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய தடகளப் போட்டியில் ஆண்களுக்கான உயரம் பாய்தல், பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டிகளில் சில காட்சிகள். (ம-80)

# வடமாகாண பாடசாலைகளின் பெருவிளையாட்டுக்கள் வவுனியாவில்

யாழ்ப்பாணம், ஜூன் 20
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெருவிளையாட்டுப் போட்டியில் 15 வயது பிரிவு,17 வயது பிரிவு,19 வயது பிரிவு மகளிருக்கான வலைப்பந்தாட்டப் போட்டி இன்றும் நாளையும் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ். மாவட்டத்திலிருந்து 15 வயது பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி,வட இந்து மகளிர் கல்லூரி,கொக்குவில் இந்துக்கல்லூரி ஆகியனவும் 17 வயதுப்பிரிவில்,வட இந்து மகளிர் கல்லூரி,சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி,தெல்லிப்பழை யூனியன் கல்லூரி,ஆகியனவும் 19 வயது பிரிவு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி,கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியனவும் பங்குபற்றவுள்ளன. (ம-23)

# விளையாட்டுத் திணைக்களம் நடத்திய தடகளப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு, ஜூன் 20
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளுக்குடையே நடத்திய தடகள போட்டிகளில் பெண்கள் பிரிவில் வெற்றி பெற்றோர் விவரம் வெளியாகியுள்ளது. போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றன.

முடிவுகள் வருமாறு:

200 மீற்றர் ஓட்டம் - எம். கமலினி (சங்கானை), ஆர். மிதிலா (சாவகச்சேரி), எஸ். ஆரணி (தெல்லிப்பழை),

800 மீற்றர் ஓட்டம் எ.அனெற்ரா (சண்டிலிப்பாய்), எஸ். லக்ஷா (உடுவில்), எம். தாரணி (சண்டிலிப்பாய்).

5 ஆயிரம் மீற்றர் ஓட்டம் ஆர். காவேரி (தெல்லிப்பழை), என். சுமதி (சண்டிலிப்பாய்), என்.தாரணி (சண்டிலிப்பாய்).

10 ஆயிரம் மீற்றர் ஓட்டம் எம்.சுமதி (சண்டிலிப்பாய்), வி.கினோபா(உடுவில்), எஸ்.நவரஞ்சினி (சண்டிலிப்பாய்).

நீளம் பாய்தல் - எஸ். நிஷாந்தி (தெல்லிப்பழை), பி.பிரியதர்சினி (தெல்லிப்பழை), எஸ்.பானுஜா (நல்லூர்).

உயரம் பாய்தல் எஸ். ஸ்ரீசக்தி (சங்கானை), வி.சோபனா (சண்டிலிப்பாய்),

கோலூன்றிப் பாய்தல் எ.பவித்திரா (தெல்லிப்பழை), ஆர். ஐக்ஷனா (தெல்லிப்பழை), எஸ். நிஷாந்தி (தெல்லிப்பழை).

தட்டெறிதல் ரி.பானுஜா (பருத்தித்துறை), ரி.அபிராமி (நல்லூர்), எ.சிரோமினி (நல்லூர்).


ஈட்டி எறிதல் எஸ். டெனிஸ்கா (சங்கானை), ரி. சோபனா (சண்டிலிப்பாய்), எஸ். சுரேந்தினி (உடுவில்).

400 மீற்றர் தடை தாண்டல் எ. அனெற் (சண்டிலிப்பாய்), எஸ். ரஜந்தா (உடுவில்), எஸ். லக்ஷா (உடுவில்).

1500 மீற்றர் ஆர். காவேரி (தெல்லிப்பழை), என். சுமதி (சண்டிலிப்பாய்), ஆர். துஷ்யந்தி (சங்கானை).

முப்பாய்ச்சல் எஸ். நிஷாந்தி (தெல்லிப்பழை), பி.பிரியதர்சினி (தெல்லிப்பழை), எஸ். ரஜந்தா(உடுவில்)

குண்டு போடுதல் கே. கருணாதேவி (நெடுந்தீவு), எஸ். வைஸ்ணவி (சாவகச்சேரி), எஸ். டென்சிகா (சங்கானை).



யாழ். மாவட்ட மட்டப் போட்டியில் உயரம் பாய்தலில் முத லாம் இடத்தைப் பெற்று மாகாணமட்டத்தை எட்டும் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய மாணவி செல்வி துரைசிங்கம் சுபர்ணியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ லங்கன் பிரிமியர் லீக்

# இந்திய வீரர்கள் இல்லை!

## இந்திய கிரிக்கெட் சபை தீர்மானம்

அடுத்த மாதம் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ள ஸ்ரீலங்கன் பிரிமியர் லீக் போட்டிகளில் தனது வீரர்களை விளையாட அனுமதிப்பதில்லை என இந்திய கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.


இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் மாகாண அணிகளுக்கிடையிலான இந்தச் சுற்றுப்போட்டி ஜூலை 19 ஆம் திகதி ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த அணிகள் ஒவ்வொன்றிலும் 5 வெளிநாட்டு வீரர்களைச் சேர்ப்பதற்கும் அனுமதிக் கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று சனிக்கிழமை மாலை இந்திய கிரிக்கெட் சபை (பிசிசிஐ) தலைமையகத்தில் நடைபெற்ற இந்திய பிரியமியர் லீக் கூட்டமொன்றின் போது, இலங்கைக்கு இந்திய வீரர்களை அனுப்புவது குறித்து பிசிசிஐ தலைவர் சஷாங் மனோகர் கவலை வெளியிட்டுள்ளதாக இந்தியாவின் சண்டே எக்ஸ் பிரஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் பிரிமியர் லீக் போட்டிகளில் இந்திய வீரர்கள் விளையாட அனுமதிக்கப்பட மாட்டார்கள் என பிசிசிஐ உயரதிகாரி ஒருவர் சண்டே எக்ஸ்பிரஸுக்கு உறுதிப்படுத்தியதாக அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

''இந்தப் போட்டிகளை யார் ஏற்பாடு செய்கிறார்கள் எனத் தெரியவில்லை. இந்த நிகழ்வு குறித்து உத்தியோகபூர்வமான கடிதங்கள் எதுவும் எமக்கு இன்னும் கிடைக்கவில்லை. பத்திரிகைகள் மூலமாக மாத்திரமே ஸ்ரீலங்கன் பிரிமியர் லீக் போட்டிகள் குறித்து நாம் அறிந்துள்ளோம்'' என அவர் கூறினார். ''இந்திய வீரர்கள் அதில் விளையாட மாட்டார்கள்'' என்றும் அவர் கூறியுள்ளார்.

இதற்குப் பதிலடியாக இந்தியன் பிரிமியர் லீக் போட்டிகளில் இலங்கை வீரர்கள் பங்குபற்றுவதற்கு இலங்கை கிரிக்கெட் சபை தடை விதிக்கக் கூடும் எனவும் மேற்படி பத்திரிகை தெரிவித்துள்ளது.





# என்ன செய்யப் போகிறோம்?

## மண்டையைப் பிய்க்கிறது இலங்கை கிரிக்கெட் சபை

ஸ்ரீலங்கன் பிரிமியர் லீக் போட்டிகளில் விளையாட இந்திய வீரர்களை அனுமதிப்பதில்லை என்ற இந்திய கிரிக்கெட் சபையின் (பிசிசிஐ) தீர்மானம் குறித்து அதிர்ச்சியடைந்துள்ள இலங்கை கிரிக்கெட் சபை, இது குறித்து இன்று கலந்துரையாடவுள்ளது.

இன்று திங்கட்கிழமை இந்த விடயம் குறித்து இடைக்கால நிர்வாகக் குழு கலந்துரையாடும்.

''இந்த நிலைமையை நாம் ஆராய வேண்டியிருப்பதால் இது குறித்து இப்போதே கருத்துக்கூறுவது கால முதிர்ச்சியற்றதாகும்'' என்று இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க கூறியுள்ளார்.

இலங்கை மாகாண அணிகளுக்கிடையில் நடைபெறவிருக்கும் இந்தப் போட்டிகளில் பிரவீண் குமார், முனாப் பட்டேல், இர்பான் பதான், தினேஸ் கார்த்திக், ஆர்.அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, மனோஜ் திவாரி, சௌரப் திவாரி, உமேஸ் யாதவ், வினய் குமார், மனிஷ் பான்டே, போல் வால்தாட்டி ஆகிய 12 இந்திய வீரர்கள் விளையாடவிருந்தனர் .

இவர்களுக்கு ஆட்சேபனையில்லை என்ற சான்றிதழை வழங்க இந்தியக் கிரிக்கெட் சபை மறுப்பு தெரிவித்துள்ளது.

இந்தப் போட்டிகள் இலங்கை கிரிக்கெட் சபையினால் அல்லாமல் சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட சமர்செட் என்டெர் டெய்ன்மன்ட் எனும் தனியார் நிறுவனமொன்றினால் நடத்தப்படுவதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தப் போட்டிகளை ஏற்பாடு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள சமர்செட் என்டெர் டெய்ட்ன்மன்ட் நிறுவனமானது இலங்கை கிரிக்கெட் சபையின் சந்தைப்படுத்தல் கிளையாகும் என நிஷாந்த ரணதுங்க தெரிவித்துள்ளார்.

# வேகத்தில் மிரட்டும் மே.தீவுகள் தாக்குப்பிடிக்குமா இந்திய அணி?

இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுடையிலான முதல் டெஸ்ட் போட்டி, இன்று கிங்ஸ்டன் ஜமைக்காவில் ஆரம்பமாகிறது.

மேற்கிந்தியத் தீவுகள் சென்றுள்ள இந்திய அணி ''ருவென்ரி-20'', ஒருநாள் தொடர் ஆகியவற்றில் வென்று அசத்தியது. இந்த நிலையில் இரு அணிகள் இடையிலான முன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில், முதல் போட்டி இன்று கிங்ஸ்டனில் தொடங்குகிறது.

இந்திய அணியை பொறுத்தவரையில், இதற்கு முன் மேற்கிந்தியத் தீவில் நடந்த டெஸ்ட் தொடர்களில், முதல் போட்டியை தோல்வியுடன் தான் தொடங்கியுள்ளது. மூன்று போட்டிகள் கொண்ட தொடரின் முதல் போட்டியில் தோற்றுவிட்டு, பின் சிரமப்பட்டு மீண்டு வந்து தொடரைச் சமநிலை செய்ய முயற்சிப்பார்கள்.

பொதுவாக தொடரைக் கைப்பற்ற வேண்டும் எனில், முதல் போட்டியின் வெற்றி முக்கியம். இந்த நிலையில், இம்முறை வெற்றி கிடைக்குமா என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில், ''ருவென்ரி-20'' இல் வெற்றி பெற்ற இளம் இந்திய வீரர்கள் அடங்கிய அணி, அடுத்து தொடர்ந்து மூன்று ஒருநாள் போட்டிகளிலும் சாதித்தது.

அதன் பின் மேற்கிந்தியத் தீவுகளின் வேகத்தில் சிக்கி, தோல்வியை ஏற்றுக் கொள்ளத் தொடங்கி விட்டனர். கடைசியாக நடந்த இரண்டு போட்டிகளில், சிறப்பாக செயல்பட்டு வென்ற உற்சாகத்தில் டேரன் சமி தலைமையிலான அணியினர் உள்ளனர்.

ஐந்தாவது போட்டி நடந்த கிங்ஸ்டனில், இந்திய வீரர்களின் ''சோர்ட் பிட்ச்'' பலவீனம் நன்கு தெரிந்தது. இதற்கேற்ப கீமர் ரோச், சிம்மன்ஸ் மிரட்டும் வகையில் செயல்பட்டனர். இந்தநிலையில் அதே கிங்ஸ்டனில் தான், இன்று முதல் டெஸ்ட் துவங்குகிறது.



இந்தியா - மே.தீவுகள் அணிகள் மோதும் முதலாவது டெஸ்ட் இன்று கிங்ஸ்டனில்

இதற்கு முன் இங்கு நடந்த 10 டெஸ்ட் போட்டிக ளில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 6 இல் வென்றுள்ளது. இந்தியா ஒரு போட்டியில் மட்டும் (2006) வென்றது. 3 போட்டிகள் சமனிலை ஆனது. இருந்தாலும், அணித் தலைவர் டோனி, டிராவிட், லட்சுமண் ஆகியோரது வருகையால் அணியின் துடுப்பாட்டம் பலப்பட்டுள்ளது.

இதனால் இந்தமுறை இந்திய அணி சற்று சுதாரிப்புடன் செயல்பட்டு வெற்றியு டன் தொடங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பந்து வீச்சே ஆட்டத்தை தீர்மானிக்கும்....



டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்திய அணியின் எதிர்காலத்தை பந்துவீச்சுத் தான் தீர்மானிக்கும் என்று இந்திய அணியின் முன்னாள் தலைவர் ராகுல் ராவிட் தெரிவித்துள்ளார்.

இந்திய வீரர்களில் சச்சினுக்கு அடுப்படியாக டெஸ்ட் போட்டியில் 12 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர் என்ற பெருமைக்கு உரியவர் ராவிட். இவர்கள் இருவர் தவிர ஆஸ்திரேலியாவின் ரிக்கி பொண்டிங் மட்டுமே டெஸ்ட் போட்டிகளில் 12 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்துள்ளார்.

டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் எதிர்காலம் குறித்து அவர் கூறியுள்ளது, டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி இப்போது முதலிடத்தில் உள்ளது. டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி எதிர்காலத்தில் எவ்வளவு சிறப்பாக இருக்கும் என்பதை பந்துவீச்சுதான் தீர்மானிக்கும். ஏனெனில் பெரும்பாலும் டெஸ்ட் போட்டியின் இறுதி நாளில் பந்து வீச்சாளர்களின் ஆதிக்கம் தான் அதிகம் இருக்கும்.

இந்திய அணியில் இப்போது சிறந்த இளம் துடுப்பாட்ட வீரர்கள் இருக்கிறார்கள். அவர்களில் யாரையும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. இளம் வீரர்கள் அதிக அளவு ஒருநாள் போட்டிகளில் விளையாடுவது நல்ல அனுபவத்தைத் தரும். நமது அணியில் இளம் வீரர்கள் வெகு சிறப்பாக விளையாடி வருகிறார்கள் என்றார்.

(15)

# தேவையில்லை ருவென்ரி - 20

*சர்வதேச அளவில் 20 ஓவர் கிரிக்கெட் போட்டிகள் தேவையற்றது என்று இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் ஹரி கிர்ஸ்டன் கருத்துத் தெரிவித்துள்ளார்.*

*இப்போது சொந்த நாடான தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளராக உள்ள அவர், சிங்கப்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டார். அப்போது அவர் கூறியதாவது:*

*20 ஓவர் கிரிக்கெட் போட்டிகளை உள்நாட்டு அளவில் நடத்தினால் போதுமானது. சர்வதேச அளவில் நாடுகளுக்கு இடையே 20 ஓவர் கிரிக்கெட் தேவையற்றது என்பதே எனது கருத்து.*

*ஏனெனில் டெஸ்ட், ஒருநாள் போட்டிகளின் முக்கியத்துவத்தை 20 ஓவர் போட்டிகள் குறைத்து விடுகின்றன. இது நாம் அனைவருமே ஏற்றுக் கொள்ள வேண்டிய விடயம். அதே நேரத்தில் உள்நாட்டில் சிறந்த வீரர்களை அடையாளம் கண்டு கொள்ள 20 ஓவர் போட்டிகளை நடத்தலாம். இப்போது இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் உள்நாட்டு அளவில் 20 ஓவர் கிரிக்கெட் போட்டிகளை நடத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இது வரவேற்கத்தக்கது என்றார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம்- கந்தர்மடம்

ஆரி கோயில் என அழைக்கப்படும்

**சிவ உதய நாகபூஷணி அம்மன் கோயில்**

புனராவர்த்தன சம்புரோக்ஷண ஏககுண்டபக்ஷ

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

நிகழும் மங்கலகரமான கரவருஷம் ஆனி மாதம் 5ஆம் நாள் (20.06.2011) திங்கட்கிழமை பஞ்சமித்திதியும், அவிட்ட நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் மு.ப 10.02 மணி முதல் மு.ப 11.50 மணி வரையுள்ள சிங்க லக்கினத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

மஹா கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதம குரு
சிவஸ்ரீந.பாலசுப்பிரமணியக்குருக்கள் ( கொக்குவில் மாத்தனை முருகன் ஆலயம், நொச்சியம்பதி காளியம்பாள் ஆலயம் )

(5017) ஆலய தர்மகர்த்தா செ.சூரியனும்,
அடியார்களும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



(1854)

சாவகச்சேரி இந்துக்கல்லூரி
மாணவி
**டேவிற் கிருத்திகா**
அவர்கள் நேற்று (19.06.2011) ஞாயிற்றுக் கிழமை சரசாலை லுணுவில் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் முதாலம் இடத்தைப் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசைப்பிள்ளை (வாசி)
மகாராஜா ஸ்ரேர், கெருடாவில்

## 60 ஆவது பிறந்ததினவாழ்த்து



அன்பையும் அறிவையும்
புகட்டி எம்மை
நல்வழிப்படுத்திய
எமது அன்புக்கும் மதிப்புக்கும்
உரிய ஆசான்
திரு.அ.குணசிங்கம்
ஆசிரியர் அவர்களுக்கு எமது
இதயம் கனிந்த 60 ஆவது
பிறந்தநாள் வாழ்த்துக்கள்
உரித்தாகுக.
அறுபது அகவை முடிந்தும்
உங்கள் சேவை தொடர
வாழ்த்துகின்றோம்.



O/L, 2009 மாணவர்கள்
யாழ்ப்பாணம்
இந்துக் கல்லூரி.

## சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தொழிலாளி (பழரச தொழிற்சாலை) குறியீட்டு இல: 316/15

சம்பளத்திட்டம் : 9450-11000 / 75x10, 80x10

**தகைமை**
கூட்டுறவுப் பணியாளர் 16ஆவது சம்பளத் திட்டத்தில் ஒரு வருடத்துக்குக் குறையாத அனுபவம்.
அல்லது
05ஆம் வகுப்பு சித்தியுடன் நல்ல தேக ஆரோக்கியம் இருத்தல் வேண்டும்.

2. தொழிலாளி (பழரச தொழிற்சாலை) குறியீட்டு இல:- 318/17

சம்பளத்திட்டம்:- 8950-10300 / 65x10, 70x10

**தகைமை**
05 ஆம் வகுப்பு சித்தியுடன் நல்ல தேக ஆரோக்கியம் இருத்தல் வேண்டும்.

**வயதெல்லை 18-45 வரை**

விண்ணப்ப முடிவு திகதி: 30.06.2011 விண்ணப்பப் படிவங்களை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்று "பொதுமுகாமையாளர், சுன்னாகம் பல நோ.கூ. சங்கம்" என முகவரியிட்டு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**குறிப்பு:**
பழரச தொழிற்சாலை உற்பத்தித்துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கும் மற்றும் அது தொடர்பான சான்றிதழ் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

பொது முகாமையாளர்

(பி/958)

### வேட்பாளர்களுக்கான கலந்துரையாடல் வடமராட்சியில் நேற்று

வடமராட்சிப் பிரதேசத்துக்குட்பட்ட நான்கு பிரதேச சபைகளுக்குமான வேட்பாளர் கலந்துரையாடல் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளரும் வல்வெட்டித்துறை நகரசபை வேட்பாளருமாகிய எவ்.எக்ஸ். குலநாயகம் தலைமையில் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் இல்லத்தில் நடைபெற்றது. தமிழரசுக் கட்சியின் செயலாளரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணைச் செயலாளருமான மாவை சோ.சேனாதிராஜாமற்றும்புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் ஆகியோர் இதில் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினார்.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது, உள்ளூராட்சிச் சபைகளில் கூட்டமைப்பினால்முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள்,தேர்தல்வியூகங்கள் என்பன பற்றி இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது. (10)


### கடை வாடகைக்கு

இருமாடிக் கட்டடம் சகல வசதிகளுடன், கரடிப்போக்குச்சந்தி கிளிநொச்சி. A.9. வீதிக்கு அருகில் கடை ஒன்று வாடகைக்கு உள்ளது.
தொடர்பு :- 0770697763, 0773247128 C/967

### A/L - 2013

கலைப்பிரிவு மாணவர்களுக்கான
விவசாயத் தொழில்நுட்பவியல்
வகுப்பு ஆரம்பம் 25/06/2011 பி.ப 1.00 மணி
ஆசிரியர்-திரு. வை.சசிகுமார்
DMI
JAFFNA.
(5922)

### A/L - 2011

விவசாய விஞ்ஞானம்
முன்னோடிப்பரீட்சையும் கருத்தரங்கும்
(5 நாள்கள்)
விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.
ஆசிரியர்
திரு.வை.சசிகுமார் (0770691573)
★ 28/06/2011 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
DMI
JAFFNA


### புலமைச்சுடர்

வழமைதோறும் திங்கட்கிழமை வெளிவரும் "புலமைச்சுடர்" தவிர்க்க முடியாத காரணத்தால் நாளை செவ்வாய்க்கிழமை (21.05.2011) வெளிவரும் .


### Short Period Success


இளைஞர், யுவதிகளுக்கு அரியவாய்ப்பு சாவகச்சேரியில் அமைந்துள்ள Innovage(multinational) கம்பனிக்கும், அதன் கிளைகளுக்கும் Manager, A.S.M, Supervisor, Distributor போன்ற பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன. தாங்களும் O/L, A/L சித்திபெற்றவரா்யின் தொடர்பு கொள்ளலாம். பயிற்சியுடன் கூடிய சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: Sri 0770771377, udaya 0717494735


### தவறிவிட்டது

EPUZ 0646(பின்பக்கம்) மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு யாழ். நகரில் தவறிவிட்டது. [illegible] 51 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

## திருமதி வைத்தியலிங்கம் சிவஞானபூரணி



தோற்றம்:
27.03.1922

மறைவு:
15.07.2006

(திதி: அபரபக்க பஞ்சமி- 20.06.2011)

அவனியில் நடமாடும் தெய்வமதாய் - எங்கள்
அகந்தனில் ஒளிர்ந்த குலவிளக்கே!
அன்பெனும் அமுதினை நாளுமூட்டி - நல்ல
அறிவுரை பகன்ற தாயமுதே!
அந்தகன் அழைக்க சென்றாயே - எம்மை
அகிலத்தில் தவிக்க வைத்தாயே!
ஆண்டுகள் ஐந்திங்கு ஓடினாலும் - தாயே
ஆறாது உனைப் பிரிந்த துயரதுவே!

நீங்கா நினைவுகளுடன்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

இல.110, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

### தொலைந்த பொருள் தொடர்பாக

01/06/2011 அன்று வவுனியாவில் இருந்து விசுவமடு வரும் பஸ்ஸில் செல்விலீலா இராமச்சந்திரன் ஆகிய எனது பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் உட்பட புத்தகங்கள், கோப்பிகள், புடைவைகள் அடங்கிய பெரிய உரப்பையில் கட்டிய பொதி ஒன்று அந்த பஸ்ஸில் தவறவிடப்பட்டுள்ளது.தவறுதலாக இதனை எடுத்துச் சென்றவர்கள் தயவுசெய்து என்னிடம் தந்துதவுங்கள்.எனது புத்தகங்களை மட்டுமாவது என்னிடம் சேர்த்து விடுங்கள் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகொள்ளும் முகவரி:
**செல்வி லீலா இராமச்சந்திரன்**
நெத்தலியாறு,பாண்டியன் ஒழுங்கை,விசுவமடு மேற்கு, முல்லைத்தீவு.
T. P.No.0778620416
(சி/969) (27-45)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் இராதாகிருஸ்ணன் (ராதா)



நகுலேஸ்வரா வீதி, கீரிமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் இராதாகிருஸ்ணன் நேற்று (19.06.2011) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் மாணிக்கம் தம்பதியரின் அன்புப்புதல்வரும் செல்வமலரின் (கிருபா) அன்புக் கணவரும், கோபி கிருஸ்ணன் (கோபி), பிரதீபா (தீபா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணேசலிங்கம், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் சிலோசனாதேவி (லண்டன்), விமலாதேவி, சற்குணலிங்கம் (குமார்)-வவுனியா லலிதாதேவி காலஞ்சென்ற தியாகலிங்கம் மற்றும் அருள்லிங்கம் (ரஞ்சன்-லண்டன்) ஆகியோரின் பாசமிகு உடன்பிறப்பும், விஜியசிங் (விஜியன் - லண்டன்), காலஞ்சென்ற நாகராஜா மற்றும் விக்னேஸ்வரன் (விக்கி), தங்கம்மா, யாமலா, தங்கா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.06.2011) செவ்வாய்க்கிழமை ந.ப. 12 மணியளவில் செம்பாடு, பெரியவிளான் இளவாலையில் அமைந்துள்ள அவரது வீட்டில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செம்பாடு,
பெரியவிளான்,
இளவாலை.

தகவல்: குடும்பத்தினர்.
(5028) சகோதரர்கள்- தேவன், குமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி.வடக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடியமர்த்தப்படவேண்டும் என்று மாவை சேனாதிராசா கேட்டுக் கொண்டார்.

எஞ்சிய பகுதிகளில் கண்ணி வெடிகள் அகற்றும் பணி இடம்பெறுகிறது. அந்தப் பணி பூர்த்தியடைந்ததும் மக்கள் குடியமர அனுமதிக்கப்படுவர் - என்றார் தளபதி. (ஒ-ஐ)

## மெனிக் பாமி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரபுரம் பகுதியில் நாளை மறுதினம் 346 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 106 பேர் மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர்.

தேவிபுரம் பகுதியில் 306 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 98 பேரும், கரைதுரைப்பற்று செம்மலை கிழக்கு பகுதியில் 27 குடும்பங்களைச் சேர்ந்த 91 பேரும் எதிர்வரும் 24 ஆம் திகதி மீள் குடியமர்த்தப்படவுள்ளனர்.

அத்துடன், வள்ளிபுனம் பகுதியில் எதிர்வரும் 27ஆம் திகதி 307 குடும்பங்களைச் சேர்ந்தா 894 பேரும் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இவ்வாறு மீள்குடியமர்த்தப்படவுள்ள மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள், தற்காலிக குடியிருப்புக்களை அமைப்பதற்கான கூரைள் மற்றும் 20 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்படவுள்ளன என்றும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார். (சி)

# ஐ.நா. சபைப் பொதுச் செயலாளராக நாளை பான் கீ-மூன் தெரிவாவார்

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளராக பான் கீ - மூன் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையில் நடைபெற்ற வாக்கெடுப்பில் பான் கீ - மூன் ஏகமனதாக ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதன்படி தென்கொரிய ராஜதந்திரியான பான் கீ - மூன் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளராக நீடிப்பார். 192 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐக்கிய நாடுகள் அமைப்பு நாளை செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வமாக பான் கீ - மூனை இரண்டாம் தவணைக்காகத் தெரிவுசெய்யவுள்ளது.

67 வயதான பான் கீ - மூனின் இரண்டாம் தவணைக்காலம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஆரம்பமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் தென் கொரியாவின் வெளிவிவகார அமைச்சரான பான் கீ - மூனை பொதுச் செயலாளராக ஏற்றுக்கொள்ள முடியாது என லத்தின் அமெரிக்க நாடுகள் எதிர்ப்பு வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொதுச் செயலாளர் பதவிக்காக வேறும் நாடுகள் வேட்பாளர்களை நியமிக்காத காரணத்தினால் பான் கீ - மூன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். (ஒ-சி)

## அளவெட்டித் தாக்குதலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் அதிகளவு தேர்தல் வன்முறைகளுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முகம் கொடுத்தது. இந்த வகையில் நாம் இந்தத் தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதுடன், தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தும்படி அரசை வலியுறுத்துகின்றோம். இது போன்ற சம்பவங்கள் சர்வதேச ரீதியில் மேலும் இலங்கை மீது அபகீர்த்தியை ஏற்படுத்தும்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தல்களின் போது அக்கரைப்பற்றில் எமது தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கலந்துகொண்ட கூட்டத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. சம்பந்தப்பட்டவர்களின் பெயர் விவரங்களை வழங்கிய போதும் அந்தத் தாக்குதல் சம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்படும் என உறுதியளிக்கப்பட்ட போதும் எதுவுமே நடக்கவில்லை - இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ஒ-சி)

## இலங்கை மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போர்க் குற்றங்கள் தொடர்பில் - ஐ.நா. நிபுணர் குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் பற்றி - ஓர் உள்ளகப் பொறிமுறையை உருவாக்காமல் அறிக்கையை எதிர்ப்பது ஐ.நாவுக்கு விடுக்கப்பட்ட சவாலாகவே அது கருதுகிறது. எனவே ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்டுள்ள விடயங்களை இலங்கை அரசு அமுல்படுத்துவதற்கான அழுத்தங்களை கொடுப்பதற்கு ஐ.நா. தீர்மானித்துள்ளது.

இதன் ஒரு கட்டமாக எதிர்வரும் செப்ரெம்பர் 12 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளின்போது இலங்கைக்கு எதிரான பொருளாதாரத் தடைவிதிக்கும் பிரேரணை நிறைவேற்றப்பட வாய்ப்புள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பிரேரணையை அமெரிக்காவே முன்வைக்கவுள்ளதாகவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஐ.நாவிடம் இருந்து வரும் இத்தகைய அச்சுறுத்தல்கள் எதிர்கொள்வதற்கு தேவையான ஆதரவைச் சர்வதேசத்திடமிருந்து பெறுவதற்கு இலங்கை அரசு தவறிவிட்டதாகவும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 9 நாடுகள் மாத்திரமே இலங்கைக்கு வெளிப்படையாக ஆதரவைத் தெரிவித்ததாகவும் மூத்த அமைச்சர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஜி.எஸ்.பி. வரிச்சலுகை நிறுத்தம், விலை வாசி உயர்வு, கட்டுநாயக்கா ஆர்ப்பாட்டத்தால் ஏற்பட்ட நெருக்கடி என தொடர்ந்து பொருளாதார ரீதியாகத் தாக்கமுற்றுள்ள இலங்கை அரசுக்கு, ஐ.நா. பொருளாதாரத் தடை விதிக்குமானால் அது பெரும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்று 'லக்பிம' பத்திரிகை தெரிவித்துள்ளது.

# 13 ஆவது திருத்தத்துக்கு அரசு.....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

வையெல்லாம் இனிமேலும் முன்வைக்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி திட்டவட்டமாகவும் மிகத் தெளிவாகவும் இந்தியக் குழுவிடம் தெரிவித்து விட்டார். புலிகள் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் தொங்கிக் கொண்டிருந்த இன்னொரு கேள்விக்கும் இதன் மூலம் ஜனாதிபதி பதில் அளித்திருந்தார். 13 ஆவது திருத்தமும் அதற்குமேலும் என்பதன் கருத்து இரண்டாவது சபை அல்லது செனட் சபை அமைப்பது தொடர் பாகவே கூறப்பட்டு வந்திருப்பதாக இப்போது தெரிய வந்துள்ளது. நாடாளுமன்ற தெரிவுக்குழுவென்பது புதிய தீர்வுப் பொதியொன்றை தீர்மானிக்கும் அதில் செனட் சபை இருக்கலாம் இல்லாமலும் போகலாம்.

இது தமிழ் தேசிய கூட்ட மைப்பை திரிசங்கு சுவர்க்கத் தில் நிறுத்தியுள்ளது. அரசுடன் தொடர்ந்தும் பேச்சுக்களை நடத்துவதின் புத்திசாலித்தனம் பற்றிய கேள்வியை இது எழுப்பியிருந்தாலும் அது பேச்சுக்களைத் தொடரவே விரும்புகின்றது. பேச்சுக்களைக் கைவிடுவதானது அரசியல் அநாதைகள் நிலைக்கு தள்ளி விடுவதாய் இருக்கும் அதன் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் இலக்கு வைக்கப்பட்டு விடுவார்கள்.

இலங்கைப் பிரச்சினையில் இந்திய மத்திய அரசும் தமிழ் நாடு மாநில அரசும் ஒரே வித நிலைப்பாட்டில் இருப்பது தெரிகின்றது. இது கொழும்பிலுள்ளவர்களுக்கு நல்ல செய்தியல்ல. இலங்கையில் புலிகளை தோற் கடிப்ப தற்கு முக்கிய ஆயுதங்களும், புலனாய்வுகளும், செயற்கை கோள் படங்களும் வழங்கி உதவியுள்ள நியையில் அவர்களின் கவலைகள் கவனிக்கப்படாமை அவர்களை ஏமாற்றமுறச் செய்துள்ளது.

''நாம் என்ன செய்யலாம் அவர் கள் நாம் சொல்வதை கேட்காமல் விடும்போது'' என்ற வாறு இந்திய பிரதமர் தமிழக முதல்வரிடம் கூறி கவலைப்பட்டதாகத் தெரிகின்றது.

### ஐ.தே.கட்சி தெரிவுக்குழுவில் பணியாற்றுமா?

இப்போது அரசுக்கு முன்னுள்ள முக்கிய கேள்வி என்னவென்றால் அரசு அமைக்கப் போகும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தெரிவுக்குழுவில் ஐ. தே.க. இணைந்து பணியாற்ற முன்வருமா என்பதே. எதுவானாலும் அரசமைப்பு 13 ஆவது திருத்தமானது ஜே. ஆர். ஜயவர்தன தலைமையிலான ஐ. தே. கட்சி ஆட்சியிலிருந்த போதே கொண்டுவரப்பட்ட ஒன்று. அந்தக்கட்சி தெரிவுக் குழுவில் பணியாற்ற முன்வரு மாணால் அதன் கருத்து 13 ஆவது திருத்தம் இனி மேற்கொண்டு அவசியமற்றது என்பதை ஏற்றுக்கொள்வதாகும். பணியாற்றாது விடுமாயின் தமிழ் மக்கள் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு 13 ஆவது திருத்தம் அவசியம் என்பதை அங்கீகரிப் பதாகும். இது சிறுபான்மை மக்களை பிரதி நிதித்துவம் செய்யும் கட்சிகளுக்கு மட்டுமல்ல சர்வதேச சமூகத்துக்கும் கவனத்துக்குரிய விடயமாகும்.

13 ஆவது திருத்தத்தை அமுல் படுத்துவது தொடர்பாக ஏற்கனவே பல்வேறு சமயங்களில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு மாறாக இப்போது அதனை அமுல்படுத்துவதில்லை என்ற அரசின் தீர்மானம் பல்வேறு பாரதூரமான பிரச் சினைகளை எழுப்பக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வாறானவாக் குறுதிகள் பல்வேறு பட்ட அதிகாரபூர்வ அறிவிப்புக்களில் இடம் பெற்றுள்ளன. அதில் ஒன்று 2009 ஆம் ஆண்டு மே 23 ஆம் திகதி ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ- மூன் இலங்கை வந்து ஜனாதிபதியுடன் பேச்சுக்கள் நடத்திவிட்டு திரும்புகையில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் பின்வரும் வாச கம் உண்டு. ''ஜனாதிபதி ராஜ பக்ஷ 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதில் தமக்குள்ள உறுதியான நிலைப்பாட்டை வெளியிட்டார்.'' என்பதே அந்த அறிவிப்பு.

### இலங்கையின் கொலைக்களம்

இலங்கைக்கு மிகுந்த தாக் கத்தை ஏற்படுத்துவதான பிரிட் டிஷ் சனல் - 4 வீடியோ காட்சிகள் கடந்த செவ்வாய்க் கிழமை ஒளிபரப்பப்பட்டன. சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இந்தக் காட்சியில் போரின் இறுதி கட்டத்தில் பெண்கள் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப் பட்ட சடலங்களும் காட்டப்பட்டன. ஐ.நா.விசேட அறிக்கை யாளர் கிறிஸ்டொப் ஹெயின்ஸ் இது பற்றி குறிப்பிடுகையில் இந்தக் காட்சிகள் நிச்சயமாக குற்றங்களுக்கான சாட்சியங்களைக் கொண்டிருக்கின்றன என்று கூறினார். இந்த வீடியோக், காட்சிகள் போலியானவை. இந்தக் காட்சிகளுக்கான வீடியோக்க ளின் சனல் - 4 இனால் ஸ்ரீ லங்கா அரசுக்கு வழங்கப்படாமையே சந்தேகத்தை எழுப்புவதாக இருக்கிறது என்று இலங்கை தரப் பில் கூறப்பட்டுள்ளது.

இந்த வீடியோக் காட்சிகள் ஒளிபரப்பப்பட்டதின் பின்னர் தென் ஆசியாவுக்கான பிரிட்டிஷ் வெளி உறவு அமைச் சர் கருத்து வெளியிடுகையில், அண்மையில் ஐ.நா. நிபுணர் குழுவெளியிட்ட அறிக்கை, இந்த வீடியோ ஆவணங்கள், ஏற்கனவே சனல் - 4 வெளியிட்ட காணொளி படங்கள் யாவும் சர்வதேச மனிதாபிமான, மனித உரிமை மீறல்[illegible] ஆதாரங்க ளாகும். [illegible] ளுக்கு முழு அளவில் பதில் தந்தாகவேண்டும் என்று முழு சர்வதேச சமூகமும் எதிர்பார்க்கின்றது. மோதல்கள் முடிவுற்றதிலிருந்தே முழுமையான சுதந்திர மான, நம்பகமான புலனாய்வுகள் செய்யப்பட வேண்டும் என்று பிரிட்டன் கோரிவந்திருக்கிறது. இந்த வருட முடிவுக்குள் இதில் முன்னேற்றத்தை எதிர்பார்க்கின்றோம் இந்தச் செய்தியை இலங்கைக்கு நான் ஜூன் 14 ஆம் திகதியும் மீண்டும் நினைவு படுத்தினேன். இலங்கை அரசு பதில் அளிக்காவிட்டால் இது குறித்த பொறுப்புக்களை நிறை வேற்றும்படியாக இலங்கை அரசை சகல வித வாய்ப்புக்களையும் பயன்படுத்தி அழுத்தம் கொடுக்கும்படி சர்வதேச சமூகத்தைக் கோருவோம் - அதற்கு ஆதரவளிப்போம். இதைச் செய்யாவிட்டால் இலங்கை நகர முடியாது, இலங்கை அரசுக்கும் சமூகங்களுக்குமிடையிலான இணக்கப்பாட்டுக்கான வாய்ப்புகள் தடைப்பட்டு விடும். இவ்வாறு நடவாமல் இருப்பது முக்கியமாகும் என்று கூறினார்.

இந்த வருடம் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் முன் னேற்றம் ஏற்படவேண்டும் என்று பிரிட்டன் காலக்கெடு விதித்துள்ளது.

இவைகளில் இருந்து இலங்கை தனது நட்பு நாடுகளிடமிருந்து ஒன்றின் பின் ஒன்றாக விலகிக் கொண்டு வருகின்றது என்பது வெளிப்படை. (ப)

**வாடகைக்கு**

யாழ்ப்பாணம் கோயில் வீதியில் A/C வசதிகளுடன் அலுவலக பாவனைக்குகந்த இடம் வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
SUN Guest house and holiday in.
0779361427

**மலிவு...மலிவு...!!**

மிகக் குறைந்த விலையில் குளிரூட்டிகள், சலவை இயந்திரங்கள் உடன் விற்பனைக்குண்டு.
ஜெயம் எலக்ரோனிக்ஸ் 339, K.K.S வீதி,
மனோகராச்சந்தி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 0771727241, 0774041910

**மல்ரி மீடியா கிராபிக்ஸ் & அனிமேஷன் பயிற்சிகள்**



நேரடி 80 % கட்டணக்கழிவில்
அனைவரும் கற்கக்கூடிய கட்டணத்தில்
ரூபா 2800/= இருந்து

Master Diploma in Multimedia and Animation
Master Diploma in Digital Animation
Dip. in Video Producation and Multimedia
Diploma in 2D & 3D Animation
Diploma in 3D Modeling & Graphice
Diploma in Print Media

இந்தியாவில் மல்ரிமீடியா & அனிமேஷன் துறையில் பெரும்பங்காற்றும் பயிற்சிமையத்தின் சான்றிதழ்கள்.(ISO 9001:2000 Certified Institution)
- இந்திய தேர்ச்சிமிக்க தொழில்சார் விரிவுரையாளர்கள்
- மல்ரிமீடியா துறையில் சுயதொழில், வேலைவாய்ப்பை எதிர்ப்போர்க்கு துறைசார் வல்லுணர்களால் ஆலோசனைகள்.
- தமிழ்மொழி மூலமான இலகுவான கற்பித்தல்- பாடப்புத்தகங்கள்

DMI COMPUTER EDUCATION
No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, நெல்லியடி. Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி. HNB அருகில் சாவகச்சேரி. Tel.:021-227 0243

CHICO CHICKEN
NEW ANTHONEY'S FARMS (pvt) LTD
* Full Chicken * Hotel Chicken
* Half Chicken * Chico Chicken Cubes 400g
* Skinless * Chico Chicken Cubes 700g
Deep freezer will be Supplied
All Parts
S.T.S CHICO DISTRIBUTOR
0759575703
ISO 22000
HACCP SYSTEM CERTIFIED
Halaal - Sri Lanka
MGMT. SYS. RvA C 155

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்பள்ளி இடமாற்றம்

பாலர் கல்விக் கழக நிர்வாகத்தின் கீழ் இலக்கம் 12, சீனியர் ஒழுங்கையில் இயங்கி வந்த ஞானக்குழந்தைகள் முன்பள்ளி பாலர் பாடசாலை இன்று முதல் பிறவுண் வீதியிலுள்ள சி.ரி.சி. கல்வி நிறுவனத்தில் இயங்குமென பாடசாலையின் பொறுப்பாசிரியை செல்வி. க. அகல்யா அறிவித்துள்ளார். (ம-313)

## சரத் பொன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் ஜயந்த கொட்டகொட தெரிவித்துள்ளார்.

அவர் இதுகுறித்து மேலும் கூறியவை வருமாறு-

தூசியுடனான வாயு பொன்சேகாவின் நுரையீரலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் வைத்தியர்கள் மேற்படி அறிவுறுத்தலை விடுத்துள்ளனர்.

கடந்த 2006ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்த தற்கொலை குண்டுத் தாக்குதலில் பொன்சேகாவின் நுரையீரல் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கிருமிகள், பக்ரீறியா இல்லாத தூய்மையான அறையில் பொன்சேகாவை தங்கவைக்குமாறு மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். - இப்படி அவர் கூறியுள்ளார்.

## சனல் 4 வீடியோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தெரிவித்தார்.

எஹெலியகொட - விலேகொட பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதற்கு முன்னரும் இலங்கையில் இடம்பெற்றவை எனத் தெரிவிக்கப்படும் போர்க்குற்றங்கள் குறித்த காணொளிகள் சனல் 4 தொலைக்காட்சியால் வெளியிடப்பட்டிருந்தன என்றும் ரணில் தெரிவித்துள்ளார்.

நாட்டிற்கு எதிராகப் பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள் அரசுகளை விட பொதுமக்கள் மீதே தாக்கம் செலுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதனால் நாட்டுக்கும், பொது மக்களுக்கும் ஏற்படும் பாதிப்புகளை குறைத்துக் கொள்வதற்கு அரசு முனைப்பு காட்ட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனினும், அரசு குறித்த நெருக்கடி சம்பந்தமாக எந்தவித தீர்வையோ, அதற்கான வேலைத்திட்டத்தையோ முன்வைக்கவில்லை என்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். (ஐ-சி)

## ஜனாதிபதி அமெரிக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரி வாஷிங்டன் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இந்த மூன்று வழக்குகள் தொடர்பாக வாஷிங்டன் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது.

அலரி மாளிகைக்கு இந்த அழைப்பாணை அனுப்பப்பட்டபோது அங்கு அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பின்னர் நீதி அமைச்சு இந்த அழைப்பாணையை ஏற்றுக்கொண்டது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செப்டெம்பர் மாதம் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள அமெரிக்கா செல்லவுள்ள நிலையில் அழைப்பாணை அனுப்பப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-சி)

## 500 முன்னாள் போராளிகள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டிருந்தவர்கள். சிலர் அங்கவீனமானவர்கள், பலர் குடும்பப் பிரச்சினைகளைக் கொண்டுள்ளவர்கள்.

இவர்கள் அனைவருக்கும் புனர்வாழ்வு பணியகத்தினால் அவசியமான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது புனர்வாழ்வு முகாம்களிலுள்ள முன்னாள் போராளிகள் மேசன், கைவினைப் பொருள்கள் தயாரிப்பு, பெயின்ரிங் போன்றவற்றில் இறுதிச் சோதனை நடைமுறைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களின் திறமையையும் கல்வியறிவையும் விருத்தி செய்வதற்காக தொழிற்பயிற்சி, மொழி, தொடர்பாடல் பயிற்சி என்பன வழங்கப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் முன்னாள் போராளிகளுக்காக 24 புனர்வாழ்வு நிலையங்கள் இருந்தபோதிலும் தற்போது 9 நிலையங்கள் மாத்திரமே இருக்கின்றன.

சரணடைந்த 1,1700 போராளிகளில் 7200 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். 4500 பேர் புனர்வாழ்வு முகாம்களில் உள்ளனர். - இப்படி அவர் தெரிவித்தார்.

## தெரிவுக்குழு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தெரிவுக்குழு ஒன்றை அமைக்கும் அரசின் யோசனையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முற்றாக நிராகரித்துவிட்டமை தெரிந்ததே.

இதேவேளை, அரசு - கூட்டமைப்புப் பேச்சுக்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி இடம்பெறவுள்ளன.

இந்தப் பேச்சுக்களில் இனப்பிரச்சினைத் தீர்வாக 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தைத் தாம் முன்வைப்போம் என்றும் அரசுத் தரப்பு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைப்பது பிரச்சினையை இழுத்தடிக்கும் செயல் என ஐ.தே.கட்சி உட்பட பல முக்கிய கட்சிகள் கருத்துத் தெரிவித்திருந்தன.

ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பாக இந்த வாரம் கூடி ஆராயும் எனத் தெரிவித்த அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் ஹசன் அலி தனிப்பட்ட ரீதியில் தாம் அதை எதிர்ப்பதாகவும் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார். (ஒ-ஐ-சி)

பொருளியற் கல்லூரி நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ENGLISH
கடந்தகால க.பொ.த. (உ/த) பரீட்சை பத்திர மீட்டல் பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன. உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
ஆசிரியர் S.JAISAN
நேரம் திங்கள் 4-5 வெள்ளி

மணமகள் தேவை
யாழ் இந்து கௌரவகுடும்பம் 1973 ஆம் ஆண்டு நட்சத்திரம் பூராடம் 8 இல் செவ்வாய் லண்டனில் PR உள்ள மணமகனுக்கு மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: 0774080786

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
L Linux Joomla RoR Ruby
A Apache
M MySQL
P PHP
MIS
Call me: 0776577359
கணினிக் கல்வியில் தொடர்ச்சியான 10 வருட அனுபவம்.
100% Practical / Concepts
By Mr R.Kumaran-B.Sc. (Computing & IS)

சானியா கேபல் கெயர்
இல 262, நாயன்மார்கட்டு ஆயுர்வேத வைத்தியசாலை, செம்மணி வீதி, யாழ்ப்பாணம்.
நிழல் அல்ல நிஜம்!!
* ஒரே வாரத்தில்:



[கழுத்து கருமை, கன்கரு வளையம், கன்னத்தில் வரும் கருமை சிகிச்சைகள் இலவசம்]
[முக உரோமம் அகற்றல், புருவம் சீரமைத்தல் இலவசம்]
வழுக்கைத் தலைகளிற்கும் சிகிச்சை மேற்கொள்ளப்படும்.
கைத்தசைகள், இடுப்புத் தசைகள் மற்றும் உடலின் தேவையற்ற தசைகளைப் போக்கி உடலை அழகாக்கல். முதுமைத் தோற்றத்தைப் போக்கி முக, உடல் அழகை இளமைப் பொலிவுறச் செய்யும் சிகிச்சைகள்.
"WECARE ALWAYS"
உத்தரவாதமளிக்கப்பட்ட பக்கவிளைவுகளற்ற ஆயுர்வேத சிகிச்சைகள்.
பதிவுகளை முற் கூட்டியே தெரிவிக்க அழையுங்கள். 0774011129, 0777351954.

படிவங்கள் விற்பனையாகின்றன
இலங்கை வங்கி
1) (B.O.C) எழுதுவினைஞர்களுக்கான விண்ணப்பம்.
2) மத்திய வங்கி உதவிப் பாதுகாப்பு அலுவலர்.
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

தேவை
யாழ் நகரில் இயங்கும் Internet Cafe, Communication ஒன்றுக்கு பெண் பிள்ளைகள் வேலைக்கு தேவை. முன் அனுபவம் விரும்பத்தக்கது. (பழக விரும்புபவர்களும்) தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்.
0772833601, 0217451825

## மரண அறிவித்தல்

### திருமதி சிந்தாமணி தம்பாப்பிள்ளை



சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிந்தாமணி தம்பாப்பிள்ளை கடந்த (18.06.2011) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஓய்வுபெற்ற தபால் ஊழியர் தம்பாப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கதிரேசு-சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மகளும் மற்றும் காலஞ்சென்ற நாகநாதி சிதம்பரத்தின் (அச்சுவேலி) அன்பு மருமகளும் கலா, கௌசலா, சிவபாலன், விமலா, சுதாகரன், றயுகரன் ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயரட்ணம், குணராசா, சாந்தினி மோகனராசா, கவிதா, நளாயினி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், மாணிக்கம், இரத்தினம், துரைசிங்கம் மற்றும் அன்னபாக்கியம், சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும் இராசம்மா, ஆச்சிப்பிள்ளை, இளையதம்பி, றோசா, மகேஸ்வரி, இராஜேஸ்வரி, பொன்னம்பலம் மற்றும் பாலாமணி, தனேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் செந்தூரன், சாருகன், டயானா, லாவண்யா, லவீனா, சுவீட்சன், மிதுசன், அபிஸா, சுமங்கல்யா, சுகாஸ், டிலானி, மகிஸா, டினுயன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (20.06.2011) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுன்னாகம். (5032) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி புனிதவதி திருஞானசம்மந்தர்

மீசாலை மேற்கு, மீசாலையைச் சேர்ந்த திருமதி புனிதவதி திருஞானசம்மந்தர் நேற்று (19.06.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் திருஞானசம்மந்தரின் (முன்னாள் உத்தியோகத்தர், சாவகச்சேரி நகரசபை, ) அன்பு மனைவியும் அனுசா, வனஜா ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (சி/972)

தகவல்:
மீசாலை மேற்கு, மீசாலை. திருஞானசம்மந்தர் (கணவர்).

TILKO JAFFNA CITY HOTEL S(PVT) LTD (BOI APPROVED)
மேற்படி நிறுவனத்துக்கு பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.
★ Food and Beverage Manager ★ Waiters ★ General Cleaners/helpers
தகுதியானவர்கள் தங்கள் விண்ணப்பங்களை பின்வரும் விலாசத்துக்கு பதிவுத் தபால்மூலம் அல்லது E.mail விலாசத்துக்கு வரும் 30.06.2011 இற்கு முன் அனுப்பிவைக்கவும்.
TILKO JAFFNA CITY HOTEL (PVT) LTD
70/6, K.K.S. Road, Jaffna.
E.mail address: citystarkb@gmail.com

Quick Learning Course
Spoken English with Grammar
Duration 1 Month
Rs. 3000.00
உரையாடட் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது
O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
04-07-2011
Batch A : 09.00 AM - 01.00 PM
Batch B : 01.30 PM - 05.30 PM
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935
BCHS
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், முற்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் உங்களுக்கு ஏற்ற நேர அட்டவணையை தெரிவுசெய்து வீண் விரயத்தைத் தவிர்கவும்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்[illegible]யில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org